அன்று அவள் அறையை விட்டு நீங்கிய உபாத்தியாயன் ஒரு வார காலம் அவளைப் பார்க்கவில்லை; 'திரும்பத் திரும்ப அவளைப் பார்த்து அவள் துக்கத்தைக் கிளறுவதால் லாபமில்லையென்ற உத்தேசத்தால் மற்ற உத்தியோகக் காரியங்களிலேயே ஈடுபட்டிருந்தான். ஆனால், அவன் பொறுமையும் ஒரு வாரத்திற்கு மேல் தாளவில்லை! அதனால் அவளை நாடிச் சென்றான். அறைக்குள் அஜித் சந்திரன் நுழைந்த சமயத்தில் சித்ராதேவி மஞ்சத்தில் ஒருக்களித்துப் படுத்திருந்தாள். அவள் முதுகுப்புறம் வாசற் பக்கமாக இருந்ததால் உள்ளே நுழைந்த உபாத்தியாயனை அவள் கவனிக்கவில்லை. உபாத்தியாயன் வாயிற்படியிலிருந்தே அவள் உடல் வளைவுகளைச் சற்று நேரம் பார்த்து மலைத்தான். பின்னர் மெள்ள மஞ்சத்தை அணுகி அவள் அழகிய கன்னத்தில் கையை வைத்தான். அந்தக் கர ஸ்பர்ஸம் அவளுக்குப் புதிதல்லவாகையால் அவள் துள்ளி எழுந்திருக்கவில்லை. மெள்ளத் திரும்பி உபாத்தியாயனை நோக்கினாள். ஒருக்களித்த நிலையிலேயே பாதி திரும்பியதால் தாமரைத் தண்டுபோல் துவண்டு முறுக்கி நின்ற அவள் உடலின் எழுச்சியான பாகங்கள் அதிக உறுதியும் கவர்ச்சியும் காட்டி உபாத்தியாயனை மயக்கத் தொடங்கின. அந்த மோன நிலையில் சோகமும் தீட்சண்யமும் கலந்த பார்வையை உபாத்தியாயன்மீது திருப்பினாள் சித்ரா தேவி.

அவளை அனுதாபத்துடன் பார்த்த உபாத்தியாயன், "சித்ரா! யுத்தத்தில் வீரர்கள் இறப்பது சகஜம். வீர ஸ்திரீயான உன்னிடம் இதைச் சொல்லத் தேவையில்லை. தகப்பனை இழந்து நிற்கும் நிலையில் நான் எத்தகைய தத்துவம் பேசுவதும் நியாயமல்ல. இருந்தாலும் யோசித்துப் பார். நடந்துவிட்ட காரியத்துக்கு நாம் என்ன செய்யலாம்?" என்றான்.

"யுத்த களத்தில் மாண்டிருந்தால் வருந்தமாட்டேன் உபாத்தியாயரே; ஆனால் கேவலம் தூக்கிலா தோரமானா அவரைத் தொங்கவிட வேண்டும். கத்தியால் வெட்டியிருக்கலாம். இல்லையேல் வில்லவரை அம்பு எய்யச் செய்து கொன்றிருக்கலாம். இந்த மாதிரி ஒரு குரூர மரணத்தை அளிப்பானேன்?" என்று கேட்டாள் சித்ரா.

"எதிரிகளை நடுங்க வைக்க ஹூணர்கள் கையாளும் முறை இதுவென்று உனக்குத் தெரியாதா சித்ரா? அதைத்தான் தோரமானாவும் செய்திருக்கிறான். மலைவாசலை நடுங்க வைத்த அடிலனையே தோரமானா தூக்கிலிட்டான் என்றால் மற்ற ஹூணப் பிரபுக்கள் நடுங்குவார்கள். சதி எதுவும் ஏற்பட வழி இருக்காது. தவிர, குப்த ராஜ்யத்தின் உதவி கொண்டு தோரமானாவை எதிர்க்க இனி எந்த ஹூணப் பிரபுவும் முன்வரமாட்டான். அடிலனையே காக்க முடியாத ஸ்கந்தகுப்தன் மற்றவர்களை எங்குக் காப்பாற்றப் போகிறான் என்ற கிலியை ஹூணர்களிடம் கிளப்பிவிடவும் தோரமானா இந்த வேலையைச் செய்திருக்கலாம்" என்றான் உபாத்தியாயன்.

"உபாத்தியாயரே! அந்தத் தோரமானாவை அழிக்காமல் நான் தூங்கமாட்டேன். என் தகப்பனைப்போல் அவனும் தூக்கிலாடினால்தான் எனக்கு மனநிம்மதி ஏற்படும். இன்று முதல் அவனை ஒழிக்கும் வேலையிலேயே என் வாழ்க்கையைச் செலவிடப் போகிறேன்" என்று பேசிய சித்ரா ஆவேசத்தால் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

உபாத்தியாயன் அவள் அருகே உட்கார்ந்து அவளை ஒரு கையால் அணைத்துக்கொண்டு நெற்றியில் அலை அலையாய்ப் பறந்து கொண்டிருந்த கேசங்களை இன்னொரு கையால் விலக்கினான். "சித்ரா! பகலில் பக்கம் பார்த்துப் பேச வேண்டும். தோரமானாவைச் சமாளிக்கும் பொறுப்பை

என்னிடம் விட்டுவிடு" என்று ஆறுதலாகச் சொன்னான் உபாத்தியாயன்.

"உங்களிடமா! தோரமானாவின் உபசேனாதிபதியான உங்களிடமா இந்தப் பணியை விடுவது?" என்று வினவினாள் சித்ரா.

"சந்தேகமென்ன சித்ரா! நான்தான் குப்த ராஜ்யத்தின் உளவாளியெனத் தீர்ப்பாகிவிட்டதே. இல்லாவிட்டால் குப்த ராஜ்ய எல்லையிலிருந்து மலைவாசலுக்கு என்னை விரட்ட முற்படுவானா தோரமானா? குப்த ராஜ்ய நலனை நாடும் நான், குப்தப் படைகளை நடத்தியதால் உயிரிழந்த அடிலன் மரணத்துக்குப் பழி வாங்குவது பொருத்தமல்லவா?" என்று உபாத்தியாயன் கேட்டான். சித்ராதேவி அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள். பார்த்ததும் அவள் முகத்தில் புன்முறுவல் ஒன்றும் தோன்றியது. அவன் முகத்திலிருந்த பழைய சாட்டையடித் தழும்பில் அவள் கண்கள் நிலைத்து நின்றன.

தோரமானாவையே ஊடுருவிப் பார்க்கவல்ல உபாத்தியாயனுக்கு சித்ராதேவியின் எண்ணத்தை அலசுவதா பிரமாதம்! அவள் யோசனையை விநாடியில் புரிந்து கொண்ட உபாத்தியாயன், "உன் தகப்பனார் கொடுத்த சாட்டையடிப் பிரசாதத்தைப் பார்க்கிறாயா சித்ரா? அது என் சொந்த விவகாரம். ஆனால் குப்த ராஜ்ய சேவையில் நாங்களிருவரும் ஒன்றுபட்ட பின்பு பழைய பகைக்கு இடமில்லை. தேச சேவை முன்னிலையில் நிற்கும்போது சொந்தச் சச்சரவுகளை மறந்துவிடுவது அவசியம். அதையும் தவிர உன் தகப்பனார் இறந்துவிட்டார். விரோதம் மரணத்தின் வரையில்தான்—வால்மீகி முனிவர் சொல்லியிருக்கிறாரே, நினைவில்லையா?" என்றான்.

சித்ராதேவியின் முகத்தில் பரிகாசக் குறி தோன்றியது. "ஏது வால்மீகி என்று ஆரம்பித்து விட்டீர்கள். மறுபடியும்

பழையபடி பாடம் சொல்லிக் கொடுக்க யோசனையா?" என்று மகிழ்ச்சியுடன் கேட்டாள்.

"பழைய பாடம் அல்ல, சித்ரா! புதுப்பாடம் சொல்லிக் கொடுக்கிறேன்" என்று அவள் இதழ்களுக்கருகே நெருங்கினான் உபாத்தியாயன். பாதி மூடிய கண்களால் உபாத்தியாயனைப் பார்த்தாள் சித்ராதேவி. உபாத்தியாயனும் சுயநிலை மறந்தான்.

அவர்களைப் பிரிக்கவோ என்னவோ அந்த சமயத்தில் விர்ரென்று அம்பு ஒன்று அறையில் பாய்ந்தது. சித்ராவின் பிணைப்பிலிருந்து சரேலெனத் துள்ளியெழுந்த அஜித் சந்திரன் அந்த அம்பை எடுத்தான். அதன் இறக்கையில் கட்டப்பட்டிருந்தது ஒரு கடிதம். அம்பிலிருந்து அதைப் பிரித்தெடுத்த உபாத்தியாயன் கடிதத்தை அவசர அவசரமாகப் படிக்கத் தொடங்கினான். சித்ராவும் அவனை ஒன்றி நின்று கடிதத்தைப் பார்த்தாள். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

"அன்புள்ள சித்ரா!

இன்றிரவு நன்றாக இருட்டியதும் சண்பகத் தோட்டத்துக்குத் தனியாக வந்து சேர். எப்படியாவது காவலாளிகளை ஏமாற்றிவிடு. உன் தம்பியைப் பற்றி முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறேன்.

— ராகுலன்."

கடிதத்தைப் படித்த சித்ராவும் உபாத்தியாயனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். சிறிது யோசனைக்குப் பிறகு, "என்ன செய்வதாக உத்தேசம்?" என்று உபாத்தியாயன் சித்ராவைக் கேட்டான்.

40. சண்பகத் தோட்டத்திலே...!

உபாத்தியாயன் கேட்ட கேள்வி சித்ராதேவிக்கு ஆச்சரியத்தையே விளைவித்தது. 'எந்தத் தம்பியின் நலனுக்காக இத்தனை நாளும் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்தேனோ அந்தத் தம்பியைப் பற்றிய தகவல் கிடைக்க சந்தர்ப்பத்தை நான் எப்படி உபயோகப் படுத்திக் கொள்ளாமல் இருக்க முடியும்? இதில் உபாத்தியாயருக்கு என்ன சந்தேகம் ஏற்பட்டு விட்டது?" என்று நினைத்தாள்.

அவள் எண்ணப் பிரவாகத்தைத் தெளிவாகத் தெரிந்து கொண்ட உபாத்தியாயன் சற்றுநேரம் தீவிர சிந்தனையில் இறங்கினான். பிறகு அம்பை வெகுநேரம் திருப்பித் திருப்பி உற்றுப் பார்த்தான். அடுத்தபடி அம்பு வந்த சாளரத்துக்காகச் சென்று வெளியே தொலைதூரம் கண்களைச் செலுத்தினான். அவன் செய்கைகள் சித்ராவுக்கு மேன்மேலும் ஆச்சரியத்தைக் கொடுத்தன. "என்ன ஆராய்ச்சி செய்கிறீர்கள் உபாத்தியாயரே? அம்பை எய்தவனைக் கண்டுபிடிக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

உபாத்தியாயன் இதழ்களில் லேசாகப் புன்முறுவல் தோன்றினாலும் அடுத்த விநாடி அது மறைந்து முகத்தில் மீண்டும் தீவிர யோசனை படர்ந்தது. அதிக யோசனைக்குப் பிறகு உபாத்தியாயன் பேசினான்:

"எய்தவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை சித்ரா. அவன் யாரென்று எனக்குத் தெரியும். ஆனால் 'அம்பு எய்தவன் யார்?' என்றுதான் தெரிந்துகொள்ளப் பார்க்கிறேன்" என்றான் உபாத்தியாயன்.

உபாத்தியாயனுடைய சொற்களின் ஆழத்தைச் சித்ராதேவி சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. ஒருவேளை அம்பில் கட்டப்பட்டிருந்த கடிதத்தில் கண்ட கையெழுத்தைப் பற்றி உபாத்தியாயன் சந்தேகப்படுகிறானோ என்னவோ என்ற யோசனையில் அந்த சந்தேகத்தை விலக்க முற்பட்டாள். "அம்பு எய்தது யார் என்பதுதான் கடிதத்தில் வெட்ட வெளிச்சமாயிருக்குமென்று சந்தேகப்படுகிறீர்களா? சந்தேகம் வேண்டாம். கையெழுத்து எனக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாப்பிள்ளையின் கையெழுத்துதான்" என்று சித்ராதேவி விளக்கினாள்.

இந்த விளக்கத்தால் உபாத்தியாயன் சந்தேகம் விலகியதாகத் தெரியவில்லை. ஏதோ யோசித்துவிட்டுக் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தவனாய், "அது கிடக்கட்டும் சித்ரா! நான் கேட்ட கேள்விக்கு நீ பதில் சொல்லவில்லையே?" என்று வினவினான்.

"நான் என்ன பதில் சொல்லக் கிடக்கிறது? நான் உங்கள் கைதி. உங்கள் அனுமதி கிடைத்தால்தான் இந்த அறையை விட்டு வெளியே நகரமுடியும்" என்றாள் சித்ராதேவி.

"அப்படியானால் சண்பகத் தோட்டத்துக்குப் போவதென்று தீர்மானித்து விட்டாயா?" என்று உபாத்தியாயன் மறுபடியும் கேட்டான்.

"வேறெந்த தீர்மானத்துக்கு வரமுடியும் உபாத்தியாயரே! என் தகப்பனாரின் ஜன்ம வைரியிடம் தம்பி சிக்கியிருக்கிறான். அவனைப் பற்றிய முக்கிய செய்தி வந்திருக்கும் போது நான் சண்பகத் தோட்டத்துக்குப் போகாமலிருக்க முடியுமா?" என்று பதிலுக்குத் திருப்பிக் கேட்டாள் சித்ராதேவி.

"கடிதத்தில் கண்டபடி தனியாகவா போகப் போகிறாய்?"

"உபாத்தியாயர் அனுமதித்தால்தான்."

உபாத்தியாயன் மறுபடி சற்றுச் சிந்தித்துவிட்டு அவளுக்கு வெகுஅருகில் வந்து, "என் அனுமதி கிடைப்பதில் தடையேதுமிருக்காதென்பது உனக்குத் தெரிந்த விஷயந் தானே சித்ரா. வாழ்க்கையில் நீ விரும்பிய எதை நான் மறுத்தேன். மாளிகைத் தோட்டத்திலே உன் தம்பியோடு போராடுவதைக் கைவிட்டுச் செல்லவில்லையா? விவசாயி யின் வீட்டில் ராகுலனை மட்டும் கைது செய்து உன் தம்பியை சுதந்திரமாக விட்டுப் போகவில்லையா? உன் கோரிக்கையை நிறைவேற்ற இந்த உலகம் முழுவதையும் சுற்றுவதானாலும் நான் தயங்கமாட்டேன் இதெல்லாம் உனக்குத் தெரியாதா? ஆனால், இப்பொழுதிருக்கும் நிலையில் இராக்காலத்தில் சண்பகத் தோட்டத்துக்கு நீ தனியாகச் செல்வது உசிதமா என்றுதான் யோசிக்கிறேன்" என்று உபாத்தியாயன் கூறினான்.

அவன் வார்த்தைகளை சித்ராதேவி மீண்டும் தவறாகவே அர்த்தம் செய்துகொண்டாள். ராகுலனிடம் தான் தனியாகப் போவதால் தனக்கு ஏதாவது நேரிட்டு விடுமோ என உபாத்தியாயன் அஞ்சுவதாக நினைத்தாள்! அந்த நினைப்பின் விளைவாக அவள் முகத்தில் படர்ந்த புன்முறுவலில் வெட்கத்தின் சாயையும் கலந்துகொண்டது. அந்த வெட்கத்தால் அவனுடன் இன்னும் அதிகமாக ஒன்றி னாள். அவள் வார்த்தைகள் மிருதுவாக வெளிவந்தன. "உபாத்தியாயரே! ராகுலனுக்கும் எனக்கும் ஏற்பட்ட பந்தங்கள் என் தகப்பனாராலும் தம்பியாலும் ஏற்பட்டவை. அவை என்னைப் பிணைக்க முடியுமா? என் உள்ளத்தில் இயற்கை சிருஷ்டித்த பாசத்துக்கு மட்டுமே நான் அடிமை. அந்தப் பாசம் யாரிடத்திலென்பதை அறிவாளியான புருஷனுக்குச் சொல்ல வேண்டியதில்லை..." என்றாள்.

அவள் சொல்ல வேண்டிய அவசியமும் அந்த சமயம் இல்லை. உபாத்தியாயன் கரத்தில் இழைந்த பூங்கரமொன்று சகல செய்திகளையும் சொல்லித் தீர்த்தது. ஆனால் உபாத்தி யாயன் அந்த சமயத்தில் சித்ரா செய்த கற்பனைக் கோட்டை யைப் பற்றிச் சிந்திக்கவில்லை. இருந்த போதிலும் விரல் களோடு விரல் பின்ன தன் கரத்தில் இழைந்த பூங்கரம் எழுப்பிய இன்பச் செய்திகளை அனுபவித்து மெய்மறந்து நின்றான். அவனுடைய இன்னொரு கை அவளுக்கு ஆதரவு கொடுப்பதற்கு அறிகுறியாக அவளை இறுக அணைத்தது. அந்த நிலையிலே அவளை நோக்கிய உபாத்தியாயன், "சித்ரா! உன் அன்பைப் பற்றி எள்ளளவும் எனக்குச் சந்தேக மில்லை! ஆனால்? இந்த அம்பு விஷயமாக எனக்குப் பலமான சந்தேகமிருக்கிறது. ஆகையால் நீ தனிமையில் சண்பகத் தோட்டத்துக்குப் போவது உசிதமா என்று சந்தேகிக்கிறேன். அம்பு எய்தவனால் ஏற்படக்கூடிய ஆபத்து ஒருபுறமிருக்கட்டும். மலைவாசல் நிலையையும் யோசித்துப் பார். உன் தகப்பனார் இறந்ததைப் பற்றி வில்லவர் நடத்தி வரும் கொண்டாட்டம் இன்னும் ஓயவில்லை. அடிலனால் பலவிதமாக அவதியுற்றிருக்கும் வில்லவர் கண்களில் நீ பட்டுவிட்டால் அடிலன் மகள் என்ற முறையில் உன்னை என்ன செய்வார்களோ சொல்ல முடியாது. உனக்குத் தோர மானா அளித்த சிறைவாசம் உனக்கு அவன் செய்த பெரிய உபகாரம் என்பதில் சந்தேகம் வேண்டாம். இத்தகைய பாதுகாப்பிலிருந்து நீ வெளியே சென்றால் ஏற்படும் விளைவுகளுக்கு யார் பொறுப்பாளி?" என்றான்.

"இருட்டிய பின்புதானே போகப் போகிறேன். யார் பார்க்கப் போகிறார்கள்? அதுவும் சண்பகத் தோட்டம் வில்லவர் வீடுகளுக்கு எவ்வளவோ தூரத்திலிருக்கிறது."

"அது முன்பு. இப்பொழுது இடையே கட்டடங்கள் இருக்கின்றன."

"அவற்றிலிருப்பவர்கள் ஹூண வீரர்கள்தானே!"

"சிலர் ஹூணர்கள், சிலர் வில்லவர்கள்."

இதைக் கேட்ட சித்ரா சற்று யோசித்தாள். ஆனால் அஞ்சா நெஞ்சம் படைத்த அந்த ஹூண மகளுக்கு இது ஒரு பெரிய தடையாகத் தோன்றவில்லை. "எப்படியிருந் தாலும் நான் சண்பகத் தோட்டத்துக்குப் போய்த்தானாக வேண்டும் உபாத்தியாயரே" என்றாள் முடிவாக.

"நான் உன்னைத் தொடர்ந்து வரலாமா?" என்று அஜித் சந்திரன் கேட்டான்.

"கடிதத்தில் கண்ட நிபந்தனைக்கு அது முரண்பாடு" என்றாள் சித்ரா.

உபாத்தியாயன் சிரித்தான். "திருட்டுத்தனமாக அம்பில் கட்டி எறியப்பட்ட கடிதத்தின் நிபந்தனைகளுக்கு நாம் உட்பட வேண்டுமா?" என்று கேட்டான்.

"கடிதத்தை எழுதிய மனிதனுக்குச் சந்தேகம் வந்தால் தம்பியைப் பற்றிய தகவலைச் சொல்லமாட்டானே" என்று விளக்கினாள் சித்ரா.

அந்த விளக்கம் அஜித் சந்திரனுக்கு தேவையே இல்லை! "சரி உன்னிஷ்டம் சித்ரா! தனிமையாகவே செல். உன்னை யாரும் பின்தொடராத வண்ணம் நான் பார்த்துக் கொள் கிறேன்" என்று முடிவாகக் கூறினான்.

"நீங்கள்..." என்று சித்ராதேவி எதையோ சொல்ல ஆரம்பித்தாள்.

உபாத்தியாயன் அவளை மேலே பேசவொட்டாமல் தடுத்து, "உன் சொல்படி நடப்பவன். என்ன இருந்தாலும் அஜித் சந்திரன் தன்னுடைய வாழ்வில் யாருக்காவது அடிமையாயிருக்க வேண்டியவன். முன்பு உன் தகப்பனா

ருக்கு அடிமை. இப்பொழுது தோரமானாவுக்கு அடிமை. உன் உத்தரவு என்ன சொல்?"

"நீங்கள் என்னை மறைமுகமாகக்கூடக் கண்காணிக்கக் கூடாது."

"சரி."

"என் கையிலடித்துச் சத்தியம் செய்யுங்கள்" என்று கையை நீட்டினாள்.

அவள் குழந்தைபோல் நடப்பதைப் பார்த்து உபாத்தி யாயன் சிரித்துவிட்டுத் தலைகுனிந்து அந்தப் பட்டுக் கையில் தன் இதழ்களைப் பொருத்தினான். "இரவில் ஊரடங்கியதும் வருகிறேன் சித்ரா! நீ புறப்படத் தயாராயிரு" என்று முடிவாகச் சொல்லிவிட்டு அஜித் சந்திரன் அறையிலிருந்து வெளியேறினான்.

இரவும் நெருங்கியது. மலைச்சாரலில் எங்கும் தீபங்கள் எரிந்தன. பாராக்காரர்களின் எச்சரிக்கைக் கூவல் ஹிந்துகுஷ் மலைச்சரிவுகளில் பயங்கரமாக எதிரொலி செய்தது. சித்ரா புது ஆடை உடுத்திக் கிளம்பத் தயாரானாள். ஊரடங்கியதும் சொன்னது சொன்னபடி கையில் ஒரு தீப்பந்தத்துடன் அஜித் சந்திரன் அவள் அறைக்குள் நுழைந்தான். அவளிருந்த கோலம் அவள் புறப்படத் தயாராயிருந்ததைக் காட்டவே அஜித் சந்திரன் அதிகம் பேசாமல், "சரி, கிளம்பு சித்ரா" என்று சொல்லிவிட்டுத் திரும்பினான். அஜித் சந்திரன் முகத்தில் இருந்த ஆழ்ந்த யோசனைக்குக் காரணம் சித்ராதேவிக்குப் புரிந்திருந்தது. ஆனால், கையிலிருந்த தீப்பந்தத்தின் அவசியந்தான் அவளுக்குத் தெரியவில்லை. சண்பகத் தோட்டத்துக்கு ரகசிய மாகப் போகவேண்டியிருக்கத் தீப்பந்தமும் கையுமாக அஜித் சந்திரன் வருவதில் என்ன அர்த்தம் என்று சிந்தித்தாள். அவள் சிந்தனையைப் புரிந்து கொண்ட உபாத்தியாயன்,

"சித்ரா! எங்கும் காவல்காரர்கள் இருக்கிறார்கள். தோரமானாவால் என் வசம் ஒப்புவிக்கப்பட்ட கைதி தப்பிச் செல்லும்போது அவளைத் தொடர வேண்டாமென நான் உத்தரவிட்டால் அது அவர்களுக்கு வியப்பை மட்டுமல்ல, சந்தேகத்தையும் தரும். ஆகவே யாருக்கும் சந்தேகம் ஏற்படாமல் செல்ல நிலவறை ஒன்றுதான் வழி. இந்த மாளிகையிலிருந்து செல்லும் நிலவறை சண்பகத் தோட்டத்துக்கு வெகு அருகில் முடிவடைகிறது. நான் இங்கு வந்த பிறகு நிலவறையைச் சரிசெய்து வைத்திருக்கிறேன். இரண்டு பக்கத்துச் சாவிகளும் என்னிடமே இருக்கின்றன. வா போகலாம்" என்றான்.

சித்ராதேவியும் அஜித் சந்திரனைத் தொடர்ந்து சென்றாள். மாளிகையின் ஒரு மூலையிலிருந்த அறையின் அடிப்பாகத்தில் நிலவறை இருந்தது. அறை மறைத்து நின்ற கதவைத் திறந்த உபாத்தியாயன் பந்தத்தைக் காட்டி முன்செல்ல சித்ராதேவி அவனுக்குப் பின்னால் படிகளில் இறங்கி நடந்தாள். இரு குறுகிய சுவர்களுக்கிடையே வெகு கஷ்டப்பட்டு மீண்டும் அவர்கள் மேலேறியபோது சண்பகத் தோட்டம் வெகு அருகில் இருந்தது. மலைக் காற்றினால் அலைந்த தீப்பந்தத்தின் ஜ்வாலையில் தன்னெதிரே நின்ற சித்ராவைச் சற்றுநேரம் ஆவலுடன் பார்த்த அஜித் சந்திரன் இறுதியில் அவளிடம் பந்தத்தைக் கொடுத்து, "சித்ரா ஜாக்கிரதையாகப் போ. எதற்கும் பந்தம் உன்னிடமிருக்கட்டும். சண்பகத் தோட்டத்தின் பக்கம் தாழ்வாக இருப்பதால் தீப்பந்தம் மாளிகை வீரர்களின் கண்களில் படாது. இந்தா இந்த நிலவறைச் சாவியும் உன்னிடம் இருக்கட்டும். திரும்பி நான் மாளிகைக்குச் சாதாரண வழியிலேயே போய் விடுகிறேன்" என்று சாவியையும் அவளிடம் கொடுத்தான்.

நிலவறைச் சாவியைப் பெற்றுக்கொண்ட சித்ரா அவனிடம் விடை பெற்றுக்கொள்ளும் தருணத்தில் அஜித் சந்திரன் தன் கச்சையிலிருந்து ஓர் ஓலையை எடுத்து, "சித்ரா, உன்னைச் சண்பகத் தோட்டத்தில் சந்திப்பவன் யாராயிருந்தாலும் சரி, அவன் உனக்கு ஏதாவது அபாயத்தை விளைவிக்க முயன்றால் அவனிடம் இந்த ஓலையைக் கொடு. அதுவரையில் இதைப் பிரித்துப் பார்க்காதே" என்று கூறி ஓலையை அவள் மடியில் தன் கைகளாலே சொருகிப் பத்திரப்படுத்தினான்.

உபாத்தியாயன் செய்கை அவளுக்கு மேன்மேலும் ஆச்சரியத்தையே கொடுத்தது. இருந்தபோதிலும் அவனை எதுவும் கேட்காமல் சண்பகத் தோட்டத்தை நோக்கித் தீப் பந்தத்துடன் நடந்தாள். தோட்டத்துக்குள் நுழைந்ததும் அவளுக்குப் பெரிய அதிசயம் காத்திருந்தது. அவளை வரவேற்க பல்தேவ் தயாராகக் காத்திருந்தான். திகைப்பும் ஆச்சரியமும் கலந்து அவனைப் பார்த்த சித்ராதேவி சட்டென்று மடியிலிருந்த ஓலையை எடுத்துத் தீப்பந்தத்தின் ஒளியில் அதைப் பார்த்தாள். அது பல்தேவுக்கே விலாசமிடப்பட்டிருப்பதைக் கண்ட சித்ராதேவி கற்சிலையென ஸ்தம்பித்து நின்றாள்.

41. புது வீட்டு மர்மம்

திகைப்பின் மேல் திகைப்பு ஏற்படும்போது புத்தி சிந்திக்கும் சக்தியை இழந்து விடுகிறது. சித்ராதேவியும் அந்த நிலையில்தானிருந்தாள். மந்த புத்தியுள்ள பல்தேவுக்குக் கூட, அவள் நிலை புரிந்தது. எதிர்பாராத முறையில் தன்னைச் சந்தித்ததால் சித்ராதேவி திகைப்பு அடைந்து நிற்கிறாளென்பதை பல்தேவ் உணர்ந்து கொண்டான். ஆனால், அவள் மடியிலிருந்து ஓர் ஓலையை எடுத்துப் பார்த்து மலைக்கும் காரணத்தை மட்டும் அவனால் புரிந்து கொள்ள இயலவில்லை. எப்படியாவது அந்த ஓலையைப் பார்க்க வேண்டுமென்ற இச்சை கொண்டவனாய்ச் சித்ராதேவியிடம் பூரண மரியாதையுடனே நடந்து கொண்டான். அவளை மெள்ள அணுகி அவள் கையிலிருந்த பந்தத்தை வாங்கிச் சற்றுத் தூரத்திலிருந்த இரு பாறைகளுக்கிடையில் சொருகினான். அத்துடன் அந்தப் பாறைகளுக்கருகிலேயே ஓர் இடத்தைக் காட்டி, "சித்ராதேவி! இப்படி உட்காருங்கள்" என்றான்.

அவன் செய்கையும் பேச்சும் அவளை ஓர் உலுக்கு உலுக்கி இந்த உலகத்துக்குக் கொண்டு வந்தன. தன் விழிகளால் அவனை ஏற இறங்க நோக்கினாள். அவள் பார்வையைக் கவனித்த பல்தேவ் பலமாகச் சிரித்துக் கொண்டே, "பயம் வேண்டாம் சித்ராதேவி! அந்தப் பழைய பல்தேவ் அல்ல இவன். சமீப காலத்தில் இவன் எவ்வளவோ மாறிவிட்டான். இன்னும் சொல்லப் போனால் உங்கள் அபிமானத்துக்கு உபாத்தியாயனை விட லாயக்கானவன் தற்சமயம் இவன்தான்" என்றான் தன்னைச் சுட்டிக்காட்டி.

அவன் பார்த்த பார்வையும், பேசிய பேச்சும் சித்ராதேவிக்குக் கட்டோடு பிடிக்கவில்லையென்றாலும் அவன் காட்டிய பாறைமேல் உட்கார்ந்து கொண்டாள். பல்தேவ் அவளெதிரில் நின்று சிறிது நேரம் மௌனம் சாதித்தான். பக்கத்தில் பாறையில் ஜொலித்துக் கொண்டிருந்த தீப்பந்தம் அவன் முகத்தின் ஒரு பாகத்தில் வெளிச்சத்தை வீசியதால் மற்றைய பாதி முகம் இருட்டாகவே இருந்தது. இருளும் ஒலியும் கலந்து தோன்றிய முகத்தைப் போலவே இருந்தது அவன் பேச்சும். நடத்தையும். பேச்சு, மேலுக்கு மரியாதையாக இருந்தாலும் சொற்களை அவன் உச்சரித்த முறையும் அடிக்கடி அவள்மேல் வீசிய காமப்பார்வையும் சித்ராவுக்குப் பெருத்த சந்தேகத்தையும் சங்கடத்தையும் விளைவித்தன.

அவள் என்ன நினைக்கிறாளென்பதைச் சற்றும் லட்சியம் செய்யாத பல்தேவ், தான் வந்த காரணத்தை விவரிக்கத் தொடங்கி, "ராகுலன் கையெழுத்தில் கடிதமனுப்பிய நான் இங்கு வர நேர்ந்த காரணம் என்னவென்பதைப் பற்றித் தங்களுக்குப் பெரிதும் சந்தேகம் ஏற்படலாம்! அந்த சந்தேகத்தை நொடிப் பொழுதில் போக்க என்னால் முடியும். ஆனால் அது விஷயமாகப் பேச முற்படு முன்பு தாங்கள் இங்கு தனியாக வந்திருக்கிறீர்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்" என்றான்.

"கடிதத்தில் கண்ட நிபந்தனையை நான் மீறவில்லை" என்று பதில் சொன்னாள் சித்ராதேவி.

"தாங்கள் இங்கு வருவது யாருக்காவது தெரியுமா?"

"ஒருவருக்கு மட்டும் தெரியும்" என்ற சித்ராதேவியின் பதில் பல்தேவின் மனத்தை ஒரு முறை கலக்கிற்று. அந்த ஒருவர் யாரென்பதை ஊகிப்பது அப்படியொன்றும் பெரிய காரியமில்லை.

"உபாத்தியாயருக்கு இந்த விஷயம் தெரிய வேண்டிய அவசியம் என்ன?" என்று பல்தேவ் சற்றுக் கடுமையான குரலில் கேட்டான்.

"இரண்டுவித அவசியங்கள் இருந்தன. ஒன்று, அம்பு அறையில் வந்து விழுந்தபோது அவரும் இருந்தார். கடிதத்தை அவரே பிரித்துப் படித்தார். தவிர அவர் காவலில் நான் இருந்தேன். அவர் உதவியில்லாமல் நான் அறையைவிட்டு வெளிவர முடியாது" என்றாள் சித்ராதேவி.

அவள் பதிலைக் கேட்ட பல்தேவ் அதிகமாகப் படபடக்கவில்லை. "ஒருவேளை உபாத்தியாயர் உங்களைத் தொடர்ந்து இங்கு வந்தால் என்ன செய்வது?" என்று மட்டும் கேட்டான்.

"வரமாட்டார்."

"ஏன்?"

"என்னைத் தொடருவதில்லையெனச் சத்தியம் செய்திருக்கிறார். இரண்டாவதாக, இங்கு வரப்போவது யார் என்பது அவருக்குத் தெரியும்."

"எப்படித் தெரியும்?"

"அது எனக்குத் தெரியாது. இங்கு நான் யாரைச் சந்திக்கிறேனோ அவரிடம் ஓர் ஓலையைக் கொடுக்கும்படி என்னிடம் கொடுத்தார். அதை இங்கு வந்துதான் பார்த்தேன். அதில் எழுதியிருப்பது உங்கள் விலாசம்! இதோ பாருங்கள்" என்று ஓலையைப் பல்தேவிடம் கொடுத்தாள்.

ஓலையைச் சரேலென வாங்கிக்கொண்டு பந்தத்தருகில் சென்று படித்த பல்தேவ், "சுத்த மோசக்காரன், வேவுக்காரன்" என்ற இரைந்து கத்தினான். கத்திவிட்டு, "சித்ராதேவி! குடிகெட்டுவிட்டது. இந்த ஒரு கடிதம் என்னுடைய திட்டங்களை அடியோடு கெடுத்துவிட்டது. படித்துப் பாருங்கள்" என்று ஓலையை அவளிடம் நீட்டினான். சித்ராதேவி ஓலையை வாங்கிப் படித்தாள். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

"பல்தேவ்,

ராகுலன் கையெழுத்தைக் கண்டு நான் ஏமாறவில்லை! சித்ராதேவியின் விருப்பத்தின்படி அவளைத் தனியாக உன்னிடம் அனுப்புகிறேன். சித்ராதேவியிடம் நீ தவறுதலாக நடந்துகொண்டதாக எனக்குத் தெரிந்தாலும் சரி, அல்லது அவளைப் பலவந்தமாக மலைவாசலை விட்டு அழைத்துச் செல்ல எந்த ஏற்பாட்டைச் செய்தாலும் சரி, உன்னுடைய அற்ப உயிர் குதிர் போன்ற உன் உடலில் அதிக நாள் தங்கியிருக்காது என்பதைத் தெரிந்து கொள். நீ சித்ராதேவியிடம் தனியாகப் பேச வேண்டியதைப் பேசி முடித்து அவளைத் தனியாக மாளிகைக்குத் திருப்பியனுப்பு. நீ சித்ராவைப் பின்தொடர எத்தனித்தாலும், அல்லது எக்காரணத்தாலாவது சித்ரா நடுநிசிக்குள் மாளிகைக்கு வராதிருந்தாலும் உன்னையும் மலைவாசலில் இரண்டு நாட்களாக உலாவி வரும் உன் சகாக்களையும் உடனே கைது செய்யும்படியும் உத்தரவிடுவேன். எதற்கும் உன்னை அருவிக்கருகிலிருக்கும் புது வீட்டில் நான் சந்திக்கிறேன்.

— அஜித் சந்திரன்."

கடிதத்தின் கடைசிப் பாகத்தில் கண்ட விவரங்கள் என்னவென்று சித்ராதேவிக்குப் புரியவில்லை. கடிதத்தைப் படித்த பின்பு பல்தேவ் ஒரு நிலையில் இல்லையென்பதை மட்டும் தெரிந்துகொண்டாள். 'அங்கு பல்தேவ்தான் வருவானென்பது அவருக்கு எப்படித் தெரியும்? தவிர இவன் சகாக்களைப் பற்றி ஏதோ சொல்லுகிறாரே, அவர்கள் யார்? அருவிக்கருகிலிருக்கும் புது வீடு எது? அங்கு என்ன விசேஷம்' என்று எதையெதையெல்லாமோ யோசித்துப் பார்த்தும் அவளுக்கு ஏதும் விளங்கவில்லை. பல்தேவ் விளக்கமாகக் கூற ஆரம்பித்தான்.

“சித்ராதேவி! என்னைப் பற்றி நீங்கள் ஒழுங்கான அபிப்பிராயம் கொள்ள நியாயமில்லை. மூலஸ்தானபுரத்தில் நான் தங்களிடத்தில் நடந்துகொண்ட விதத்துக்குப் பிறகு என்னிடம் பெரிதும் சந்தேகம் கொள்வீர்கள். ஆனால் பாரதத்தின்மீது ஹூணர்கள் படையெடுப்பு ஏற்பட்ட பிறகு யார் யாரோ எப்படி எப்படியோ மாறியிருக்கிறார்கள். உங்கள் தந்தையால் மானத்தையே இழந்த நான் உங்கள் மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ள இஷ்டப்பட்டது உண்மை தான். ஆனால், உங்கள் தந்தை இறந்தபின் நம் நிலைமை மாறிவிட்டது. மூலஸ்தானபுரத்தின் படைத் தலைமைப் பதவியிலிருந்து தோரமானா விலக்கி விட்டான். அதன் காரணமாக அவனைப் பழி வாங்கத் தீர்மானித்தேன். உடனே ராகுலன் மூலமாக உங்கள் தம்பியின் இருப்பிடத்தை யறிந்து கொண்டேன். தந்தையைத் தூக்கிலிட்டதற்குத் தோரமானாமீது பழி வாங்க உங்கள் தம்பி பெரிய திட்ட மிட்டிருக்கிறார். அந்தத் திட்டத்தில் நானும் கலந்து கொண் டிருக்கிறேன். தோரமானா இப்பொழுது எங்கள் பொது விரோதி. அவனை ஒழித்துக் கட்டவே நானும் சிலரும் மலை வாசல் அருவிக்கருகிலிருக்கும் வீட்டில் வசித்து வருகிறோம். இன்னும் சில நாட்களில் உங்கள் தம்பியும் வருவார். இதை உங்களிடம் சொல்லும்படி உங்கள் தம்பி கட்டளையிட்ட தால் உங்களை இங்கு வரவழைத்தேன். ஆனால், நாங்கள் வந்திருப்பதை இந்தக் குப்த ராஜ்ய வேவுக்காரன் எப்படியோ தெரிந்து கொண்டிருக்கிறானே. இவனுக்கு உங்கள் தம்பி வருவது தெரிந்தால்...?” என்று சொல்லிச் சித்ராவைச் சந்தேகத்துடன் நோக்கினான்.

“ஒரு கெடுதலும் ஏற்படாது” என்று திட்டமாகச் சொன்னாள் சித்ரா.

“உபாத்தியாயரிடம் அவ்வளவு நம்பிக்கையா?” என்றான் பல்தேவ்.

“பல்தேவ்! நீ சொல்வது உண்மையாயிருக்கும் பட்சத் தில் உபாத்தியாயரைவிட நமக்குச் சரியான பக்கபலம் இருக்க முடியாது. அவர் குப்த ராஜ்ய உளவாளியானால் தோரமானாவின் விரோதிதானே? தோரமானாவின் விரோதிகளுக்குள் பகை எப்படியிருக்க முடியும்?” என்று சித்ரா கேட்டாள்.

பல்தேவ் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான். கொஞ்ச நேரம் ஏதோ யோசித்துவிட்டு, “அப்படி உபாத்தி யாயர் உதவுவதானால் நல்லதுதான். எதற்கும் கேட்டுப் பாருங்கள். உங்கள் தம்பி எப்படியும் அடுத்த வாரம் இங்கு வரப்போகிறார்” என்றான் பல்தேவ்.

“விஷயம் இவ்வளவுதானே” என்று சொல்லி மாளிகைக்குப் போக எழுந்தாள். “சித்ராதேவி! எங்களைப் பார்க்க வேண்டுமானால் அருவிக்குப் பக்கத்திலுள்ள புது வீட்டில் பார்க்கலாம். எதற்கும் நாளைக்கு உபாத்தியாயர் வரும்போது நீங்களும் கூட வாருங்கள்” என்று சொல்லிப் பந்தத்தை அவள் கையில் கொடுத்தான்.

பல்தேவிடம் அன்று அத்துமீறிய செய்கையைச் சித்ரா எதிர்பார்த்திருந்ததால் அவள் ஏமாந்துபோனாள் என்பதில் சந்தேகமில்லை. உபாத்தியாயன் கடிதம் அவன் சப்த நாடி களையும் ஒடுக்கிவிட்டது. சித்ரா சென்ற வெகுநேரம் மட்டும் பல்தேவ் ஏதோ கறுவிக்கொண்டிருந்துவிட்டு அருவியை நோக்கி நடந்தான்.

சித்ராதேவி மாளிகைக்குள் வந்தபோது அவள் அறை யில் அஜித் சந்திரன் உட்கார்ந்துகொண்டு ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான். அவள் திரும்பி வந்தது அவனுக்குச் சிறிதும் ஆச்சரியத்தை அளிக்கவில்லை. பந்தத்துடன் நின்ற சித்ராதேவி அஜித் சந்திரனை நோக்கி, “உபாத்தியாயரே! என்னைச் சண்பகத் தோட்டத்தில் சந்திக்கவிருந்தவன் பல்தேவ்தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டாள்.

"சித்ராதேவி! ராகுலன் கூர்ஜரன். ஹூணர்களுக்கும் கூர்ஜரர்களுக்கும் வில்வித்தை தெரியாது. அதுவும் மாளிகையைச் சுற்றி வீரர்கள் காவலிருக்கிறார்கள். அம்பு எய்பவன் சுமார் நூறு கஜ தூரத்திற்கு அப்பாலிருந்துதான் எய்ய வேண்டும். புருஷபுரத்து வில்லவரைத் தவிர அவ்வளவு குறிபார்த்து எய்யக்கூடியவர்கள் உலகத்தில் கிடையாது. கடிதத்திலிருந்ததோ ராகுலன் கையெழுத்து. தோரமானாவிடம் சிறையிலிருக்கும் ராகுலனிடம் கடிதமெழுதி வாங்கி இங்கு அம்பு எய்யக்கூடிய வில்லவன் யாராயிருக்க முடியுமென்று யோசித்தேன். இரண்டு நாட்களாகப் பல்தேவ் மலைவாசலில் தென்படுவதாக ஒற்றர்கள் அறிவித்திருக்கிறார்கள். தவிர, அம்பைச் சோதித்ததில் அது வில்லவர் உபயோகிக்கும் அம்பு வகையைச் சேர்ந்ததெனத் தெரிந்தது. எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஊகித்தேன். உபாத்தியாயன் ஊகம் சாதாரணமாகச் சரியாகவே இருக்குமென்பது உனக்குத் தெரிந்ததுதானே" என்றான்.

அவன் புத்திக்கூர்மையை அவள் வியந்தாள். எதையும் அரை விநாடியில் அலசும் ஆற்றல் வாய்ந்த உபாத்தியாயனிடம் அவள் மையல் அன்று பன்மடங்கு அதிகமாயிற்று. உபாத்தியாயன் அவளை நெருங்கி அவளிடமிருந்த பந்தத்தை வாங்கி வெளியே வைத்து அணைத்தான். பிறகு, "சித்ரா, நடுநிசியாகிவிட்டது. படுத்துக்கொள்" என்று உத்தரவிட்டான். மஞ்சத்தில் சித்ரா படுத்தாள். அவள் படுத்ததும் அறைக்கு வெளியே செல்ல முயன்ற அஜித் சந்திரன் கால்களை, "உபாத்தியாயரே!" என்ற மெல்லிய சொற்கள் மடக்கி நிறுத்தின. உபாத்தியாயன் திரும்பிக் கட்டிலில் கிடந்த அந்தக் கட்டழகியைப் பார்த்தான். சாளரத்திலிருந்து வந்த மங்கலான வெளிச்சம் அவள் முகத்தில் விழுந்திருந்தது. மனோகரமான அவள் வதனத்தில் சிங்காரச் சிரிப்பு ஒன்று படர்ந்து உபாத்தியாயனை உள்ளே வலிய இழுத்தது. அஜித் சந்திரனும் கட்டிலை நோக்கித் திரும்பினான்.

42. சத்தியம்

அவள் கட்டிலில் சற்று அசைந்து படுத்தாள். கறுத்து வளைந்த புருவங்களினாலும் அடர்ந்து இருண்ட இமைகளாலும் இயற்கையாகவே மை தீட்டப்பட்டவைபோல் காட்சியளித்த அவள் கண்களின் பார்வை தரைப்பக்கமாகச் சாய்ந்தது. வெளியே செல்ல யத்தனித்த உபாத்தியாயனைத் திரும்ப உள்ளே இழுத்த உதடுகள் அவன் திரும்பியதும் பேசும் சக்தியிழந்து வெட்கத்தின் அடையாளமாகப் புன்முறுவல் காட்டின.

விலகிச் செல்லும் ஆண்களைக் கவர அஸ்திரங்களை வீசுவதாலும், நெருங்கி வரும்போது வெட்க வலையால் தங்கள் இச்சையை மறைப்பதாலும் பெண்கள் ஆண்களை எத்தனை பைத்தியமாக அடித்து விடுகிறார்கள் என்று உபாத்தியாயன் நினைத்தான். புருஷர்களுடைய உணர்ச்சிகளைப் பின்னிப் பின்னி இழுக்க இயற்கை எத்தனை வசீகரக் கயிறுகளை ஸ்திரீகளுக்கு அளித்திருக்கிறது என்று சிந்தித்தான் உபாத்தியாயன்.

இத்தகைய சிந்தனைகளில் உபாத்தியாயன் இறங்குவதற்குக் காரணம் அவன் புத்தி அந்த சமயம் காம இச்சையை மீறிய வேறு பிரதேசங்களில் சஞ்சரித்துக் கொண்டிருந்ததுதான். மலைவாசல் ராஜ்ய நிலை மிகக் கடுமையாகிக் கொண்டு வருவதைப் பற்றிய யோசனைகளை அவன் புத்தி அள்ளி வீசிக்கொண்டிருந்தபடியால் கட்டிலில் கிடந்த அந்தக் கட்டழகியின் சரச அழைப்புகளை ஏற்கும் நிலையில் அவன் இல்லை. கபீசத்திலிருக்கும் ஹூணர்களை மலைவாசல் வழியாக நுழையாமல் தடுக்கும் பொறுப்பை தோரமானா தனக்களித்திருக்கிறான். அதேசமயம் பல்தேவ், சித்ரா

வின் தம்பியுடன் சேர்ந்துகொண்டு ஏதோ சதி செய்வதற்காகச் சில ஹூணப் பிரபுக்களுடன் மலைவாசலுக்கு வந்து அந்தச் சதியில் சித்ராவையும் சிக்க வைக்க ஏற்பாடு செய்கிறான். புது வீட்டில் நடமாடும் ஆட்களின் பூர்வீகத்தைப் பற்றித் தகவல் ஏதும் சரியாகக் கிடைக்கவில்லை. இதற்கிடையில் என்ன காரணத்தாலோ தோரமானா மாளவத்தின் மீது படையெடுக்கத் தயங்குகிறான். மூலஸ்தானபுரத்தில் குப்தப் படைகளை முறியடித்துத் தன் விரோதியான அடிலனைத் தீர்த்துக்கட்டிய பிறகும் தோரமானா ஏன் மாளவத்தின்மீது படையெடுக்கவில்லை? பல்தேவுக்கும் சித்ராவின் தம்பிக்கும் தொடர்பு ஏற்பட்டது எப்படி? பல்தேவ் தனக்கெதிராகச் சதி செய்வது தோரமானாவுக்குத் தெரியுமா?

இத்தகைய பல கேள்விகள் புத்தியில் தாண்டவமாடியதால் உபாத்தியாயன் ஆழ்ந்த கவலையோடு கட்டிலை அணுகி சித்ராதேவியின் பக்கத்தில் சிலைபோல் உட்கார்ந்துகொண்டான். அவன் தன்னை நோக்கி வந்த மாதிரியையும் உட்கார்ந்த நிலையையும் கவனித்த சித்ராதேவி அவன் கையுடன் தன் கையொன்றைக் கோத்துக்கொண்டாள். புஷ்பத்தின் தளிர்கள்போல் மென்மையாகத் தன் கையில் அழுத்தி ஆறுதலை அளித்த அந்த அழகியின் விரல்களை உபாத்தியாயன் சற்று வலிக்கும்படியாக இறுக்கிப் பிடித்தான். வலியிலும் ஆனந்தம் இருக்கிறதென்பதை சித்ரா அப்பொழுது அறிந்துகொண்டாள்.

கையைப் பிடித்துக்கொண்டே உபாத்தியாயன் வெகு நேரம் உட்கார்ந்திருந்தது சித்ராதேவிக்கு பெரும் ஆறுதலாயிருந்தது. அவன் முகத்திலிருந்த கவலை அவள் ஆறுதலில் புகுந்து மனத்தில் சிறிது சஞ்சலத்தையும் விளைவிக்கவே சித்ராதேவி மெள்ள, "உபாத்தியாயரே! என்ன யோசிக்கிறீர்கள்?" என்றாள். அவன் அதற்கு உடனே பதில் சொல்லாதிருக்கவே, "உபாத்தியாயரே! இப்பொழுது எந்த உலகத்தில் இருக்கிறீர்கள்?" என்றாள் சற்று விஷமமாக.

உபாத்தியாயன் சிந்தனை சற்றே கலைந்தது. சித்ரா தேவியைப் பார்த்த அவன் முகம் பழைய நிலையை அடைந்தது. அவள் கேள்விக்குச் சிரித்துக்கொண்டே பதில் சொன்னான்: "இருக்க வேண்டிய உலகத்தில் இல்லை" என்று.

"நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை" என்றாள் சித்ராதேவி.

"நீ கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னேன்" என்றான் உபாத்தியாயன்.

"எந்த உலகத்தில் இருக்கிறீர்கள் என்று கேட்டேன்" என்றாள் சித்ரா.

"நீ பக்கத்திலிருக்கும்போது, அதுவும் இந்த நிலையில் இருக்கும்போது, நான் சொர்க்கத்தில் இருக்கவேண்டும்" என்று பேசிக்கொண்டு போன உபாத்தியாயனை சித்ரா இடைமறித்து, "யார் தடை செய்கிறார்கள்?" என்று மெல்லிய குரலில் வினவினாள்.

"இன்னொருவர் தடை செய்வதாயிருந்தால் அந்தத் தடையை மீறத் தயங்கமாட்டேன். ஆனால் அந்த உலகத்தில் நான் பிரவேசிப்பதைத் தடை செய்வது கடமை" என்றான் உபாத்தியாயன்.

"என்ன கடமை?"

"ராஜீயக் கடமை."

"ராஜீயக் கடமையில்லாமல் நீங்கள் இருக்கக்கூடிய நாள் ஏதாவது உண்டா?"

"உண்டு, அந்த நாள் இன்னும் வரவில்லை."

"எப்பொழுது வரும்?"

"மலைவாசலில் என் வேலை முடிந்தால் வரும்."

"அப்படி என்ன தலை போகிற வேலை?"

"என் தலை போவதானால் கவலைப்படமாட்டேன். ஒரு ராஜ்யத்தின் நன்மை என் கடமையில் பிணைபட்டுக் கிடக்கிறது. தவிர, பேராபத்தில் சிக்கியிருக்கும் இன்னொருவன் தலை போகாமலும் காக்க வேண்டியிருக்கிறது."

"நீங்கள் அவ்வளவு அக்கறை காட்டவேண்டிய அந்தத் தலை யார் தலையோ."

"உன் தம்பியின் தலை."

படுத்திருந்த நிலையிலிருந்து துள்ளி எழுந்தாள் சித்ரா தேவி. எழுந்த வேகத்தில் அவள் பூவுடல் சரேலென்று உபாத்தியாயன் மேல் தாக்கியது. உபாத்தியாயன் கடைசியாக எய்த அம்பு அவள் உடம்பை ஓர் ஆட்டு ஆட்டியே விட்டது. "என் தம்பியின் தலைக்கு ஆபத்தா?" என்று பெருமூச்சு வாங்கக் கேட்டாள்.

"பல்தேவின் சதியாலோசனைத் திட்டம் பெரிய ஆபத்தை விளைவிக்கும்" என்றான் உபாத்தியாயன்.

சித்ராதேவிக்கு ஏதோ பெரிய சுமையை இறக்கியது போலிருந்தது. "இதற்காகத்தானா இவ்வளவு பயமுறுத்தி விட்டீர்கள். தகப்பனுக்கு விளைவித்த அநீதிக்குப் பழி வாங்கத் தனயன் முற்படுவதில் ஆபத்து இருக்கத்தான் செய்யும். தவிர, இந்த ஏற்பாடு யாருக்குத் தெரியப் போகிறது? பல்தேவ் நமது பக்கத்தில் இருக்கிறான், என் தம்பியும் அப்படிப் புத்தியில்லாதவனல்ல" என்றாள்.

"இந்த இரண்டு பேரைவிடப் புத்திசாலி இன்னொருவன் இருக்கிறான்" என்றான் உபாத்தியாயன்.

"யாரைச் சொல்கிறீர்கள்?" என்று சித்ராதேவி கேட்டாள்.

"தோரமானாவைத்தான் சித்ராதேவி! தோரமானாவின் சாமர்த்தியத்தை அல்பமாக நினைத்து இந்த பல்தேவின் உதவியைக் கொண்டு தோரமானாவைத் தீர்த்துக் கட்டலா

மென்று உன் தம்பி நினைத்தானானால் அதைவிடப் பெரிய ஹாஸ்யமான யோசனை உலகத்தில் இருக்க முடியாது" என்றான் உபாத்தியாயன்.

தம்பியைப்பற்றி உபாத்தியாயன் இழிவாகக் கூறியதை சித்ராதேவி அறவே வெறுத்தாள். சொல்லவொண்ணாத சீற்றமும் அவள் மனத்தில் குடிகொண்டது. "என் தம்பியைப் பற்றி அவ்வளவு மட்டமாக நினைப்பவர் என்னைப்பற்றி எப்படி நினைப்பீர்கள்?" என்று கேட்டாள்.

உபாத்தியாயனிடம் இயற்கையாக உள்ள விஷமம் மெலெழுந்து நிற்கவே அவன் வாய் தவறி, "அந்தப் புத்தி சாலியின் அக்காள் என்று நினைப்பேன்" என்று பதில் கூறினான். அவ்வளவுதான், சித்ராதேவி சுயநிலை மறந்தாள். ஹூணர்களின் உக்கிரம் பூராவும் அவள் உடம்பில் கொதித்து, உபாத்தியாயனைக் கட்டிலை விட்டு இரு கைகளாலும் பிடித்துத் தள்ளினாள். "முதலில் அறையை விட்டுப் போய்விடுங்கள். இருந்தால் என்ன செய்வேனென்று சொல்ல முடியாது" என்று சொல்லிக்கொண்டே படுக்கையிலிருந்த தலையணையொன்றை எடுத்து அவன் மேல் வீசினாள். உபாத்தியாயன் சிரித்த வண்ணம் அந்தத் தலையணையைப் பிடித்து அப்புறம் எறிந்து விட்டு அவளை இறுகப் பிடித்துக்கொண்டு, "சித்ரா! கோபத்திலும் உன் முகம் எத்தனை அழகாயிருக்கிறது" என்றான்.

"இந்தக் கொஞ்சல் ஒன்றும் என்னிடம் வேண்டாம். நாங்களெல்லாம் முட்டாள்கள். எங்களிடம் அடிமையாக இதே மாளிகையில் அடிபட்ட நீங்கள் ஒருவர்தான் புத்தி சாலி! விடுங்கள்!" என்று திமிறினாள்.

மெல்லியதாக நீண்டிருந்த உபாத்தியாயன் கரங்கள் சிறகடித்துக்கொண்டு நிற்கும் அந்தப் புறாவை இரும்பென இழுத்து அணைத்தன. "சித்ரா! உன் தம்பியைச் சூழ்ந்திருக்கும் அபாயமே என்னை அப்படிப் பேசத் தூண்டியது.

கோபிக்காதே. நீ என்னை விரட்டினால் இந்த உலகமே எனக்குச் சூன்யம். நீ நினைப்பதுபோல் உன் தம்பியின் நிலை அவ்வளவு சாதாரண அபாயத்தில் இல்லை; என் ஊகம் சரியானாலும் அவன் தீவிரமான அபாயத்தில் சிக்கியிருக்கிறான். தோரமானா அவனை இன்னும் சுதந்திரமாக விட்டிருப்பதே அதற்கு அத்தாட்சி" என்றான்.

"அவனிருக்குமிடம் தோரமானாவுக்குத் தெரியாமல் இருக்கலாம்" என்றாள் சித்ரா, சற்று நிதானத்துக்கு வந்து.

"பைத்தியமே! தோரமானாவிடம் ராகுலன் சிறையிருக்கிறான். ராகுலனுக்கு உன் தம்பியிருக்குமிடம் தெரியும். ராகுலனோ தன்னைக் காப்பாற்றிக் கொள்ள யாரையும் காட்டிக் கொடுப்பான். தேவையானால் அரைநொடியில் ராகுலனை விஷயத்தைக் கக்கும்படி செய்யலாம் தோரமானா. அதை ஏன் செய்யவில்லை?" என்று கேட்டான் உபாத்தியாயன்.

சித்ராவின் முகத்தில் கவலையும் பயமும் சூழ்ந்தன. "உபாத்தியாயரே!" என்றாள் நடுங்கும் குரலுடன்.

"பயப்படாதே சித்ரா! உன் தம்பியை நான் காப்பாற்றுகிறேன்" என்றான் உபாத்தியாயன்.

நன்றி ததும்பும் கண்களுடன் அவனை ஏறெடுத்து நோக்கிய சித்ராதேவி, "சத்தியமாக?" என்றாள்.

பதிலுக்கு உபாத்தியாயன் அவள் வலது கையில் தன் கையால் அடித்து, "சத்தியமாக" என்றான். தாயிடம் அமைதியை நாடும் குழந்தை போல சித்ராதேவி அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். அவன் அவள் முகத்தைத் தனக்காக உயர்த்தினான். அவள் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். ஆனால், உதடுகளிலிருந்து சொற்கள் உதிரவில்லை. அழகிய அவள் இதழ்கள் அவள் வசத்தில் இல்லை.

43. சதிக் கூட்டம்

அந்த இன்பநிலை அதிக நேரம் நீடிக்க உபாத்தியாயன் அனுமதிக்கவில்லை. சித்ராதேவியைத் தன் பிணைப்பிலிருந்து மெல்ல அன்புடன் விலக்கி, "சித்ரா! நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டிருந்து விட்டோம். அர்த்த ஜாமம் முடியும் சமயம் வந்துவிட்டது. நீ படுத்துக்கொள். காலையில் வருகிறேன்" என்றான். சித்ராதேவி அவனுக்குப் பதில் ஏதும் சொல்லாமலே இரண்டடி பின்னுக்கு வந்து கட்டிலின் முகப்பில் உட்கார்ந்து கொண்டாள். கவிழ்ந்திருந்த தலையைத் தூக்கவொட்டாமல் வெட்கம் அழுத்திக் கொண்டிருந்தது. "படுத்து நன்றாகத் தூங்கு சித்ரா! ஏனென்றால் நாளைக்கும் உனக்குத் தூக்கம் இருக்காது" என்று சொன்னான் உபாத்தியாயன். இதைக் கேட்ட சித்ராவின் இதழ்களில் புன்னகை அரும்பியது. ஏதோ பதில் சொல்ல வேண்டும் என்பதற்காக, "சரி, உபாத்தியாயரே!" என்றாள். அந்த பதில் சுவாரஸ்யமற்று வெளிவந்தது. அதன் தொனியிலிருந்து அவளுக்குத் தன்னைப் பிரிவதில் இஷ்டமில்லையென்பதை உபாத்தியாயன் நன்கு உணர்ந்துகொண்டான். இருந்தபோதிலும் தானிருக்கும் நிலைமையையும் தனக்கு முன்னிருக்கும் கடமைகளையும் நினைத்து "சித்ரா! நான் மீண்டும் நாளைக் காலையில் வருகிறேன். அருவிக்கருகிலிருக்கும் புது வீட்டுக்கு நாளை மாலையில் சென்றால் வீரர்களுக்குச் சந்தேகம் வராது. ஏதோ உன்னை அழைத்துக் கொண்டு உலாவச் செல்வதுபோல் சண்பகத் தோட்டத்துக்குப் போய்விட்டால் அங்கிருந்து நாம், முன்பு செல்லும் குறுக்குப் பாதை வழியாக அருவிக்குச் செல்லலாம். இடையிலிருக்கும் வழியை சண்பகத் தோட்டம் மறைத்து நிற்பதால்

நாம் போகிற இடத்தையும் யாரும் தெரிந்து கொள்ள முடியாது" என்று கூறினான் அஜித் சந்திரன்.

புது வீட்டைப்பற்றிய நினைப்பும் அதில் பல்தேவைச் சந்திக்கவேண்டிய அவசியமும் சித்ராதேவியை இன்ப உலகத்திலிருந்து இறக்கிச் சுயநிலைக்குக் கொண்டு வந்தது. அந்த நிலை வந்தவுடன் உபாத்தியாயனை நன்றாக ஏறெடுத்துப் பார்த்தாள். தனக்காக அவன் எந்த தியாகத்துக்கும் தயாராகி எந்த ஆபத்திலும் நுழைய சித்தமாயிருப்பதை நினைத்து இந்த மாதிரி ஒரு வீரன் தன் அன்புக்கு அடிமையாயிருக்கிறானே என்ற எண்ணத்தினால் சற்றுப் பெருமையும் அடைந்தாள். அதனால் வெளிவந்த பெரு மூச்சைத் தொடர்ந்து, "உபாத்தியாயர் உத்தரவுப்படி நாளை மாலை நான் புறப்படத் தயாராயிருக்கிறேன்" என்ற சொற்களும் வெளிவந்தன.

மேற்கொண்டு எதுவும் பேசாமல் உபாத்தியாயன் கதவைச் சாத்திக்கொண்டு சென்றான். சித்ரா சற்று நேரம் தீவிர யோசனையிலிருந்துவிட்டுக் கதவைத் தாளிட்டுக் கொண்டு படுத்தாள்.

அடுத்த நாள் காலை அஜித் சந்திரன் அவளைச் சந்திக்க வில்லை. ஏதோ அவசர வேலையாக அவன் வெளியே சென்றுவிட்டதாகவும் மாலைதான் வருவானென்றும் வீரர்கள் சித்ராவுக்குச் செய்தி சொன்னார்கள். உபாத்தியாயருக்குத் தன்னைக்கூடப் பார்க்காமல் அப்படி என்ன வேலையிருக்கும் என்று எண்ணி வேலைக்காரர்களை விசாரித்தாள். யாரிடமிருந்தும் எந்தப் பதிலும் வரா திருக்கவே மிகுந்த சிரமப்பட்டுப் பகல் பொழுதைக் கழித்தாள். சரியாக சூரியன் அஸ்தமிக்கும் வேளைக்கு அஜித் சந்திரன் அவள் அறைக்குள் நுழைந்து, "சித்ரா கிளம்பலாமா" என்றான்.

சித்ராதேவி உடனே கிளம்பவில்லை. "காலையில் உங்களை எதிர்பார்த்தேன்" என்றாள் கோபத்துடன்.

'புருஷன் கொஞ்சம் சொல் மீறி நடந்தாலும் பெண்களுக்கு என்ன கோபம் வருகிறது? புருஷன் என்ன இவர்கள் அடிமையா?' என்ற எண்ணம் மனத்தில் ஓட அஜித் சந்திரன் இதழ்களில் புன்னகை அரும்பியது. இருந்தாலும் அதைத் தொடர்ந்து வந்த அடக்கமே மேம்பட்டு நின்றது.

"கோபிக்காதே சித்ரா! தோரமானாவின் உபசேனாதிபதியாக உத்தியோகம் பார்க்க வேண்டுமென்றால் எளிதான காரியமல்லவென்பது உனக்குத் தெரியாதா? தவிர, புது வீட்டிலிருக்கும் சதிக் கூட்டத்துக்கு உன்னை அழைத்துச் செல்வதென்றால் அதற்குப் பூர்வ ஏற்பாடுகளைச் சரிவரச் செய்ய வேண்டாமா?" என்று சமாதானம் சொன்னான் அஜித் சந்திரன்.

"என்ன ஏற்பாடுகளைச் செய்தீர்கள்!" என்று சித்ரா கேட்டாள்.

"அருவிப் பிராந்தியத்தில் இருக்கும் வீரர்களை அவசரத்தை முன்னிட்டு மலைவாசல் முனையில் காவல் புரிய அனுப்பினேன். இதற்கு இடையே தோரமானாவின் அந்தரங்க அதிகாரியும் இங்கு வரப்போவதாகச் செய்தி கிடைத்தது. அவர் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்ய வேண்டியிருந்தது..." என்ற உபாத்தியாயன் பேச்சைக் கேட்டபோது சித்ராவின் மூச்சு நின்றுவிடும்போல் ஆகி விட்டது.

"யார்? அந்தரங்க அதிகாரியா? அப்படியானால் அந்த..." என்று ஆரம்பித்த வாசகத்தை நிறுத்தாமல் இழுத்தாள் சித்ராதேவி.

"அந்தப் பெண்தான் சித்ரா! எந்தப் பெண் உன் தகப்பனால் கல்யாண ஊர்வலத்திலிருந்து தூக்கிச் செல்லப்

பட்டாளோ, எந்தப் பெண் தோரமானாவால் இதே மாளிகை யிலிருந்து காப்பாற்றப்பட்டாளோ அதே காமினிதான் இப் பொழுது தோரமானாவின் அந்தரங்க அதிகாரி! அவளிடம் போகச் சொல்லி உன்னை மூலஸ்தானபுரத்திலிருந்து அனுப்பினேனே நினைவிருக்கிறதோ? சரியான சந்தர்ப்பத் தில் தோரமானா அவளை இங்கு அனுப்புகிறான். தோர மானாவைத் தீர்த்துக் கட்ட சதி நடக்கும் இந்தத் தருணத்தில் தோரமானாவின் உடலில் துரும்பு பட்டாலும் சகியாதவளும், பழைய நாளில் பட்டிக்காட்டுப் பெண்ணாயிருந்தாலும் இன்று பெரிய ராஜ தந்திரியுமான காமினி இங்கு வரும் காரணம் மந்தபுத்தியுள்ள பல்தேவுக்குக் கூடத் தெரிய வேண்டும். இங்கு நடக்கும் சதியைப் பற்றிய தகவல் தோர மானாவுக்குத் தெரிந்திருக்குமென்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை" என்று விவரித்துக்கொண்டே போன அஜித் சந்திரன் ஒரு நிமிஷம் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு மெள்ள சமாளித்துக்கொண்டு, "இதையெல்லாம் பற்றிப் பேசுவதற்கு சமயமிருக்கிறது சித்ரா! இப்பொழுது நாம் புது வீட்டிற்குப் போவோம்" என்று சொல்லிக் கொண்டு அறையிலிருந்து கிளம்பினான். சித்ராதேவியும் பேசாமல் அவனைப் பின்தொடர்ந்தாள்.

சண்பகத் தோட்டத்தை அடையும் வரையில் இருவரும் மௌனமாகவே சென்றார்கள். இருவர் உள்ளங்களிலும் கேள்வி பதில்கள் எழுந்து தாக்கிக் கொண்டிருந்ததால் இருவரும் பேசும் ஸ்திதியிலேயே இல்லை. சண்பகத் தோட்டத்தில் புகுந்து செல்கையில் மட்டும் சித்ராதேவி ஒரு கேள்வி கேட்டாள்: "இந்த அந்தரங்க அதிகாரி யார் என்பது பல்தேவுக்குத் தெரியுமா?" என்று.

"இதுவரை தெரியாது. அவர்களிருவரையும் சந்திக்கத் தோரமானா அனுமதிக்கவில்லை" என்றான் அஜித் சந்திரன்.

"ஏன்?" என்று கேட்டாள் சித்ராதேவி.

"காமினிக்குப் பல்தேவ் சரியான கணவனல்ல என்பது தோரமானாவின் அபிப்பிராயம்" என்று பதில் சொன்னான் அஜித் சந்திரன்.

"இந்த விஷயத்தில் தீர்ப்புச் சொல்ல தோரமானாவுக்கு என்ன உரிமை?"

"கணவன் கைவிட்ட போது உன் தகப்பனாரிடமிருந்து அவளைக் காப்பாற்றிய உரிமை."

"உபாத்தியாயரே...!"

"உம்..."

"காமினி புருஷனைத் துறந்து தோரமானாவிடம் பல வருஷங்கள் இருப்பதைப் பற்றி மக்கள் என்ன நினைப் பார்கள்?"

"நீயும் நானும் மாளிகையில் தனித்திருப்பதையும் நான் இராக்காலங்களில் வெகுநேரம் உன் அறையில் செலவழிப் பதையும் பார்க்கும் நமது வீரர்கள் என்ன நினைப்பார்கள்?"

"போங்கள் உபாத்தியாயரே..." என்றாள் சித்ராதேவி உள்ளே உவகையுடன், ஆனால் வெளிக்கு அலுப்புடன்.

உபாத்தியாயன் புத்தி வேறு துறையில் உலாவிக் கொண் டிருந்தபடியால் உள்ள நிலைமையை அலசியே அவன் பேசி னான். "மக்கள் நினைப்பதைக்கொண்டு தனிப்பட்டவர்கள் நடத்தையைத் தீர்மானிக்க முடியாது சித்ரா! வயது வந்த பெண்ணும் ஆணும் ஒருவருக்கொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டால் கூட உலகம் விபரீத அர்த்தத்தையே கற்பிக் கிறது. அதற்கு ஓரளவு காரணமும் இருக்கலாம். ஆனால் சாதாரண விதிகளுக்கு விலக்கான உயர்ந்த மனிதர்களும் இருக்கிறார்கள். கடமைக்காக இயற்கை உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் மனிதர்கள் இந்த பாரதத்தில் என்றும் இருக் கிறார்கள்" என்று சொல்லிக்கொண்டு போன உபாத்தி யாயன் சொற்களைச் சித்ரா விஷமத்துடன் வெட்டி, "ஏன்

இப்பொழுதும் இருக்கிறார்கள். உதாரணமாக உபாத்தி யாயரைச் சொல்லலாம்" என்றாள்.

உபாத்தியாயனும் சிரித்துக்கொண்டே, "கண்டிப்பாய்ச் சொல்லலாம். இந்த உண்மையை உன்னைவிட யார் அறிந் திருக்க முடியும் சித்ராதேவி? நானும் உன் தகப்பனார் வர்க்கத்தில் சேர்ந்தவனாயிருந்தால்..." என்று இழுத்தான்.

"போதும் உபாத்தியாயரே! சிஷ்யையுடன் பேசும் பேச்சு நன்றாயிருக்கிறது."

"உபாத்தியாயர் இப்படிப் பேசுவதற்கு சிஷ்யைதான் காரணம்."

"உபாத்தியாயர் மட்டும் ரொம்ப நல்லவர். இதே சண்பகத் தோட்டத்தில் உபாத்தியாயர் நடந்துகொண்ட முறை ரொம்ப மெச்சத் தகுந்தது."

"வாலிப உபாத்தியாயருடன் யுவதியான சிஷ்யை தனித்து வந்ததால் நடந்த விபரீதம் அது. இந்த விவகாரங் களைப் பெற்றோர்கள் யோசித்து அதற்குத் தக்கவாறு நடந்திருக்க வேண்டும்.."

"அப்பொழுது நீங்கள் அடிமை."

"அங்குதான் பலர் ஏமாந்து போகிறார்கள். அந்தஸ்து இயற்கைக்கு அணை போடும் என்பது உலகத்தின் கனவு! அடிமையாயிருந்தாலும் புருஷன் புருஷனே என்பதைப் பலர் மறந்து விடுகிறார்கள். உன் தகப்பனாரும் அதை மறந்ததால் தான் இத்தனை உபத்திரவமும்."

சித்ரா பதிலுக்குச் சிரித்தாள். இப்படிப் பேசிக் கொண்டு சித்ராதேவியும் அஜித் சந்திரனும் புது வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். சாத்தியிருந்த வீட்டின் கதவை மூன்று முறை லேசாகத் தட்டினான் உபாத்தியாயன். கதவை ஒரு ஹூணன் திறந்தான். அவனிடம் ஏதோ சைகை காட்டி

னான் உபாத்தியாயன். அந்த ஹூணன் பேசாமல் உபாத்தி யாயனுக்கு சித்ராவுக்கும் வழிவிட்டு நின்றான். இருவரும் உள்ளே வந்த பிறகு கதவைச் சாத்தித் தாளிட்டு முன்னே வழிகாட்டி நடந்தான். இரண்டு கட்டுக்களைத் தாண்டியபின் பெரிய கூடம் வந்தது. அதன் மத்தியில் மூன்று ஹூணர் களுடனும் இரண்டு வில்லவருடனும் பல்தேவ் உட்கார்ந்து கொண்டிருந்தான். மூன்று ஹூணர்களும் பல்தேவும் மதுவருந்தி மிகக் கோலாகலத்திலிருந்தார்கள். வாய்விட்டுச் சிரித்துவிட்டுக் கிண்ணத்து மதுவைப் பருகிக் கொண்டிருந்த பல்தேவின் மயக்கநிலை உபாத்தியாயனைக் கண்டதும் பறந்து விட்டது. அத்துடன் பயமும் அவன் முகத்தில் பலமாகப் படர்ந்தது. "உள்ளே எப்படி வந்தீர்கள்?" என்று இரைந்தான் பல்தேவ். "சதிகாரர்கள் வீட்டில் கதவைத் தட்டும் முறையும் காட்ட வேண்டிய சைகையும் கற்றுக் கொண்டேன்" என்று பதில் சொல்லிக்கொண்டே கூடத்தி லிருந்த சதிக் கூட்டத்தின் மேல் அலக்ஷியமும் வெறுப்பும் கலந்த பார்வையை வீசினான் உபாத்தியாயன்.

உபாத்தியாயனை நெருங்கி வந்த பல்தேவ் உபாத்தி யாயனுக்குப் பின்னால் சித்ராவும் நிற்பதைப் பார்த்தான். அவன் முகத்தில் சந்தோஷக்குறி தாண்டவமாடியது. மூலஸ்தானபுர தர்மசாலையில் மற்றோரிரவில் தெரிந்த வெறி இன்றும் காணப்பட்டது. "சித்ராதேவி! வ வேண்டும்" என்று குடிவெறியால் தள்ளாடிக்கொண்டே அவளை நெருங்க முற்பட்டான். குறுக்கே இரும்பென நீண்ட உபாத்தியாயன் கரம் தள்ளாடிய அவன் உடலை சரேலெனத் தடுத்து நிறுத்தியது.

44. அவள் உன் மனைவி

அஜித் சந்திரனால் தடுக்கப்பட்ட பல்தேவ் ஒரு வினாடி வெகுண்டான். மறுவினாடி பலமாகச் சிரித்தான். குடியின் சக்தி மிக விசித்திரமானது. சிரிப்பு, அழுகை, கோபம் அங்க சேஷ்டைகள் ஆகிய சகல விகாரங்களையும் மின்னல் வேகத்தில் மாறிமாறி அளிக்கக்கூடிய மருந்து உலகத்தில் ஏதாவது உண்டென்றால் அது குடிதான். இத்தகைய விசித்திர மருந்தைப் பருகுபவர்களுக்கும் புத்தி நிதானத் தோடு உடல் நிதானமும் அடியோடு குலைந்து போவதால் அவர்களைச் சமாளிப்பது மிகவும் சுலபம். ஆகவே, பல்தேவின் பயங்கரச் சிரிப்பையோ கோபத்தையோ சிறிதும் லக்ஷியம் செய்யாத அஜித் சந்திரன் தன் கையால் பல்தேவைப் பின்னுக்கு ஒரு தள்ளு தள்ளிவிட்டுச் சித்ரா தேவியை அழைத்துக்கொண்டு கூடத்துக்குள் சென்றான். அஜித் சந்திரன் போக்கு பல்தேவைப் பெரிதும் நிதானப் படுத்தவே பல்தேவும் அவர்களைத் தொடர்ந்து கூடத்தின் நடுவுக்கு வந்தான். எதிரே உட்கார்ந்த இரு வில்லவர் களையும் எழுந்திருக்கச் சொல்லி உபாத்தியாயன் கேட்டுக் கொண்டது மேலுக்கு மரியாதையாகத் தோன்றினாலும் அவன் குரலில் ஓடிய கடுமையும் அதிகார தொனியும் வில்லவரைச் சற்று நடுங்க வைத்ததன்றி உடனே அவன் கட்டளைக்குக் கீழ்ப்படியவும் தூண்டியது.

உபாத்தியாயன் சித்ராவை ஓர் ஆசனத்தில் அமர்த்தி, தானும் அவள் பக்கத்தில் சாவதானமாக உட்கார்ந்து கொண்டான். உபாத்தியாயனின் இந்த நடவடிக்கைகள் கூடத்துக் குடிகாரர்களிடையே ஆச்சரியத்தையும் பீதியையும்

விளைவிக்கவே, அவர்களும் ஓரளவு நிதானத்தை அடைந் தனர். "பல்தேவ்! இங்கு யாராவது வேலையாட்கள் இருந் தால் கூப்பிடு" என்ற உபாத்தியாயனுடைய அடுத்த கட்டளை அவர்கள் போதையை அடியோடு ஓட்டிவிட்டது. சதிக் கூட்டத்துக்கிடையில் ஒரு பெண்ணைத் தவிர வேறு துணையின்றி இவன் வந்ததன்றி இருக்கிறவர்களையெல் லாம் மிரட்டுகிறானே என்று நினைத்த ஹூணர்களில் ஒருவன், "எதற்கு வேலைக்காரர்கள்" என்றான் சற்று அதட்டலாக.

உபாத்தியாயனுடைய உஷ்ணமான பார்வை அந்த அதட்டலை உடனே மறையச் செய்தது. "நீ ஹூண வீரனா யிருந்தால் ஹூணர்களின் உபசேனாதிபதியிடம் பேசுகிறாய் என்பதை நினைவில் வைத்துக்கொள். சதிகாரனாயிருந்தால் இந்த வீட்டையும் உங்களையும் ஒரு நிமிஷத்தில் ஒழித்துக் கட்டக்கூடிய உபாத்தியாயனுடன் பேசுகிறாயென்பதைத் தெரிந்துகொள்" என்று அந்த ஹூணர்களைப் பார்த்துப் பேசிய உபாத்தியாயன் சித்ராவுக்காகக் கண்களைத் திருப்பி, "சித்ரா! தோரமானாவை அழிக்கத் திட்டம் போடும் சதிகாரக் கும்பலின் லட்சணத்தைப் பார்த்தாயா?" என்றான் சற்று ஏளனமாக. அத்துடன் பல்தேவை நோக்கி, "பல்தேவ்! வேலையாட்களைக் கூப்பிட்டு இந்தக் குடிபாண்டங்களை எடுத்துச் செல்லச் சொல். இந்தத் துர்நாற்றத்தில் என்னால் உட்காரவே முடியவில்லை" என்று கூறினான்.

உபாத்தியாயன் போக்கால் நிதானத்துக்கு வந்த பல்தேவ் அவன் கட்டளையை நிறைவேற்றிவிட்டுத் தன்னுடைய பராக்கிரமத்தையும் காண்பிக்கும் உத்தேசத்துடன் "உபாத்தி யாயரே! உங்கள் நிலைமையைச் சற்று யோசித்துப் பேசுங் கள். இது மூலஸ்தானபுர தர்மசாலையன்று! இந்த முறை பல்தேவை விரோதித்துக்கொண்டு தப்பிச் செல்வது

சுலபமல்ல" என்று சொல்லிக்கொண்டு உபாத்தியாயனுக்கு எதிரிலிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

உபாத்தியாயன் இதழ்களில் இகழ்ச்சி கலந்த புன்னகை தெரிந்தது. "அகப்பட்டுக் கொண்டவனல்லவா தப்பிச் செல்வதைப்பற்றி யோசிக்க வேண்டும்" என்றான் உபாத்தியாயன்.

"இப்பொழுது நீங்கள் சுதந்திரமாக இருப்பதாக அபிப்பிராயமா?" என்று பல்தேவ் உரக்கச் சிரித்துக் கொண்டே கூடத்து வாயிற்படிக்காகக் கண்களை ஓட்டினான். பல்தேவ் கண்கள் சென்ற திக்கில் சித்ராவும் திரும்பிப் பார்க்கவே, அவள் முகத்தில் சற்றுக் கவலைக் குறி படர்ந்தது. உபாத்தியாயனால் எழுப்பப்பட்ட வில்லவரிருவரும் இந்த சம்பாஷணைக்கிடையில் மெள்ள வாயிற்படிக்காக நகர்ந்து வாயிற்படியை உருவிய கத்தியுடன் காவல் புரிந்து நின்றனர்.

உபாத்தியாயன் பல்தேவின் சிரிப்பை மட்டுமின்றி, சித்ராவின் கவலையையும் கண்டான். ஆனால், பின்பக்கம் அவன் திரும்பிப் பார்க்கவும் இல்லை. எந்தவிதமான உணர்ச்சியையும் முகத்தில் காட்டவுமில்லை. "பல்தேவ்! நீ முட்டாளென்பது எனக்கு ரொம்ப நாளாகத் தெரியும்! பயங்கொள்ளி என்பதை உன் கல்யாண ஊர்வலத்தின் போது நானறிந்தேன். ஆனால், இந்த சில வருஷ அனுபவங்களால் உன் ஊகத்தில் அபிவிருத்தியில்லா விட்டாலும், வெகுநாள் படைத்தலைவனாயிருந்ததால் தைரியமாவது சற்று உற்பத்தியாகியிருக்குமென்று நினைத்தேன். அதுவும் பூஜ்யமென்று இன்று தெரிகிறது. என் ஒருவனைச் சமாளிக்க எனக்குப் பின்னால் இரண்டு வீரர்களை உருவிய வாட்களுடன் நிறுத்த வேண்டுமென்றால் உன் சுயநலத்திலும் இந்த உன் கூட்டாளிகளின் சாமர்த்தியத்திலும் உனக்கு எவ்வளவு

நம்பிக்கையிருக்க வேண்டும்? இத்தகைய பயங்கொள்ளிகளாகிய நீங்கள், தோரமானாவை அழிக்கத் திட்டம் போட்டிருப்பதுதான் எனக்கு விந்தையாயிருக்கிறது" என்று நிதானமாகப் பேசிய உபாத்தியாயன் ஆசனத்தில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்துகொண்டான்.

அந்த ஆறு சதிகாரர்களுக்கிடையில் அவன் அலக்ஷியமாக உட்கார்ந்து பேசிய தோரணையைக் கண்டு சித்ரா ஆச்சரியப்படவில்லை. இதைவிடத் தீவிரமான சந்தர்ப்பங்களை அவன் சமாளித்திருப்பதை அவள் பார்த்திருக்கிறாளல்லவா? ஆனால், அவன் பின்புறம் திரும்பாமலே வில்லவர் வாயிலை அடைந்ததை எப்பொழுது கவனித்தான் என்பதுதான் அவளுக்குப் பெரிய ஆச்சரியமாயிருந்தது. அவள் முகத்தில் தெரிந்த ஆச்சரியத்தைக் கவனித்த உபாத்தியாயன், "இதிலொன்றும் ஆச்சரியமில்லை சித்ரா! கொஞ்சம் நாகரிகமுள்ள மனிதர்களானால் உன்னைப் போன்ற ஒரு ஸ்திரீ உள்ளே வந்தபோதே எழுந்து இடங் கொடுத்திருக்க வேண்டும். அப்படி இடங்கொடுக்காததால் நான் அவர்களை எழுப்ப வேண்டியதாயிற்று. எழுந்த இருவரும் உன்னை உட்கார வைக்கும் சமயத்தில் எதிரேயாவது நின்றிருக்க வேண்டும். அதில்லாமல் உனக்கு நான் ஆசனத்தைச் சரிப்படுத்தியபோதே மரவட்டைகள் மாதிரி மெல்லப் பக்கவாட்டில் நகர்ந்தார்கள். போகிறவர்களின் நடையையும் மாதிரியையும் பார்க்கையிலேயே உத்தேசம் புரிந்துவிடுகிறதல்லவா? தவிர செம்மையான மரங்கள் மாதிரி இருக்கும் இரண்டுபேர் கண்ணுக்கெதிரேயிருந்து மறைந்தால் அதைக் கூட கவனிக்க முடியாத அளவுக்கு உபாத்தியாயன் பார்வை மங்கவில்லை" என்றான்.

அவன் திரும்பத் திரும்ப தங்களை ஏதோ வேலைக்காரர்கள் மாதிரி மதித்து மிக அவமரியாதையாகப் பேசுவதைச் சகியாத வில்லவர்களில் ஒருவன் திடீரென்று பின்

பக்கத்திலிருந்து வாளை ஓங்கினான். அதே சமயத்தில் எங்கிருந்தோ எழுந்த உபாத்தியாயன் வாள் பல்தேவின் கழுத்தைத் தடவிக்கொண்டிருந்தது. சாய்ந்து உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்திருக்காத உபாத்தியாயன் மிகக் கடுமை யான குரலில் "பல்தேவ்! இந்த மடையர்களை அவரவர்கள் ஆயுதங்களைக் கூடத்தின் கோடியில் என் கண் எதிரே ஒரு மூலையில் போடச் சொல்; எவனிடமாவது ஓர் ஆயுதமிருந் தாலும் அவன் உயிர் அரைக்காசு பெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உன் சகாக்கள் சிறிது நேரம் இந்தக் கட்டளையை நிறைவேற்றத் தாமதித்தால் உன்னை அரை விநாடியில் மோக்ஷத்துக்கு— இல்லை, அங்கு ஏது உனக்கு இடம்— நரகத்துக்கு அனுப்பிவிடுவேன்" என்று கூறினான்.

தன் அபாய நிலையை அறிந்துகொண்ட பல்தேவ் பயத்தால் மலை போன்ற மேனியில் வியர்வை ஆறாகப் பெருக உடல் வெலவெலத்துப் போய், "ஏன் நிற்கிறீர்கள் மடையர்களா?" என்று தன் சகாக்களை நோக்கி இரைந்தான். அடுத்த விநாடி சதிகாரர்களின் ஆயுதங்கள் கூடத்தின் மூலையில் குவிந்தன. அஜித் சந்திரன் கத்தியும் பழையபடி உறைக்குள் போய்விடவே அவரவர் நிதானமாக ஆசனத்தில் அமர்ந்து கொண்டனர். வாயிலைக் காத்த வில்லவரையும் உட்காரச் சொன்ன அஜித் சந்திரன் தன் குரலையும் தோரணையையும் பெரிதும் மாற்றிக் கொண்டு பேச லானான்.

"பல்தேவ்! நான் ஒரு நண்பன் என்ற முறையில் இங்கு வருகிறேன். நீ உன் பழைய இச்சையை மறக்காமல் சித்ரா தேவியின் மேல் கை வைக்க முயல்கிறாய். நீ திட்டமிடுவதோ பெரிய சதிச் செய்கை. இதில் கலந்து கொள்பவர்கள் பரஸ்பரம் நம்பிக்கையுடனும், ஒழுங்குடனும் நடந்து கொண்டாலொழிய காரியம் கைகூடுவது கஷ்டம். என்னை

இந்த வீட்டில் வைத்துப் பூட்டிவிட்டாலோ கொன்று விட்டாலோ நீ தப்பித்து விடலாமென்று நினைக்கிறாயா? அவ்வளவு தூரத்துக்கு அஜித் சந்திரன் உன்னை நம்பி எந்த முன்னேற்பாடுமில்லாமல் இங்கு வருவானென்று மனப்பால் குடிக்கிறாயா? உன்னைத் தவிர இங்கிருக்கும் மற்றவர்களை எனக்குத் தெரியாது. இந்த வீட்டின் மேல் நான் ஏற்கெனவே ஒரு கண் வைத்திருக்கிறேனென்பதையும் இதன் தகவல்கள் பூராவும் எனக்குத் தெரியுமென்பதையும் சித்ராவிடம் நான் கொடுத்தனுப்பிய கடிதமே உனக்கு விளக்கியிருக்கும். அப்படியிருக்க நான் சித்ராவுடன் உன்னிடம் அகப்பட்டுக் கொள்வதற்காகவே எந்த ஏற்பாடுமில்லாமல் புறப்பட்டு வந்திருப்பேனென்று நினைப்பாயானால், அதைவிடப் பைத்தியக்காரத்தனம் வேறென்ன இருக்க முடியும்? ஆகவே, அந்த யோசனையை விட்டுவிட்டுச் சதியில் கூட்டாளிகள் என்ற முறையில் பேசுவோம்," என்றான் உபாத்தியாயன்.

கூடத்திலிருந்த மற்ற சதிகாரர்கள் பல்தேவைப் பார்த் தார்கள். நயமும் பயமும் கலந்த உபாத்தியாயன் பேச்சி னாலும் நடவடிக்கையாலும் கலங்கிப் போயிருந்த பல்தேவ், "உங்களை நான் எப்படி நம்ப முடியும்? நீங்கள் எங்களைக் காட்டிக் கொடுக்கமாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்?" என்று கேட்டான்.

"நான் உங்கள் கூட்டத்தில் சேருவதே உங்களுக்குத் தகுந்த பாதுகாப்பாயிற்றே. நான் உங்கள் கோஷ்டியில் சேர்ந் திருப்பதை தோரமானாவுக்கு அறிவித்தால் உபாத்தியாயன் தலை அடுத்த நிமிஷம் உருண்டோடிவிடுமே," என்று உபாத்தியாயன் சொல்லிவிட்டுப் பல்தேவைப் பார்த்துச் சிரித்தான்.

சிரிப்பு எதற்காக என்று பல்தேவுக்குப் புரிந்துகொள்ள முடியாமற் போனாலும், உபாத்தியாயன் சொன்ன காரணம்

சற்றுத் தைரியத்தை ஊட்டவே தங்கள் சதித் திட்டத்தை விவரித்தான்.

"தோரமானா அடிலனைத் தூக்கிலிட்டதை விரும்பாத பலர் ஹூண ராஜ்யத்திலிருக்கிறார்கள்" என்ற பல்தேவின் சொற்களை இடைமறித்து, "அதில் மாப்பிள்ளை பல்தேவும் ஒருவர்" என்றான் அஜித் சந்திரன் சற்று அழுத்தமாக.

உபாத்தியாயன் குறுக்கீடு பல்தேவுக்குப் பெரும் சங்கடத்தை உண்டாக்கியது. தன் மனைவியைத் தூக்கிச் சென்றவனுக்குப் பரிந்து தான் பேசுவதையே அஜித் சந்திரன் சுட்டிக் காட்டுகிறானென்பதைப் பல்தேவ் புரிந்துகொண்டான். இருந்தாலும் சமாளித்துக்கொண்டு, "அது பழங்கதை உபாத்தியாயரே! அடிலனிடம் சாட்டையாலடிக்கப்பட்ட உபாத்தியாயரே அந்தக் குடும்பத்தின் மீது பரிவு காட்டும் போது என்னைப் போன்ற அற்பர்கள் பரிவு காட்டுவது ஆச்சரியப்பட்டத்தக்கதன்று" என்று சொன்ன பல்தேவ், தான் உபாத்தியாயனுக்குப் பதில் சூடு கொடுத்துவிட்டதாக நினைத்துப் பெருமையுடன் பக்கத்திலிருப்பவர்களைப் பார்த்தான். அவர்களும் புன்முறுவல் செய்ததைப் பார்த்த உபாத்தியாயன் லேசாகச் சிரித்து, "அடிலன் அடித்தாலும் சித்ராதேவியின் ஆதரவாவது எனக்குக் கிடைத்தது. உனக்கு அதுவுமில்லாதிருக்க எந்தக் காரணத்தால் நீ அடிலனுக்காகப் பழிவாங்க முன்வந்திருக்கிறாய்!" என்று கேட்டான்.

அதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் ஒரு விநாடி தவித்த பல்தேவ், "சித்ராதேவி தம்பியினிடத்தில் உள்ள அன்பினால்" என்றான்.

"சித்ராதேவியின் தம்பிக்கு உன்னிடம் அன்பு ஏற்படக் காரணம்? அவன் சகோதரியைத் துன்மார்க்கமாக நடத்த முயன்றதற்கா?" என்று உபாத்தியாயன் மீண்டும் கேட்டான்.

பல்தேவ் விழித்தான். கடைசியில், "உபாத்தியாயரே! நான் வெறும் பேச்சுக்காரனல்ல. என் அன்பை..." என்ற பல்தேவின் வார்த்தையில் மீண்டும் உபாத்தியாயன் குறுக்கிட்டு, "காரியத்தில் காண்பிப்பாய். நல்லது. இப்பொழுது உன் திட்டம் என்னவென்று சொல்" என்று கேட்டான்.

பல்தேவ் ஒரு நிமிஷம் மௌனமாயிருந்துவிட்டு விவரித்தான். "அடிலன் மகனைத் தோரமானாவின் ஸ்தானத்தில் வைக்கவேண்டும். அதற்குத் தோரமானா முதலில் ஒழிய வேண்டும்" என்றான்.

"எண்ணம் சரிதான். ஆனால், என்ன வழி?" என்று உபாத்தியாயன் வினவினான்.

"அடுத்த வாரம் தோரமானா இங்கு வரப்போகிறான். அவனை வரவேற்க ஏற்பாடுகள் பலமாகச் செய்யப்படுகின்றன. ஊர்வலத்தில் புருஷபுரத்துத் தெருக்களைத் தாண்டி வில்லவர் வீடுகளுக்காகத் தோரமானா வரும்போது அவன் மார்பைக் குறிவைத்து ஒருவன் அம்பு எய்வான்" என்று பல்தேவ் விவரித்தபோது அங்கிருந்த வில்லவர் இருவரும் புன்முறுவல் காட்டினர்.

உபாத்தியாயன் அவர்களை மிகவும் வெறுப்புடன் கவனித்து விட்டு, "தோரமானா அடுத்த வாரம் இங்கு வரப் போவதில்லை" என்று வெகு நிதானமாகச் சொன்னான்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று பல்தேவ் கேட்டான்.

"தோரமானாவிடமிருந்தே செய்தி கிடைத்திருக்கிறது! அவர் உபசேனாதிபதியல்லவா நான்?" என்று அஜித் சந்திரன் பதில் சொன்னான்.

"அப்படியானால் கிங்கலனிடமிருந்து மலைவாசலைக் காக்கப்போவது யார்? இந்தப் புது அபாயத்தைச் சமாளிக்கத் தோரமானா வருவதாகத் திட்டமிட்டிருந்ததே?" என்ற

குழப்பத்துடன் கேட்ட பல்தேவின் முகத்தில் பெரிய ஏமாற்றமும் கிலியும் தென்பட்டன.

"தோரமானா வராவிட்டால் என்ன? தன் அந்தரங்க அதிகாரியை அனுப்பியிருக்கிறார்" என்றான் உபாத்தியாயன் சாவதானமாக.

"யார் அது அந்தரங்க அதிகாரி?" என்று பயத்துடன் கேட்ட பல்தேவின் முன்பாக, "உன் மனைவி காமினி" என்று பெரிய வெடியை எடுத்து வீசினான் உபாத்தியாயன்.

"என்ன உபாத்தியாயரே? என்ன சொன்னீர்கள்?" என்று பயங்கரமாகக் கூச்சலிட்டுக் கொண்டு கோபம் முகத்திலேற, உடல் உணர்ச்சியால் கடகடவெனக் குலுங்க ஆசனத்திலிருந்து திடீரென எழுந்தான் மாப்பிள்ளை பல்தேவ்.

45. எதிர்பாராத சந்திப்பு

பேரதிர்ச்சியை விளைவிக்கும் அந்தத் தகவலைக் கேட்டதும் பல்தேவ் அடியோடு நிலைகுலைந்து போனாலும் அஜித் சந்திரன் பேச்சு பொய்யாயிருக்கலாம் என்ற உத்தேசத்தால் நிதானத்துக்கு வந்து, "உபாத்தியாயரே, இது நிஜந்தானா?" என்று சந்தேகமும் உணர்ச்சி மிகுதியால் ஆட்டமும் கலந்த குரலில் கேட்டான்.

உபாத்தியாயன் சற்று நேரம் அவனைக் கூர்ந்து கவனித்துவிட்டு, "சர்வ வல்லமையுள்ள கடவுள் சாட்சியாக உண்மை" என்று பதில் சொன்னான்.

"என் மனைவி, கேவலம் பட்டிக்காட்டுப் பெண்..." என்று ஆரம்பித்தான் பல்தேவ்.

"ஆனால் அறிவாளி" என்று முடித்தான் அஜித் சந்திரன்.

"கல்யாண ஊர்வலத்தன்று பலவந்தமாகத் தூக்கிச் செல்லப்பட்டதை நானே பார்த்தேன்!"

"அவள் தோரமானாவின் அந்தரங்க அதிகாரியா யிருப்பதை நானே பார்த்திருக்கிறேன்."

"அடிலன் பலாத்காரத்திலிருந்து அவளைத் தப்புவிப்பது சாத்தியமா?"

"சாத்தியம் என்பதைத்தான் தோரமானா நிரூபித்து விட்டானே!"

"அதனால்..."

"காமினி அவனிடம் ஆழ்ந்த பக்தியும் நன்றியும் உடையவளாயிருக்கிறாள். அவள் அறிவைக் கண்ட தோரமானா

அவளுக்குக் கல்வி கற்பித்தான். அவள் ஆற்றலைக் கண்ட தோரமானா அவளுக்கு ராஜதந்திரங்களைச் சொல்லிக் கொடுத்தான். ராஜதந்திரத்தைப் போதிக்கக் கூடியவர்கள் பாரதத்தில் இன்று இருவர்தானிருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் தோரமானா! இன்னொருவர்..."

இந்த இடத்தில் உபாத்தியாயன் வார்த்தையை மெள்ள வெட்டிய சித்ராதேவி, "குப்த மன்னர்" என்றாள்.

அந்தப் பெயரைக் கேட்ட உபாத்தியாயன் ஒரு விநாடி தலையைத் தாழ்த்தி மௌனமாயிருந்து விட்டு, தன் பேச்சைத் தொடர்ந்தான். "அதிருக்கட்டும், இப்பொழுது தோரமானா வைப் பற்றியல்லவா பேசிக் கொண்டிருக்கிறோம். தோர மானாவின் பயிற்சியால் இன்று காமினி பெரிய ராஜ தந்திரியாயிருக்கிறாள். அவன் செய்த உதவிக்காக அவனிடம் ஆழ்ந்த பக்தியுள்ளவளாயிருக்கிறாள். இப்படி பக்தியும், உறுதியும், அறிவும், ராஜ தந்திரமும் நிரம்பிய காமினி கிங்கலனைச் சமாளிக்கவும் வேறு சில விஷயங்களைக் கண்காணிக்கவும் மலைவாசல் வந்திருக்கிறாள்" என்று உபாத்தியாயன் விவரித்தான்.

அதுவரையில் மஞ்சத்தைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த பல்தேவ் தொப்பென ஆசனத்தில் உட்கார்ந்து ஏதோ யோசனையில் லயித்துவிட்டான்; சித்ராதேவி மட்டும் உபாத்தியாயனை நோக்கிக் கேட்டாள், "யார் அந்தக் கிங்கலன்" என்று.

"பாரதத்தின் வடமேற்கு எல்லையிலிருக்கும் ஹூணர் களின் தலைமைச் சேனாதிபதி கிங்கலன். பல யுத்தங்களில் தோரமானாவுடன் தோளுக்குத் தோள் நின்று போர் புரிந்தவன். தந்திரம் ஒன்றில் தவிர தோரமானாவுக்கு எந்த விதத்திலும் சளைத்தவனல்ல! யாருடைய குரூரத்தைக் கண்டாவது தோரமானா பயப்படுவானென்றால் அது கிங்கலனுடைய குரூரத்தைக் கண்டுதான். கிங்கலன்

அடிலனின் நண்பன். தன் நண்பன் தூக்கிலிடப்பட்டதைக் கேட்டு ஹூணர்களை மலைவாசல் மேல் ஏவத் தயாரா யிருக்கிறான். தவிர, தோரமானா ஹிந்துக்களை அன்பாக நடத்துவதும் கொள்ளையடிக்க ஹூணர்களை அனுமதிக் காததும் கிங்கலனுக்கு அடியோடு பிடிக்கவில்லை. இந்தக் காரணங்களால் தோரமானாவை முறியடிக்கக் கிங்கலன் திட்டமிட்டு வருகிறான்" என்று விவரித்தான் உபாத்தியாயன்.

"மலைவாசல்தான் தோரமானாவின் வீரர்களால் அடைக்கப்பட்டுக் கிடக்கிறதே. அப்படியிருக்கத் தோரமானா என் தந்தையைத் தூக்கிலிட்டது கிங்கலனுக்கு எப்படித் தெரியும்?" என்று சித்ராதேவி கேட்டாள்.

இந்தக் கேள்விக்கு உபாத்தியாயன் நேரிடையாகப் பதில் பேசவில்லை. மலைவாசலைத் தாண்டிப் பயங்கரமான கணவாய் வழியாகப் பனி உரைந்த மலைகளைக் கடந்து கபீசத்துக்குச் செல்வது சாமானியமான காரியமன்று என்பது எல்லோருக்கும் தெரியும். தவிர, மலைவாசல் மூலமாக உள்ளே வரவே முடியாதபடி பயங்கரமான காவலைத் தோர மானாவின் உத்தரவுப்படி அஜித் சந்திரனே ஏற்படுத்தி யிருக்கிறான். உத்தரவின்றி யாராவது மலைவாசலைத் தாண்ட முயன்றாலும் அம்பெய்து கொன்று விடும்படி உத்தரவிட்டிருந்தவனும் உபாத்தியாயன்தான்.

இதையெல்லாம் அறியாதிருந்ததால் எப்படி கிங்கல னுக்குப் பாரதத்திலிருந்து தகவல் போயிற்றென்று சித்ரா வுக்குப் புரியவில்லை. ஆகையால்தான் அப்படி ஒரு கேள்வி யைக் கேட்டாள். அசந்தர்ப்பமான அந்தக் கேள்விக்கு நேரிடையான பதில் சொல்லாமல் உபாத்தியாயன், "கிங்கலன் மலைவாசலைத் தாக்குவது நிச்சயமென்று அறிந்துதானே தோரமானா காமினியை இங்கு அனுப்பி யிருக்கிறான். கிங்கலனிருக்கும் பிராந்தியத்திலிருந்து தோர மானாவுக்குத் தகவல் கிடைப்பது சாத்தியமானால்

இங்கிருந்து அங்கு தகவல் போவது மட்டும் பிரமாதமா?" என்று கேட்டான்.

வாதத்தை முறிக்கும் பதில்தான். ஆனால், அதில் சித்ரா தேவிக்குப் பூரண திருப்தியில்லை. மேற்கொண்டு அது விஷயமாக உபாத்தியாயன் அவளை யோசிக்க விடாமல், "அது கிடக்கட்டும் சித்ராதேவி! நான் சொல்லிய விஷயங் களைப் பூரணமாக நீ ஆராயவில்லையே. காமினி, கிங்கலனை மட்டுமல்ல வேறு விவகாரங்களையும் கவனிக்க வந்திருக்கிறாள் என்று சொன்னேனே, அதில் நாம் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியம்" என்று சற்று அழுத்தமாக உபாத்தியாயன் சொன்னான்.

"எந்த விவகாரங்களைக் குறிப்பிடுகிறீர்கள் உபாத்தி யாயரே?" என்று பல்தேவ் கேட்டான்.

"நம் சதி விவகாரங்களைத்தான்" என்று பதில் கூறினான் உபாத்தியாயன்.

அதுவரை அசந்திருந்த மற்ற ஹூணர்களும் வில்லவரும் ஆசனத்திலிருந்து எழுந்து விட்டார்கள். அவர்கள் முகத்தில் விவரிக்க இயலாத கிலி படர்ந்திருந் தது. "என்ன இந்தச் சதி விவரங்கள் தோரமானாவுக்குத் தெரியுமா?"

"நீங்கள் வந்த தினத்திலிருந்து உங்கள் நடவடிக்கைகளை நானே கவனித்திருக்கும்போது தோரமானாவின் ஒற்றர்கள் கவனிக்காமலா இருப்பார்கள்!" என்று உபாத்தியாயன் கேட்டான். அத்துடன் "தோரமானாவுக்குத் தெரிந்தால் தானென்ன?" என்றும் ஒரு கேள்வியைப் போட்டு வைத்தான்.

"தெரிந்தால் என்னவா? அடுத்த நிமிஷம் நாம் தூக்கில் தொங்கமாட்டோமா?" என்றான் ஒரு ஹூணன் நடுக்கத் துடன்.

"சதிக் கூட்டத்தில் சேர்ந்தவர்கள் தங்கள் கதியைப் பற்றி யோசிப்பதில் என்ன பயன்? உயிரைப் பணயம் வைத்துதான் இந்த மாதிரி வேலையில் இறங்க வேண்டும்."

உபாத்தியாயனின் இந்தப் பதிலைக் கேட்ட இன்னொரு ஹூணன் பல்தேவை மிகச் சூடாகப் பார்த்து, "என்ன பல்தேவ்! இதில் ஆபத்து ஏதுமில்லை, திட்டம் தயாராக இருக்கிறதென்று நீ சொல்லவில்லையா?" என்று கர்ஜித் தான்.

பல்தேவ் பதில் சொல்லுமுன் உபாத்தியாயன் குறுக் கிட்டு, "பல்தேவ் வேடிக்கைக்குச் சொல்லியிருப்பான்" என்றான்.

"தூக்கில் தொங்குவது ஒரு வேடிக்கையா?" என்று ஒரு வில்லவன் கூவினான்.

"பார்ப்பவர்களுக்கு வேடிக்கையாய் இருக்கும்" என்றான் உபாத்தியாயன், நிதானமாக.

"உபாத்தியாயரே, அதிகமாக விளையாட்டு வேண்டாம்; கடைசியில் வினையில் முடியும்" என்று பல்தேவ் அதட்டிப் பேசினான்.

"அதைத்தான் இந்தச் சதித் திட்டம் விஷயமாக நானும் சொல்கிறேன்" என்று உபாத்தியாயன் இகழ்ச்சி கலந்த குரலில் பதில் சொன்னான்.

"இந்தச் சதித் திட்டம் வினையில் முடியுமென்றால் யாருக்கு வினையென்பதை யோசித்தீர்களா?" என்று பல்தேவ் கூறிவிட்டுத் தான் தோரமானாவைப் பற்றி மறைமுகமாகப் பேசியதாக நினைத்துக்கொண்டு பக்கத் திலிருந்த தன் சகாக்களை நோக்கிப் புன்முறுவல் செய்தான். சகாக்கள் திகிலிலிருந்தபடியால் சாமர்த்தியத்தை மெச்சிப் பதில் புன்முறுவல் செய்யவில்லை.

உபாத்தியாயன் உதடுகளில் மட்டும் வழக்கமான விஷமப் புன்சிரிப்புப் படர்ந்தது. "யாருக்கு வினையென் பதை நான் யோசித்து விட்டேன்" என்றான் உபாத்தியாயன்.

"யாருக்கு?" என்றான் பல்தேவ்.

"அதுதான் முன்பே சொன்னேனே, இந்த சதிக் கூட்டத்தில் சேர்ந்திருக்கும் அன்பர்களுக்குத்தான்" என்று உபாத்தியாயன் விளக்கினான்.

"உபாத்தியாயரே! விளையாட்டை நிறுத்திக் கொள் வோம். இங்குள்ள நாங்கள் சித்ராதேவியின் தம்பிக்காக வேலை செய்யப் பிரதிக்ஞை செய்திருக்கிறோம். தோர மானாவை ஒழித்துக் கட்டுவது எங்கள் திட்டம். தோரமானா இப்பொழுது வராமல் போனாலும் இன்னும் சில நாட்கள் கழித்து வரலாம். அப்பொழுது அவன் மார்புக்கு அம்பு ஒன்று தயாராயிருக்கும். இந்தத் திட்டத்தில் நீங்கள் சேர இஷ்டமா?" என்று பல்தேவ் திட்டமாகக் கேட்டான். அவன் குரலில் ஓர் உறுதியும் அப்பொழுது தொனித்தது.

அஜித் சந்திரன் அவனையும் இதர சதிகாரர்களையும் வெகுநேரம் உற்றுப் பார்த்தான். பிறகு அவன் முகத்திலும் நல்ல உறுதி துலங்கியது. அந்த உறுதி பேச்சிலும் தொனிக்க அஜித் சந்திரன் சொன்னான். "உங்கள் திட்டம் நிறைவேறு வது தோரமானாவைப் பொருத்திருக்கிறது. தோரமானா நமதிஷ்டப்படி மார்பைத் திறந்துகொண்டு தெருக்களில் வருவதானால் உங்கள் திட்டம் நிறைவேறலாம். அப்படி வராவிட்டால்? இப்போது தனக்குப் பதில் காமினியை அனுப்பியதால் இன்னும் பல நாட்களானாலும் வராமலே இருந்துவிட்டால்? திட்டம் தரைமட்டமாகிவிடும். தோர மானாவை நீங்கள் என்னவென்று நினைக்கிறீர்கள்? பைத்தியக்காரனென்றா? அந்த மாதிரி எந்த யோசனையும் வேண்டாம். உலகத்தின் மிகச் சிறந்த மேதாவிகளில் தோர

மானா ஒருவன். அவனுக்கு எந்தவிதத்திலும் சளைக்காதவள் காமினி. இவ்விருவர் பார்வையிலிருந்து இந்தச் சதிவீடு தப்பும் என்று நினைக்கிறீர்களா? இந்த வீட்டுக்குள் வரும் ஒவ்வொருவரும், வெளியே செல்லும் ஒவ்வொருவரும் கண்காணிக்கப்படுவார்களென்பது நினைவிருக்கட்டும். ஆழம் தெரிந்துகொண்டு இதில் காலை விடுவது நல்லது. நீங்கள் இதில் உயிரை மாய்த்துக் கொள்வதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், சித்ராதேவியை இதில் சிக்கவைக்க வேண்டாம். பெண்கள் ஈடுபடக்கூடிய வேலை யல்ல இது" என்றான்.

பல்தேவ் பதிலேதும் சொல்லவில்லை. சித்ரா மிக நிதானமாகப் பதில் சொன்னாள்: "உபாத்தியாயரே! எந்தக் காரியமும் தீவிரமாகத் திட்டமிட்டுச் செய்தால் நடக்கும். இந்தப் பணியில் என் தம்பி ஈடுபட்டிருக்கிறான். என் தகப்ப னாருக்காகப் பழிவாங்கும் காரியம். இதில் நான் கலந்து கொள்ளாமல் எப்படியிருக்க முடியும்? உங்களுக்கு இஷ்ட மில்லையானால் நீங்கள் விலகி நில்லுங்கள்" என்றாள்.

உபாத்தியாயன் அவளைப் பரிதாபத்துடன் பார்த்தான். "சித்ரா! நீ சம்பந்தப்படும் எதிலும் நான் தலையைக் கொடுக்கத் தயார். ஆனால், உபயோகமற்ற இந்தச் சதியில் உன்னைச் சிக்கவைக்க என் மனம் சம்மதிக்கவில்லை. இந்தச் சதியில் புதைந்திருக்கும் உள்வயணத்தை நீ புரிந்துகொள்ள வில்லை" என்றான் உபாத்தியாயன்.

உபாத்தியாயன் கடைசி வார்த்தைகளைக் கேட்ட பல்தேவ் பிரமித்துப் போய், "நீங்கள் சொல்வதன் அர்த்தம்!" என்று ஏதோ கேள்வி கேட்கும் பாவனையில் வார்த்தையை விழுங்கினான்.

"போகப் போகத் தெரியும். அது கிடக்கட்டும் பல்தேவ்! இனி நாங்கள் இந்தக் கூட்டத்தில் சேர்ந்துவிட்டதால் உங்கள்

திட்டம் உருவாவது சம்பந்தமான சகல செய்திகளையும் பிரதிதினம் எங்களுக்குச் சொல்லி அனுப்பு," என்று சொல்லி உபாத்தியாயன் போக எழுந்தான். சித்ராதேவியும் அவனைத் தொடர்ந்து எழுந்தாள். உபாத்தியாயன் புறப்படுமுன், "பல்தேவ்! நீயும் என்னுடன் மாளிகைக்கு வா. அங்குள்ள வீரர்களுக்கு உன்னை அறிமுகப்படுத்தி வைத்தால் நீ தினம் என்னை வந்து பார்த்துச் செய்தி சொல்ல சௌகரியமாயிருக்கும்" என்று அழைக்கவே, பல்தேவும் அவர்களைப் பின்தொடர்ந்தான்.

மூவரும் மௌனமாக அடிலன் மாளிகைக்கு வந்து சேர்ந்தனர். காவலரைக் கடந்து படிகளிலேறி மாடிக் கூடத்தில் மூவரும் நுழைந்தபோது கூடத்தின் நடுவிலிருந்த மஞ்சத்தில் ஆழ்ந்த யோசனையுடன் சிலையென உட்கார்ந்திருந்த காமினி மெள்ள எழுந்திருந்து நின்றாள். அவளைப் பார்த்த பல்தேவ் யாரென்று தெரியாமல் விழிக்கும் சமயத்தில் அஜித் சந்திரன், "யார் காமினியா? எப்பொழுது வந்தாய்? அடடே, என்ன எதிர்பாராத சந்திப்பு! இதோ யார் பார்! புரியவில்லையா? என்ன உன் கணவன் பல்தேவை அடையாளம் தெரியவில்லையா?" என்று அறிமுகப்படுத்தினான்.

காமினி சிறிதும் அசையாமல் பல்தேவைக் கூர்ந்து கவனித்தாள். எதிர்பாராத அந்த சந்திப்பினாலும் கூரிய அம்பு போல் தன்னை ஊடுருவிச் சென்ற அந்தப் பெண்ணின் பார்வையினாலும் பல்தேவுக்கு உடல் ஆட்டங்கண்டதன்றித் தலையும் கிறுகிறுவென்று சுற்றத் தொடங்கியது.

46. புருஷனும் மனைவியும்

கைப்பிடித்த தினத்தன்றே கையிலிருந்து பலாத்காரமாகப் பறிக்கப்பட்ட காமினி, பல வருஷங்களுக்குப் பிறகு புது அந்தஸ்துடனும் அதிகாரத்துடனும் தன் முன் தோற்றமளித்தபோது பல்தேவ் நிலைகுலைந்து போனதில் ஆச்சரியமென்ன இருக்கிறது? ஆகவே, சொல்லவொண்ணாத கலக்கத்தாலும் குழப்பத்தாலும் தலைசுற்ற, தேகம் தள்ளாடிய நிலைக்கு வந்தபோது பக்கத்திலிருந்த ஓர் ஆசனத்தைப் பிடித்துச் சற்றுத் தன்னைச் சமாளித்துக் கொண்டான். அப்பொழுது உடல் நிதானப்பட்டதேயொழிய உள்ளத்தின் குமுறல் மட்டும் ஓயவில்லை. காமினி, சொந்த மனைவியாயிருந்தபோதிலும் அவளருகே செல்லக்கூட யோக்கியதையற்ற ஸ்திதியில் தான் இருப்பதை உணர்ந்தான். தங்கள் இருவருக்கும் எந்தவிதச் சம்பந்தமுமில்லாத இருவர் முன்னிலையில் தானும் தன் மனைவியும் முன்பின் அறியாதவர்கள் போல் விலகி நிற்க வேண்டியிருந்ததையும் தன் மனைவி முன் தான் ஒரு ஊழியனைப் போல் நடக்க வேண்டியிருந்ததையும் நினைத்த பல்தேவ் நிர்க்கதியான தன் நிலைமையைப் பற்றிப் பெரிதும் ஏக்கங் கொண்டான்.

காமினியைக் கண்ட பல்தேவின் மனத்தில் இந்த எண்ணங்கள் எழுந்தோடியதென்றால், சித்ராவின் மனத்தில் வேறுவித அபிப்பிராயங்கள் பிரவகித்துக் கொண்டிருந்தன. தன் தகப்பனாரால் பலாத்காரமாகத் தூக்கி வரப்பட்டவளும், அந்தக் காரணத்தால் தன் குடும்பத்திடம் பூரண விரோதம் கொள்ள வேண்டியவளுமான காமினியின் அதிகாரத்தின்கீழ், தான் தன் சொந்த மாளிகையிலேயே

வசிக்க வேண்டிய அவசியம் நேர்ந்ததை எண்ணிச் சித்ரா தேவி பெருமூச்சு விட்டாள். அத்துடன் காமினியை நன்றாக ஏறெடுத்தும் பார்த்தாள். அதே சமயத்தில் காமினியின் கண்களும் அவள் கண்களைச் சந்தித்தன.

மாறுபட்ட குணமுடைய அந்த இரு பெண்களும் ஒருவரையொருவர் ஊடுருவிப் பார்த்துக் கொண்டார்கள்! எதையும் லக்ஷ்யம் செய்யாமல் யாருக்கும் அடங்கியறியாத ஒரு ஹூண மகள், அடக்கமே உருவான ஒரு ஹிந்து ஸ்திரீ இவ்விருவரும் ஒருவரையொருவர் கவனித்தபோது ஆயிர மாயிரம் எண்ணங்கள் அவர்கள் உள்ளங்களில் ஓடியிருக்க வேண்டும். ஆனால், ஒருவரைப் பற்றிய எண்ணம் மாத்திரம் அந்த இரு உள்ளங்களிலும் அந்தச் சமயத்தில் மேலோங்கி நின்றது. உபாத்தியாயர் சதா புகழ்ந்து கொண்டிருப்பாரே, அந்தக் காமினி இவள்தானா? என்று சித்ராதேவி நினைத் தாள். 'உபாத்தியாயர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு நிற்கும் அழகி இவள்தானா?' என்று காமினி சித்ராதேவியை நோக்கினாள். உபாத்தியாயன் மனத்தைக் கவர இன் னொருத்தியிடம் என்ன உயர்வு இருக்கிறது என்ற காரணத் தால் இரு பெண்களும் ஒருவரையொருவர் நன்றாகக் கூர்ந்து கவனித்தார்கள். இது பெண்களுக்கு இயற்கை. எந்தப் புருஷனாவது ஒரு பெண்ணிடத்தில் மதிப்போ காதலோ கொண்டுவிட்டால் இன்னொருத்தி பொறாமைப் படுவது சகஜம். தன்னைவிட இன்னொரு பெண் எந்த விதத்திலும் உயர்வு இல்லை என்ற எண்ணம் எல்லாப் பெண்களிடத்திலும் வேரூன்றியிருப்பதுதான் இதற்குக் காரணம்.

இருவரில் நிதான புத்தியுள்ள காமினி முதலில் அறையில் நிலவிய மௌனத்தைக் கலைத்து, "உபாத்தி யாயரே! நீங்கள் சித்ராதேவியின் கைப்பொம்மையானதற்குக்

காரணமிருக்கிறது. ஹூண மகளிரில் இவ்வளவு அழகியை நான் பார்த்ததில்லை" என்றாள்.

உபாத்தியாயன் லேசாகப் புன்முறுவல் செய்து, "காமினி! சித்ராதேவி உண்மையில் அழகியென்பது இப் பொழுதுதான் எனக்கு நிச்சயமாயிற்று" என்றான்.

இதைக் கேட்ட சித்ராதேவியின் முகத்தில் கோபம் ஏறி அவள் கன்னங்கள் சிவக்கத் தொடங்கின. அதைக் கண்ட காமினி, "என்ன நீங்கள் சொல்வது விசித்திரமாயிருக்கிறதே! அழகியென்று அறியாமலா உள்ளத்தைப் பறிகொடுத் தீர்கள்?" என்று கேட்டாள்.

"இதில் ஆண் பிள்ளைகளின் அபிப்பிராயத்தைக் கொண்டு எந்த முடிவுக்கும் வரமுடியாது காமினி. நாலு நாள் ஒரு பெண்ணிடத்தில் பழகினால் அவளிடத்தில் இல்லாத அழகெல்லாம் ஆண் மகனுக்குத் தோன்றும். வாழ்க்கையிலேயே இதைப் பார்க்கலாம். குரூபிகளை மணப்பவர்கள்கூடத் தங்கள் மனைவிமார்கள் மீது பிறர் பார்வை விழுந்தால் எவ்வளவு ஆத்திரமும் பொறாமையும் கொள்கிறார்கள்? காதல் கொள்ளும் ஆண் பிள்ளைகள் கண்ணிழந்து விடுகிறார்கள். ஆகையால், அவர்கள் அபிப்பிராயத்துக்கு மதிப்பு வைப்பது பிசகு" என்று சொன் னான் உபாத்தியாயன்.

"அப்படியானால் யார் அபிப்பிராயத்தைத்தான் நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்?" என்றாள் காமினி மீண்டும்.

"இது விஷயத்தில் பெண்களின் அபிப்பிராயந்தான் சரியாயிருக்கும். எந்தப் பெண்ணும் இன்னொரு பெண்ணை அழகியென்று ஒப்புக்கொள்ள மாட்டாள். அப்படியிருக்க உன் வாயிலிருந்து சித்ராதேவிக்கு அழகிப் பட்டம் கிடைத்து விட்டதால் இனிமேல் ஒரு விஷயத்தில் எனக்குச் சந்தேகமே

கிடையாது'' என்று சொல்லிவிட்டு உபாத்தியாயன் நகைத்தான்.

அவன் சிரிப்பு சித்ராதேவிக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. தன் தகப்பனாரிடம் அடிமையாயிருந்த ஒரு பெண்ணிடம் அஜித் சந்திரன் தன்னைப் பற்றித் தர்க்கிப்பதை சித்ராதேவி வெறுத்தாள். உடம்பில் ஊறிய அந்தஸ்தின் அகங்காரம் ஹூணர்களின் இணையற்ற வெறி இரண்டும் இத்தனை நாள் கழித்தும் சித்ராதேவியை விடவில்லை. ஆகவே உபாத்தியாயன் மீது கடுமையான ஒரு பார்வையை வீசி, "உபாத்தியாயரே! எனக்கு அனுமதி கொடுத்தால் நான் என் அறைக்குச் செல்கிறேன். நீங்களிருவரும் இந்த விவாதத்தை நிதானமாக நடத்திக் கொள்ளலாம்'' என்றாள்.

உபாத்தியாயனுக்கு நிலைமை ஒருவிதத்தில் சங்கடமாகத் தானிருந்தது. சற்றுத் தூரத்தில் ஆசனத்தைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த பல்தேவ் அம்மூவரையும் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். காமினி தன்னை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் சித்ராதேவியின் அழகை வர்ணிப்பதிலும் அதைப் பற்றி உபாத்தியாயனுடன் தர்க்கம் செய்வதிலும் காலங்கழிப்பதைக் காண பல்தேவின் புத்தியிலிருந்து மயக்கம் பறந்து போய் எரிச்சல் குடிகொண்டது. பல்தேவின் நிலையிலேற்பட்ட மாறுதலை கடைக் கண்ணாலேயே கவனித்துவிட்ட உபாத்தியாயன் சற்று ஏதோ யோசித்து பிறகு, "காமினி வெகுநாள் கழித்து உன் புருஷனைச் சந்திக்கிறாய். உங்களிருவருக்குமிடையில் நான் நின்றுகொண்டு வீண் தர்க்கத்தில் இறங்குவது ஒழுங்கான காரியமல்ல. நான் சித்ராதேவியை அவள் அறையில் விட்டு வருகிறேன். அதுவரை நீங்கள் பேசிக்கொண்டிருங்கள்'' என்று சொல்லி விட்டு, "வா, சித்ரா போகலாம்'' எனக் கூறிக்கொண்டு கூடத்தை விட்டு நழுவ ஆரம்பித்தான்.

அவர்களிருவரும் மறையுமட்டும் அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்த காமினி, மெள்ள ஆசனத்தில் அமர்ந்து பல்தேவை மீண்டும் நோக்கினாள். பல்தேவ் அப்பொழுதும் ஆசனத்தைப் பிடித்துக்கொண்டே மரம் போல் நின்றிருந்தான். காமினி தன்னை உட்காரச் சொல்வாளென்றோ தன்னைக் கண்டதால் குழப்பமோ வெட்கமோ திகிலோ அடைவாளென்றோ பல்தேவ் நினைத்திருந்தால் அவன் நிச்சயமாக ஏமாற்றமே அடைந்தான். அவனைப் பார்த்த காமினியின் கண்களில் எந்தவிதக் குழப்பமும் இல்லை. எப்பொழுதும் காணப்பட்ட உறுதிதான் இருந்தது. அவள் கண்களைப் பார்த்த பல்தேவ்கூட ஒரு நிமிஷம் தான் தனது மனைவியைப் பார்க்கிறோம் என்ற நினைப்பை இழந்தான். பெரிய நியாயாதிபதியின் முன் நிற்கும் குற்றவாளியைப் போலவே பல்தேவ் அவள் முன்பு நின்று கொண்டிருந்தான்.

அது பேச்சை மீறிய கட்டமாகையால் வெகுநேரம் வரை இருவரும் பேசவில்லை. ஒருவரையொருவர் ஊன்றிப் பார்த்து கடந்து போன வருஷங்களில் பரஸ்பரம் ஏற்பட்டுள்ள மாறுதல்களை எடை போடுவதிலிருந்தனர். காமினிக்குத் தன் புருஷன் யோக்கியதையை நிர்ணயிக்க அதிக நேரமாகவில்லை. சலனமான அவன் பார்வையும், சற்று முன்பு குடித்ததால் முகத்தில் தாண்டவமாடிய லேசான போதையும் அவன் எப்பேர்ப்பட்டவன் என்பதை விநாடியில் நிரூபித்துக் காட்டின. மற்றபடி அவனைப் பற்றி ஒற்றர்கள் காமினிக்கு எத்தனையோ விஷயங்களைச் சொல்லியிருந்தார்கள். இவ்வளவு லட்சணமுள்ள தன் புருஷனிடம் காமினியே முதலில் பேச ஆரம்பித்தாள். அவள் முதல் கேள்வி அம்புபோல் பல்தேவின் மேல் பாய்ந்தது. "உபாத்தியாயர் உங்களை எதற்காக அழைத்து வந்தார்''

என்று வினவினாள் காமினி. அவள் குரல் பெரிய அதிகாரி தன் பணியாளை விசாரிக்கும் குரலை ஒத்திருந்தது.

முதல் கேள்விக்கே பதில் சொல்லத் தெரியாமல் பல்தேவ் விழித்தான். "நானும் உபாத்தியாயரும் தோரமானாவைக் கொல்லச் சதி செய்கிறோம். ஆகவே அவருக்குச் சேதி சொல்ல நான் இந்த மாளிகைக்கு அடிக்கடி வர வேண்டியிருக்கும். அதற்காக என்னை வேலைக்காரர்களுக்கு அறிமுகப்படுத்த அழைத்து வந்தார்" என்று எப்படிச் சொல்வது? அவள் மேற்கொண்டு ஏதாவது கேள்வி கேட்டால் என்ன செய்வது என்று பல்தேவ் திண்டாடினான்.

பல்தேவின் குழப்பத்தைப் பார்த்த அவள் மீண்டும் மிகக் கடுமையான குரலில், "நான் கேட்பது உங்கள் காதில் விழவில்லையா" என்றாள்.

பல்தேவ் என்ன சொல்வதென்று தெரியாமல், "எதற்காக அழைத்து வந்தாரென்பது தெரியாது. வாவென்று கூப்பிட்டார்; வந்தேன்" என்று குழறினான்.

"இப்பொழுது எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று காமினி விசாரித்தாள்.

"அருவிக்குப் பக்கத்திலிருக்கும் புது வீட்டிலிருந்து" என்று பல்தேவ் பதில் சொன்னான்.

காமினியின் புருவங்கள் ஏதோ யோசனையால் சற்று எழுந்து தாழ்ந்தன. அவள் பல்தேவைப் பார்த்த பார்வையில் சந்தேகமும் கலந்திருந்தது. "எங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று காமினி போட்ட அடுத்த கேள்வி பல்தேவைத் திணற அடித்துவிட்டது. சரியாகப் பதில் சொல்ல முடியாததாலும் தனக்கு அடங்கி நடக்க வேண்டிய மனைவி தன்னை ஏதோ குற்றவாளி போல் நினைத்துக் குறுக்கு விசாரணை செய்வதாலும் நிதானத்தை இழந்த

பல்தேவ், "என்னை இந்த மாதிரி விசாரிக்க நீ யார்?" என்று சீறிக்கொண்டு ஆசனத்தை விட்டு எழுந்திருந்தான்.

"தோரமானாவின் அந்தரங்க அதிகாரி" என்று காமினி நிதானமாகப் பதில் கூறினாள். அந்தப் பதிலைச் சொல்லும் பொழுது அவள் குரலில் இருந்த அதிகாரத்தையும் உறுதியையும் கண்ட பல்தேவ் சிறிது பயப்படத்தான் செய்தான். இருந்தாலும் ஹிந்து புருஷனுக்கு மனைவியிடம் உள்ள ஆதிக்கத்தை ஒரு ஆயுதமாகக் கொண்டு, "நீ தோரமானாவின் அந்தரங்க அதிகாரியாயிருக்கலாம். அத்துடன் என் மனைவியென்பதையும் நினைவில் வைத்துக்கொள்" என்றான் அதிகாரம் தொனிக்கும் குரலில்.

காமினியின் கண்கள் அவனை நன்றாக ஏறெடுத்துப் பார்த்தன. அவள் பார்வையில் விவரிக்க இயலாத வெறுப்புத் தாண்டவமாடியது. "அதை நீங்கள் நினைப்பில் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"எதை?"

"நான் உங்கள் மனைவியென்பதை."

"ஏன்? நினைவில் வைத்துக்கொள்ளாமலென்ன?"

"அதிகாரம் செலுத்தும்போது வரும் மனைவி உறவு, ஆபத்து வரும்போது பறந்துவிடுமோ என்பதற்காகக் கேட்டேன்."

இந்தக் கேள்வியைக் கேட்டபோது காமினியின் விழிகளில் தீப்பொறி பறந்தது. இதற்கு என்ன பதில் சொல்வதென்பதும் பல்தேவுக்குப் புரியவில்லை. அவமானம் நிரம்பியவுடன் தன் நிலையை நினைத்துப் பெருமூச்சு விட்டான். காமினியும் தன் ஆசனத்திலிருந்து எழுந்தாள். "புருஷன் உறவு கொண்டாட உங்களுக்கு வெட்கமாயில்லையா? கண்ணெதிரே பிறன் தன் மனைவியை தூக்கிச் செல்லும்போது பரிதாபத்துடன் அலறுவதையும் கெஞ்சுவ

தையும் தவிர வேறொன்றும் செய்யத் துணியாத புருஷனுக்கு மனைவியிடம் என்ன உரிமை இருக்க முடியும்? பேடியான புருஷனைப் பெண்கள் வெறுப்பார்களென்ற பாடத்தை நீங்கள் இன்னும் படிக்கவில்லையா?" என்று சடசடவென்று பேச்சுக்களைத் தீப்பொறிகளாகக் கக்கினாள்.

அந்தத் தாக்குதலுக்கு முன்பாக நிற்க முடியாத பல்தேவ் தலையைக் குனிந்து கொண்டே பேசினான், "நான் அன்றிருந்த நிலையில் என்ன செய்யமுடியும்? அடிலன் அதிகாரத்தையும் குரூரத்தையும் நீ அறிவாய். அவனுக்கோ வாள் பலமும் ஆள் பலமும் அதிகம்; அவனை நான் எதிர்த்திருந்தால்..."

"உயிர் போயிருக்கும்," என்று காமினி அவன் வார்த்தையை முடித்தாள். அத்துடன் நிற்காமல், "உயிருக்குப் பயந்து மரணத்தை விற்றீர்கள். மாற்றானிடம் மனைவியைப் பறிகொடுத்தீர்கள். நீங்கள் மானமுள்ள புருஷனாயிருந்தால் அப்பொழுதே பிராணனை விட்டிருக்க வேண்டும். இன்னும் ஏன் உயிருடனிருக்கிறீர்கள்? இந்த மாதிரி உயிருடனிருக்கும் புருஷனுடன் வாழ்வதைவிடக் கடமைக்காக உயிரை விடும் புருஷனை நினைத்து விதவையாக வாழ்வதையே வீர ஸ்திரீகள் விரும்புவார்கள் என்பது வில்லவர் குலத்தில் உதித்த உங்களுக்குமா தெரியவில்லை," என்று பேசிக்கொண்டே போன அவளைத் தடுத்து நிறுத்தி, பல்தேவ் கெஞ்ச ஆரம்பித்தான்.

"காமினி! போனதையெல்லாம் மறந்துவிடு. புல்லானாலும் புருஷன் என்பதைப் பாரத நாட்டுப் பெண்ணான நீ மறக்கலாமா? ஏதோ தெய்வச் செயலால் பிரிந்திருந்தோம். இப்பொழுது அதே தெய்வமே ஏதோ காரணத்தைக் கொண்டு நம்மைச் சந்திக்க வைத்திருக்கிறது..." என்ற பல்தேவை இடைமறித்து, "சந்திக்க வைத்திருப்பது கடவுளல்ல; உபாத்தியாயர்!" என்றாள் காமினி.

"என்ன உபாத்தியாயரா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் பல்தேவ்.

"ஆம்! நான் இன்றிரவு இங்கு வரப்போவது அவருக்குத் தெரியும். ஆகவே, என்ன காரணமாக உங்களை அழைத்து வந்து என்னைச் சந்திக்க வைத்திருக்கிறார் என்பதுதான் புரியவில்லை" என்றாள் காமினி.

"இன்று நீ வரப்போவதாக உபாத்தியாயர் சொல்லவில்லையே. வரப்போவதாக பொதுவாகத்தான் பிரஸ்தாபித்தார். அவர் பேசியதிலிருந்து நீ வரும் சமயம் அவருக்குத் திட்டமாகத் தெரியுமென்று ஊகிக்க இடமில்லையே" என்றான் பல்தேவ்.

காமினியின் முகத்தில் புன்முறுவல் படர்ந்தது. "உபாத்தியாயர் எதற்காக என்ன காரியத்தைச் செய்கிறார் என்பதை ஊகிக்கத் தோரமானாவுக்கே கஷ்டமாயிருக்கும்போது அவர் நோக்கம் உங்களுக்கு எப்படிப் புரியப் போகிறது?" என்றாள்.

தோரமானாவையும் உபாத்தியாயனையும் பற்றி அவ்வளவு உயர்வாகவும் தன்னை ஒரு துரும்பாகவும் மதித்து காமினி பேசியது பல்தேவுக்கு எரிச்சலாயிருந்தது. ஆனால் தங்களைச் சந்திக்க வைத்தது உபாத்தியாயன் வேலையென்று அறிந்ததால் அவன் மனத்தில் குழப்பமும் கவலையும் அதிகரிக்கவே காமினியை மெள்ள நெருங்கி, "நீதான் உபாத்தியாயனுக்கும் மேலதிகாரியாயிற்றே, அவனைக் கைது செய்து உள்ளே அடைத்துவிட்டால் என்ன?" என்று கேட்டான்.

அவன் நெருங்குவதைப் பார்த்த காமினி மிகுந்த வெறுப்புடன், "சற்று எட்டவே நின்று பேசுங்கள், கிட்டே வரவேண்டாம்" என்றாள். அவள் அதிகாரப் பேச்சிலேயே ஒரு கவர்ச்சியிருந்தது. கவலையால் சரீரம் சற்று இளைத்

திருந்தாலும் அதில் கம்பீரமும் வசீகரமும் கலந்திருந்தது. அந்த அழகைப் பருகியதால் உன்மத்தம் பிடித்த பல்தேவ் "காமினி? நான் ஆயிரம் தவறுதல்கள் செய்திருந்தாலும் உன் கணவன். பல வருஷங்களுக்குப் பின் உன் ஆதரவை நாடும் புருஷனை விரட்டிவிடாதே," என்று சொல்லிக் கொண்டே அவளை நெருங்க முயன்றான்.

"என் ஆருயிர்க் கணவரே! தாங்கள் மேற்கொண்டு ஓர் அடி எடுத்து வைத்தால் வீரர்களை அழைத்து உங்களை உடனே கைது செய்யச் சொல்லுவேன். உங்களுக்கும் எனக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இருக்க முடியாது. நீங்கள் என்னைத் தொட்டுத் தாலி கட்டிய முறைக்காக உங்களுக்கு ஒரு புத்திமதி மட்டும் சொல்லுகிறேன். உபாத்தியாயரிட மிருந்து விலகி நில்லுங்கள். நீங்கள் சம்பந்தப்படும் எந்தக் காரியத்திலும் அவரைச் சேர்க்க வேண்டாம்" என்றாள் மிக மெல்லிய குரலில்.

"அடப் பாவமே! நீ விஷயத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை காமினி! இப்பொழுது என்னிடம் உபாத்தி யாயர் பூரணமாகச் சிக்கிக் கொண்டிருக்கிறார்" என்றான் பல்தேவ்.

"எனக்கு முழு விவரமும் தெரியும். நீங்கள்தான் அவர் கையில் சிக்கியிருக்கிறீர்கள். இந்த நிமிஷம்கூட உங்களை அவர் அழித்துவிட முடியும். நீங்கள் சதி செய்யும் விவரங் களை ஒற்றர்கள் மூலம் அவர் ஏற்கெனவே தோரமானா வுக்கு எழுதியனுப்பியிருக்கிறார். அந்த ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு உங்கள் அனைவரையும் அவர் கைது செய்திருக்கலாம். ஆனால், ஏன் கைது செய்யவில்லை?" என்று கேட்டாள்.

இதைக் கேட்ட பல்தேவின் முகத்தில் திகில் பூரணமாகப் படர்ந்தது. அந்தத் திகிலைப் பார்த்த காமினி வெறுப்புடன்,

"பயப்படாதீர்கள். நீங்கள் என் புருஷன் என்ற காரணத்திற் காக உபாத்தியாயர் உங்களுக்கு எந்தத் தீங்கும் விளைவிக்க மாட்டார். ஆனால், நீங்கள் மிக எச்சரிக்கையாயிருங்கள். உங்கள் செயல்களால் உபாத்தியாயர்கூட உங்களைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்படலாம். மலைவாசலில் இப்பொழுது நடக்கும் ராஜதந்திரப் போரில் வெற்றி யார் பக்கம் சாயும் என்று சொல்ல முடியாது. நீங்கள் பெரிய ஆபத்திலிருக்கிறீர்கள். ஜாக்கிரதை! என்ன மோசமானவ னானாலும் புருஷனைப் பறிகொடுப்பதை எந்த ஹிந்து ஸ்திரீயும் விரும்பமாட்டாள். அதனால்தான் எச்சரிக்கிறேன்" என்று பல்தேவைச் சற்றுக் காமினியே நெருங்கி ரகசியமாகச் சொன்னாள். அவள் வெகு சமீபத்திலிருந்ததாலும் அவள் அழகின் அம்சங்கள் தன்னைப் பைத்தியமாக அடிக்கும் நிலைக்குக் கொண்டு வந்ததாலும் வெறிபிடித்த கண் களுடன், "காமினி!" என்று கூவிக்கொண்டு இரு கரங்களை யும் நீட்டி அவளைத் தழுவத் தாவினான் பல்தேவ். அதே சமயத்தில் உபாத்தியாயன் சிரித்துக்கொண்டே உள்ளே நுழைந்தான்.

47. இரண்டு கடிதங்கள்

அஜித் சந்திரன் பிரவேசம், ஆசையாகத் தாவிய பல்தேவைத் திடீரெனத் தடை செய்ததன்றி, காமினிக்கும் சிறிது சங்கடத்தையும் குழப்பத்தையும் விளைவித்தது. உபாத்தியாயனுக்குக்கூட நிலைமை கொஞ்சம் உபத்திரவ மாகவே இருந்தது. சட்டென்று சம்பாஷணையைத் துவக்க முடியாமல் காமினியையும் பல்தேவையும் ஒரு விநாடி மாறி மாறிப் பார்த்தான். காமினி தலை கவிழ்ந்து நின்றிருந்தாள். பல்தேவுக்கு என்ன செய்வதென்று புரியாமையால், “உபாத்தியாயரே! தாங்கள்...” ஏதோ பேச ஆரம்பித்து மேலே எதுவும் சொல்லத் தெரியாமல் திண்டாடினான்.

“உள்ளே வந்தது பிசகுதான் பல்தேவ்,” என்ற உபாத்தியாயனே பல்தேவின் வார்த்தையை முடித்ததன்றி மேலும் சொன்னான்: “புருஷனும் மனைவியும் தனித்திருக்கும்போது அனுமதியின்றிப் பிரவேசித்தது தவறுதான். ஆனால் நீண்ட நாளுக்கு முன்பு மிக விபரீதமான சந்தர்ப்பங்களில் பிரிந்த உங்களுக்குள் இவ்வளவு திடீரென சமரசம் ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எப்படியிருந்தாலும் நீங்களிருவரும் சேர்ந்து வாழ்ந்தால் அதைவிட மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம் வேறெதுவுமில்லை” என்றான். இப்படிப் பல்தேவுக்குப் பதில் சொல்லி முடித்ததும் உபாத்தியாயன் காமினியின் மேல் கண்களை ஓட்டினான்.

உணர்ச்சிகளை ஊசி முனையில் நிற்க வைத்து உயிரையும் மானத்தையும் ஊசலாட்டும் சந்தர்ப்பங்கள் பலவற்றைச் சமாளித்துக்கொண்ட காமினிக்கு இந்தச் சில்லறைச் சங்கடத்திலிருந்து மீள அதிக நேரமாகவில்லை. அஜித் சந்திரன்

பேச்சு பாதியிலிருக்கையிலேயே சுயநிலைக்கு வந்துவிட்ட காமினி, உபாத்தியாயனை நன்றாக ஏறெடுத்துப் பார்த்தாள். “நானும் தங்களை இவ்வளவு சீக்கிரம் எதிர்பார்க்கவில்லை உபாத்தியாயரே! சித்ராதேவியிடம் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு வருவீர்கள் என்று நினைத்தேன்” என்று கூறினாள் காமினி. அவள் பேச்சைத் தொடர்ந்து அவள் இதழ்களும் பரிகாசப் புன்முறுவல் செய்ததைப் பார்த்த பல்தேவ், உபாத்தியாயனைக் காமினி பதிலுக்கு வாட்டிவிட்டதாக நினைத்துப் பல்லை இளித்தான். அவன் சிரிப்பு காமினிக்கு பெருத்த வேதனையாயிருந்தது. உபாத்தியாயன்கூட தெய்வ சங்கல்பத்தை நினைத்து, ‘இத்தனை அசட்டுக்கு இத்தனை புத்திசாலிப் பெண் பெண்டாட்டியாக வாய்த்தாளே’ என்று ஆச்சரியப்பட்டதன்றி, காமினியின் அதிர்ஷ்டத்தை எண்ணிப் பெருமூச்சும் விட்டான். அவன் பெருமூச்சின் காரணத்தைப் புரிந்துகொண்ட காமினியின் முகத்திலும் துயரச் சாயை படர்ந்தது.

காமினியின் மனத்தை மேலும் புண்படுத்த இஷ்டமில்லாத உபாத்தியாயன் பல்தேவைப் பார்த்து, “பல்தேவ்! நானும் காமினியும் பேசவேண்டிய ராஜாங்க விஷயங்கள் பல இருக்கின்றன. ஆகையால் நீ வீட்டுக்குப் போ! இனிமேல் நீ இங்கு வந்து போகத் தடையிருக்காது. எப்பொழுது வந்தாலும் உன்னை உள்ளே அனுமதிக்கும்படி வீரர்களுக்கு உத்தரவிட்டு விடுகிறேன்” என்றான்.

தன் மனைவி பெரிய அதிகாரியாயிருக்கும்போது உபாத்தியாயன் அப்படித் தன்னை விரட்டுவதை பல்தேவ் ரசிக்கவில்லை. ஆகவே, காமினியை நோக்கி, “நான் போக வேண்டியதுதானா?” என்று சற்று வியப்பாகவே கேட்டான்.

“உபாத்தியாயர் சொன்ன பிறகு அதில் சந்தேகம் எங்கிருந்து வந்தது?” என்று வினவினாள் காமினி.

பல்தேவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ஒரு ஹிந்துப் பெண் இன்னொரு புருஷன் உத்தரவுப்படி கணவனை விரட்டுவது எத்தனை விந்தையென்று நினைத்தான். உள்ளே கோபம் துள்ளி எழுந்தது. இருந்தாலும் அதை அடக்கிக் கொண்டு, "என் சொந்த அபிப்பிராயம் எப்படியென்று கேட்கவில்லையே" என்றான்.

"கேட்க வேண்டிய அவசியமில்லை" என்றாள் காமினி. அவள் குரலில் கண்டிப்பும் கடுமையும் பூர்ணமா யிருந்தன.

"என் அபிப்பிராயத்தைவிட உபாத்தியாயர் உத்தரவு தான் உனக்கு முக்கியமா? நீ என்...?"

"மனைவியென்று நினைவிலிருக்கிறது. அதனால்தான் உங்களை இன்னும் கைது செய்யாமல் விட்டு வைத்திருக் கிறேன்" என்று கூறினாள் காமினி. அவள் கண்கள் இரண்டு ஈட்டிகள்போல் ஜொலித்தன. அவள் சீற்றம் பல்தேவின் படபடப்பை அதிகப்படுத்தவே, "அவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டாயா? உபாத்தியாயருடன் இந்த மாளிகையில் தனியாக இருப்பதாக உத்தேசமா? வில்லவர் குலத்தார் இதைப் பார்த்தால் என்ன சொல்லுவார்கள்?" என்று இரைந்தான்.

காமினியின் முகத்தில் இகழ்ச்சிக் குறி பலமாகப் படர்ந்தது. "அடிலன் என்னை அவர்கள் கண் முன்பாகத் தூக்கிக் கொண்டு போனபோது என்ன அவர்கள் வாய்க்குப் பூட்டிருந்ததா? கைகளுக்குத்தான் விலங்கிருந்ததா? உங்கள் கைகள் தானாகட்டும் பூப்பறித்துக் கொண்டிருந்தனவா! பேடிகள் கும்பலுக்குப் பேச்சென்ன இருக்கிறது பேச்சு" என்று சீறிவிட்டுப் பல்தேவை நன்றாகக் கூர்ந்து கவனித்து "இதோ பாருங்கள். உபாத்தியாயரோடு நான் இப்பொழுது தான் தனித்திருப்பதாக நினைக்க வேண்டாம். எவ்வளவோ

நாட்கள் இவருடன் தனியாக இருந்திருக்கிறேன். உபாத்தி யாயரோடு என்ன என் ஆசைக் கணவரான தங்களைப் பிரிந்த நாள் முதல் தோரமானாவோடு தனியாகவே காலங் கழித்து வருகிறேன். இதெல்லாம் உங்களுக்குத் தெரியாது போலிருக்கிறது" எனச் சொல்லம்புகளை ஒன்றன்பின் ஒன்றாக வீசினாள்.

விடுவிடு என்று தொடுக்கப்பட்ட அந்தச் சொல்லம்பு களால் சுறுக்சுறுக்கென்று தைக்கப்பட்ட பல்தேவ் அவமானத்தால் குன்றிப் போய் பதில் சொல்லமாட்டாமல் தவித்தான். அந்த சமயத்தில் அஜித் சந்திரன் அவன் உதவிக்கு வந்து "பல்தேவ்! காமினி, எவ்வளவு உயர்ந்த பெண் என்பது உனக்குத் தெரியாது. உன் அதிர்ஷ்டம் அவள் உனக்கு மனைவியாக வாய்த்தாள். அவளைக் கண்டபடி பேசியதால் அவளுக்குக் கோபம் வந்தது. வாழ்க்கைச் சோதனையில் உன்னைப் போல் எல்லோரும் நாசமாக மாட்டார்கள் பல்தேவ். உயிரைவிட மானத்தைப் பெரிதாக மதிக்கும் புண்ணியவதிகள் என்றும் நமது பாரத பூமியில் இருக்கிறார்கள். அத்தகைய உன்னதமான ஸ்திரீ ரத்னங்களில் காமினி ஒருத்தி. அவளைப் பற்றிப் பெருமை கொள் பல்தேவ். கண்டதை உளறி அவள் மனத்தைப் புண்படுத்தாதே. நீ போய் வா. மற்ற விஷயங்களை நாளை பேசிக்கொள்வோம்" என்றான் உபாத்தியாயன். பல்தேவ் காமினியைப் பார்த்தான். காமினி மௌனமாக நின்றிருந் தாள். பல்தேவ் அவள்மீது கோபமான பார்வையைச் செலுத்திவிட்டு, "சரி உபாத்தியாயரே! நாளை மாலை சித்ராதேவியுடன் புது வீட்டுக்கு வாருங்கள். மீதி பேச வேண்டியதை அங்கு பேசிக்கொள்வோம்" என்று சொல்லிக் கொண்டு அறையை விட்டு வெளியேறினான். அவனை வாயிற்படி வரையில் கொண்டு விட்டுக் கதவைச் சாத்தித்

திரும்பிய உபாத்தியாயன் காமினி மஞ்சத்தில் விழுந்து கிடப்பதையும் விம்மி விம்மி அழுவதையும் பார்த்தான்.

மிகுந்த பரிதாபத்துடன் காமினியை நோக்கிய உபாத்தியாயன் அவளை அணுகி, குழந்தையை ஆசுவாசப்படுத்துவது போலப் பரிதாபத்துடன் அவள் தலையையும் முதுகையும் தடவிக் கொடுத்துக் கொண்டே மஞ்சத்தில் அவள் அருகில் உட்கார்ந்தான். "காமினி! துன்பம் உனக்குத் துரும்புக்குச் சமானமாயிற்றே. வாழ்க்கையில் எவ்வளவோ கஷ்டங்களைச் சமாளித்திருக்கும் உனக்கு இதைச் சகித்துக் கொள்ள முடியாதா? பல்தேவ் குழந்தைக்குச் சமானம். சில குழந்தைகள் வாழ்க்கைச் சுழலில் சிக்கிக் கெட்டுப்போவது போல இவனும் கெட்டுப் போகிறான். கவலைப்படாதே" என்று ஆறுதலும் கூறினான் அஜித் சந்திரன்.

காமினி மெள்ள எழுந்து உட்கார்ந்து முன்றானையால் கண்களைத் துடைத்துக்கொண்டாள். "அழக்கூட வெட்கமாகத்தானிருக்கிறது உபாத்தியாயரே! ஆனால், அவர் பார்வையையும் பேச்சையும் என்னால் சகிக்க முடியவில்லை. என் புருஷன் இவ்வளவு தூரம் கெட்டுப் போயிருக்கிறார் என்று நீங்கள் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே" என்றாள்.

"எப்படிச் சொல்வேன் காமினி! உன் மனம் புண்படும் என்று சேனாதிபதி தோரமானா, பல்தேவ் தன்னிடம் தலைவனாயிருக்கும் விஷயத்தையே மர்மமாக வைத்திருந்தாரே. நான் பல்தேவைப் பற்றி விவரமாக உன்னிடம் பிரஸ்தாபித்திருந்தால் உன் மனம் என்ன பாடுபடும்?" என்று பதில் கூறினான்.

"என் மனம் அதிகக் கஷ்டப்படும் என்று தெரிந்தும் அவரை ஏன் இங்கு அழைத்து வந்தீர்கள்?" என்று கேட்டாள் காமினி.

உபாத்தியாயன் பதில் சொல்லவில்லை. "நான் இன்று வரப்போவது உங்களுக்குத் தெரியுமா இல்லையா?" என்று மீண்டும் வினவினாள்.

"தெரியும்."

"தெரிந்தும் எங்களைச் சந்திக்க வைத்ததன் நோக்கம் என்ன?"

"நோக்கம் திட்டமாக எதுவும் இல்லை. மலைவாசல் வந்த பிறகு திடீரென எங்காவது வழியில் நாலு பேர் முன்பாக நீங்கள் சந்திப்பதைவிடத் தனிமையில் சந்திப்பது நல்லது என்று நினைத்தேன். எங்காவது உலாவப் போய் வழியில் பல்தேவ் வந்து ஏதாவது தாறுமாறாக நடந்து விட்டால் நன்றாயிருக்காதே என்று யோசித்தேன்" என்று விளக்கினான் உபாத்தியாயன்.

உபாத்தியாயன் விளக்கம் மேலுக்குக் கோர்வையாக இருந்தபோதிலும் அதில் சாரம் அதிகம் இல்லையென்பதைக் காமினி அறிந்து கொண்டாள். தான் வெளியே எங்கும் போகும் பழக்கம் இல்லையென்பது உபாத்தியாயனுக்கு நன்றாகத் தெரியும் என்பதைக் காமினி உணர்ந்திருந்தாள். அப்படியிருக்கத் தான் பல்தேவைச் சந்திப்பது குதிரைக் கொம்புதான் என்ற விஷயத்தையும் உபாத்தியாயன் அறிவான் என்பதிலும் அவளுக்கு சந்தேகம் இல்லை. ஆகவே, அஜித் சந்திரன் பேச்சைக் காமினி எள்ளளவும் நம்பவில்லை. தன் வார்த்தையில் ஓர் அக்ஷரத்தைக்கூடக் காமினி நம்பவில்லையென்பதை உபாத்தியாயனும் அறிந்திருந்தான். ஆகவே, அத்துடன் பல்தேவைப் பற்றிய பேச்சை மூட்டை கட்டி, "காமினி! நாம் பேச வேண்டிய முக்கியமான ராஜாங்க விஷயங்கள் இருக்கின்றன" என்றான்.

"சொல்லுங்கள்" என்றாள் காமினி.

"தோரமானா இங்கு எப்பொழுது வருவார்?"

"சமீபத்தில் வரமாட்டார். வரவேண்டிய அவசியமு மில்லை."

"வாஸ்தவம். அந்தரங்க அதிகாரி வந்த பின்பு அதிகாரிக்கு என்ன வேலையிருக்கப் போகிறது."

"அந்தரங்க அதிகாரியோடு உத்தரவுகளை நிறைவேற்ற உபசேனாதிபதியும் இருக்கும்போது அதிகாரிக்கு இங்கு என்ன வேலையிருக்க முடியும்?"

"இரண்டு பேருக்கும் மீறிய விஷயங்கள் ஏற்பட்டால் அவற்றில் ஒரு தீர்மானத்துக்கு வர அதிகாரியே நேரிலிருந் தால் நன்றாயிருக்குமல்லவா?"

"அப்பேர்ப்பட்ட விஷயம் ஏதாவதிருப்பது திட்ட மாகத் தெரிந்தால் சேனாதிபதியை வரவழைக்க அதிக நேரமாகாது."

அவள் பதிலைக் கேட்ட உபாத்தியாயன் புருவங்கள் ஆச்சரியத்தால் சட்டென்று சற்று உயர்ந்தன. அவன் பார்வை யிலும் ஏதோ சந்தேகம் கலந்திருக்கிறது. இரண்டையும் காமினி கவனித்தாலும் கவனிக்காதது போலவேயிருந்தாள். "சரி காமினி! நினைத்தமாத்திரத்தில் சேனாதிபதி இங்கு வரமுடியுமானால் சரிதான். மலைவாசல் இப்பொழு திருக்கும் நிலைமையில் சேனாதிபதியவர்கள் இங்கு இருந்தால் செளகரியமாயிருக்கும்" என்றான் அஜித் சந்திரன்.

"யாருக்குச் செளகரியமாயிருக்கும்! சதிகாரர்களுக்கா?" என்று காமினி கேட்டாள்.

"சதிகாரர்களைப் பற்றித்தான் உனக்கு முன்பே எழுதி விட்டேன்; கிங்கலன் மலைவாசலைத் தாக்குவதனால்..."

"சமாளிக்க உபசேனாதிபதியிருக்கிறீர்கள், படை பலமிருக்கிறது. ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால்..."

"தீர்த்து வைக்க அந்தரங்க அதிகாரியிருக்கிறீர்கள். அது சரி! ஆனால், கிங்கலன் தாக்குதல் அவ்வளவு சுலபமாக முடிந்துவிடாது. மலைவாசலில் நம்மிடமிருக்கும் படையைப் போல் கிங்கலனிடமும் மூன்று மடங்கு அதிக சைன்னிய மிருக்கிறது. கிங்கலனுடைய ஒற்றர்கள் அடிலன் பிள்ளை யைக் கண்டுபிடிக்கச் சகல முயற்சிகளையும் செய்து வருகிறார்கள். அடிலன் மகன் அவர்கள் கையில் சிக்கி னால் அவனை இங்கு தலைவனாக்கும் பாவனையில் ஹூணர்கள் சாரிசாரியாகப் பாரத நாட்டுக்குள் பாய்வார் கள். மீண்டும் பழையபடி உயிர் நாசம். பயிர் நாசம். மலை வாசல் பற்றி எரியும்" என்றான் உபாத்தியாயன்.

உபாத்தியாயன் சொல்லும் ஆபத்து உண்மையில் இருக்கிறது என்பது காமினிக்குத் தெரியும். அவள் முகத்தில் தீவிரக் கவலை படரவே, அவளும் மெள்ள ஒரு சேதி சொன் னாள். "உபாத்தியாயரே! இதுவரை நமது கண்காணிப் பிலிருந்து வந்த அடிலன் பிள்ளையும் எங்கேயோ மறைந்து விட்டான். ராகுலனை விசாரிக்க வேண்டியபடி விசாரித் தோம். அவன் குறிப்பிட்ட எந்த இடத்திலும் சித்ராவின் தம்பி கிடைக்கவில்லை. அவன் கிடைத்தால் உடனே கொன்றுவிடும்படி தோரமானா உத்தரவிட்டிருக்கிறார்" என்றாள் காமினி.

உபாத்தியாயன் மிகுந்த சிந்தனையோடு ஆசனத்தி லிருந்து எழுந்தான். சிறிது நேரம் பேசாமல் அறையில் உலாவினான். பிறகு, "சரி காமினி! நடந்துவிட்டதைப் பற்றிக் கவலைப்பட்டுப் பயனில்லை! அடிலன் பிள்ளையின் தலைச்சுழி இப்படியென்றால் யார் என்ன செய்ய முடியும்? இந்தா" என்று சொல்லிக்கொண்டே இடையில் சொருகி யிருந்த இரண்டு கடிதங்களை எடுத்துக் காமினியின் கையில் கொடுத்து, "இந்த இரண்டும் இன்றிரவே சேனாதிபதிக்குப் போய்ச் சேரவேண்டும் காமினி! மிக அவசரம்" என்றான்.

காமினி கடிதங்களை வாங்கிப் பார்த்து, “முத்திரை வைத்திருக்கிறீர்கள்! அப்படியானால் எனக்குக்கூடத் தெரியக்கூடாத ரகசியம்” என்றாள்.

“ஆமாம் காமினி! கடிதங்களை உடனே அனுப்பிவிடு. நேரமாகிறது. நான் படுத்துக்கொள்கிறேன்” என்று கூடத்தை விட்டுக் கிளம்பித் தன் அறையை நோக்கி நடந்தான். அவன் போவதைப் பார்த்துக்கொண்டிருந்த காமினி, அஜித் சந்திரன் தலை மறைந்ததும் எழுந்திருந்து தன் அறைக்குச் சென்றாள். காமினியின் அறைக் கதவு மூடப்பட்டதும் உபாத்தியாயன் மெள்ளத் தன் அறையிலிருந்து வெளியே வந்து அவளிருந்த அறையின் சாளரத்தருகில் வந்து நின்று கொண்டான்.

அறைக்குள்ளிருந்த காமினி கடிதங்களின் முத்திரைகளை உடைத்துப் பிரித்துக் கடிதங்களைப் படிக்கத் தொடங்கினாள். அதைக் கண்ட உபாத்தியாயன் முகத்தில் மிதமிஞ்சிய சந்தோஷச் சாயை பரவலாயிற்று.

48. இரவில் நடந்தது

அஜித் சந்திரன் அதிக நேரம் அந்தச் சாளரத்தருகில் நிற்கவில்லை. காமினி கடிதத்தைப் படித்து முடித்ததும் அடிமேலடி வைத்துத் தன் அறைக்கு வந்து அறைக் கதவை எந்தவிதச் சப்தமின்றிச் சாத்திக்கொண்டான். பிறகு தன் உடுப்புகளை மாற்றி வேறு உடுப்புகளை அணிந்து கொண்டான். கச்சையை இடுப்பில் வரிந்து கட்டி உடைவாளையும் எடுத்து வயிற்றுக்கருகில் ஜாக்கிரதையாகச் சொருகிக் கொண்டான். இந்த ஏற்பாடுகளுக்குப் பிறகு தோட்டத்துக்காகத் திறந்திருந்த தன் அறைச் சாளரத்தின் மூலம் வெளியே தலையை நீட்டித் தன் விரல்களால் இருமுறை சாளரக் கதவுகளில் தட்டினான். மீண்டும் நடு அறைக்கு வந்து மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டான். சில விநாடிகள் சென்றதும் அவன் அறைக் கதவு லேசாகத் திறக்கப்பட்டு முகுந்தன் உள்ளே நுழைந்தான்.

கதவைத் தாளிடும்படி அவனுக்குச் சைகை செய்த அஜித் சந்திரன் சற்று நேரம் தீவிர யோசனையில் இறங்கினான். அடுத்தபடி தன் கட்டளையை எதிர்நோக்கி நின்று கொண்டிருந்த முகுந்தனைப் பார்த்து, “முகுந்தா! நமது வீரர்கள் எந்தப் பக்கம் காவல் புரிகிறார்கள்?” என்று வினவினான்.

“மாளிகையின் தெற்குப் பக்கத்திலிருக்கிறார்கள் எசமான்” என்று முகுந்தன் பதிலிறுத்தான்.

“சரி முகுந்தா! நீ கீழே போயிரு. இன்னும் பத்து நிமிஷங்களில் நான் வருகிறேன்” என்றான் அஜித் சந்திரன் மிக ரகசியமாக.

"இந்த இரவில் வெகு தூரம் பிரயாணமா? குதிரைகளுக்குச் சேணம் போட்டுத் தயார் செய்யட்டுமா?"

"அதிக தூரமோ, குறைந்த தூரமோ, என்று சொல்ல முடியாது. ஆனால் குதிரைகள் வேண்டாம். குதிரைகள் காலடிச் சத்தம் நமது பிரயாணத்தை அம்பலப்படுத்தி விடும். கால்நடையாகவே செல்வோம். எனது ஊகம் சரியாயிருக்குமானால் நாம் அதிக தூரம் செல்ல வேண்டிய அவசியமிருக்காது. போகும்போது ஜாக்கிரதையாகப் போ," என்று அஜித் சந்திரன் கூற, முகுந்தன் வந்த மாதிரியே பூனைபோல் நகர்ந்துவிட்டான்.

அவன் செல்ல அவகாசம் கொடுக்கச் சற்று நேரம் காத்திருந்த அஜித் சந்திரன், அந்தக் கால அளவு முடிந்ததும் மெள்ளத் தன் அறைக்குப் பக்கத்திலிருந்த தாழ்வாரத்தின் பக்கமாக இரண்டு கட்டுகளைத் தாண்டிச் சென்று, கோடியிலிருந்த சித்ராதேவியின் அறையை லேசாகத் தட்டினான். சித்ராதேவி தயக்கத்துடன் எழுந்து வந்து கதவைத் திறந்தாள். வெளியே உபாத்தியாயன் நிற்பதைப் பார்த்தவுடன் வெட்கமோடிய இதழ்களைச் சற்றே விரித்து, "ஏது இந்த ராத்திரியில் தனித்திருக்கும் இந்தப் பெண்ணின் அறைக்கு வந்துவிட்டீர்கள், அவள் பார்த்தால் ஏதாவது சொல்ல மாட்டாளா?" என்று கேட்டாள்.

மேலே பேசவிடாமல் அவளைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்து, அவள் உதடுகளைத் தன் உதடுகளால் இறுக மூடினான் உபாத்தியாயன். கனிரஸம் ததும்பி நின்ற அந்தக் காதல் சுவையில் மயங்கி நின்ற சித்ராதேவியை அஜித் சந்திரன் கைகளும் வலிய அணைத்ததன்றி அவன் இடது காலும் மெள்ள மேலெழுந்து அறைக் கதவை லேசாகச் சாத்தியது. அவன் கண்கள் தாமரை மேல் உலாவும் வண்டுகளென அவள் முகத்தாமரையில் உலாவின. அந்த

மோஹனாங்கியின் கண்கள் மூடிக் கிடந்தபடியால் அவை வீசவேண்டிய மோஹனாஸ்திரத்தை இதர அங்கங்கள் கொடுத்தன. இத்தகைய காம மந்திரத்தால் அரை விநாடி கட்டுண்டு நின்ற உபாத்தியாயன், "சித்ரா!" என்று மெள்ள அழைத்தான்.

அவள் கண்களை விழித்து, "ஏன்?" என்று அதைவிட மெதுவாகக் கேட்டாள்.

"உன்னால் ஓர் உதவி வேண்டுமே."

"கட்டளையிடுங்கள்."

"நான் இன்றிரவு மட்டும் உன் படுக்கையில் படுத்துக் கொள்ள வேண்டும்."

இந்தக் கோரிக்கை சித்ராதேவியின் ஆசையோடு வெட்கத்தையும் பலமாகத் தூக்கிவிடவே அவள் பதிலேதும் சொல்லவில்லை. "என்ன சித்ரா! பதிலேதும் இல்லையே!" என்று வற்புறுத்திக் கேட்டான் அஜித் சந்திரன்.

"போங்கள் உபாத்தியாயரே! உங்களுக்கு எதுவும் பரிகாசமாகப் போய் விட்டது" என்று சொல்லிக் கொண்டே அவன் பிணைப்பில் அவள் சுழன்றாள்.

"தவறாக அர்த்தம் செய்து கொள்ளாதே சித்ரா! ஒரு முக்கிய ராஜாங்க காரியத்தை முன்னிட்டு நான் உன் கட்டிலில் படுக்க வேண்டியிருக்கிறது..." என்று பேசிய அஜித் சந்திரனை நோக்கிப் புன்முறுவல் செய்துகொண்டே, "உங்கள் ராஜாங்க காரியங்கள் விசித்திரமாயிருக்கின்றன. இராக்காலத்தில் இன்னொரு பெண்ணின் பக்கத்தில் படுத்து..." என்று சித்ராதேவி மேற்கொண்டு எதுவும் பேசாமல் வாக்கியத்தை முடிக்காமலே விட்டு விட்டாள்.

"உன் கட்டிலில் படுத்துக்கொள்ளப் போகிறேன் என்று அனுமதி கேட்டேனே தவிர, உன் பக்கத்தில் படுத்துக்

கொள்ளப் போகிறேன் என்று சொல்லவில்லையே" என்றான் அஜித் சந்திரன்.

ஹூணமகளின் வழக்கமான கோபம் திடீரெனத் தலைதூக்கியது. தன்மேல் தவழ்ந்து கொண்டிருந்த அஜித் சந்திரன் கைகளைத் திடீரெனத் தூக்கியெறிந்து அவனை விட்டு விலகி நின்றாள்.

உபாத்தியாயன் மெள்ளச் சிரித்துக்கொண்டே "சித்ரா! விஷயத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் கோபிக்காதே" என்றான்.

"என்ன விஷயம்? எதைப் புரிந்துகொள்ள வேண்டும்?" என்று சித்ராதேவி கேட்டாள். அவள் குரலில் குரோதம் சற்றுக் கடுமையாகவே தொனித்தது.

"இந்த உபாத்தியானுக்கு மட்டும் உன்மேல் அன்பில்லையென்று நினைக்கிறாயா? இதே கட்டடத்தில் நான் ஒரு மூலையிலும் நீ ஒரு மூலையிலும் தனித்துத் தங்கியிருப்பது எனக்கு மட்டும் வேதனையாயில்லையென்று நீ அபிப்பிராயப்படுகிறாயா? சந்தர்ப்பங்களையொட்டி இந்த வேதனையை நான் சகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது" என்று அஜித் சந்திரன் விளக்கினான்.

"என்ன சந்தர்ப்பங்கள்?"

"ராஜீய சந்தர்ப்பங்கள். முதலில் உன் சொந்த நிலை! அடுத்தபடி மலைவாசலில் நம்மைச் சுற்றி எப்பேர்ப்பட்ட வலை பின்னப்படுகிறதென்பதை நீ அறியமாட்டாய். நான் அறிவேன். அதைத் துண்டிக்க நான் எவ்வளவு பிரயத்தனப் பட்டு வருகிறேன் என்பது உனக்குத் தெரியாது."

"தெரியும் உபாத்தியாயரே. உங்களுடைய இந்த ராஜீய ஏற்பாடுகளுக்கும் நீங்கள் என் கட்டிலில் படுக்க வேண்டியிருப்பதற்கும் என்ன சம்பந்தம்?"

"நிரம்ப சம்பந்தமிருக்கிறது. பேச நேரமில்லை பிறகு சொல்கிறேன். சீக்கிரம் உன் போர்வையை எடுத்துக் கொண்டு என் அறைக்கு வா."

இந்த இரண்டாவது கோரிக்கை சித்ராவின் குழப்பத்தை அதிகப்படுத்தியது. "உங்கள் அறைக்கா? எதற்காக?" என்று வினவினாள்.

"என் கட்டிலில் படுக்க" என்றான் உபாத்தியாயன்.

சித்ரா திகைத்துப் போனாள். உபாத்தியாயன் கோரிக்கை ஒவ்வொன்றும் அன்று பெரிய புதிராயிருந்தது அவளுக்கு. அவள் சிந்தனையை நிமிஷ நேரத்தில் ஊகித்துக் கொண்ட உபாத்தியாயன், "சித்ரா! நான் சொல்வதில் இன்னும் நாலைந்து நாட்களுக்கு நம்பிக்கை வைத்து என் சொற்படி நட, பிறகு உன் சுதந்திரத்தில் நான் குறுக்கிட மாட்டேன். உம்! சீக்கிரம் கிளம்பு!" என்று துரிதப்படுத்தினான் அஜித் சந்திரன். மேலே எதுவும் பேசாமல் போர்வையைப் போர்த்துக்கொண்டு சித்ராதேவி அஜித் சந்திரனைப் பின்தொடர்ந்தாள். எந்தவிதச் சந்தடியுமில்லாமல் அவளைத் தன் அறைக்கு அழைத்துச் சென்ற உபாத்தியாயன் கதவைத் தாளிட்டு அவளை லேசாகத் தன் கட்டிலில் படுக்க வைத்தான். மடங்கியிருந்த அந்த ஏந்திழையின் கால்களை நீட்டிவிட்டுத் தன் போர்வையை எடுத்து அவள் தலைமுதல் கால்வரைப் போர்த்தி விட்டான். பிறகு தன் உடைவாள் சரியாயிருக்கிறதா என்று ஒரு முறை பரிசோதித்துக் கொண்டான்.

உபாத்தியாயன் கைகள் தன் காலைத் தொட்டுப் படுக்க வைத்த சமயத்தில் சொல்லவொண்ணாத இன்ப வேதனையை அடைந்த சித்ராதேவிக்கு, அவன் உடைவாளைக் கூர் பார்த்துக்கொண்டதும், அவன் கதவைத் தாளிட்டு எல்லாக் காரியங்களையும், ரகசியமாகச் செய்ததும் திகிலையே அளித்தன. உபாத்தியாயன் ஏதோ மிக

ஆபத்தான காரியத்தில் இறங்குகிறான் என்பதை அவள் திட்டமாகத் தெரிந்துகொண்டாள். ஆகவே, அவன் போக இறுதியாக விடை கேட்டபோது அவன் கழுத்தில் தன்னிரு கைகளையும் கொடுத்துக் கோத்து முகத்தோடு முகத்தைப் புதைத்து, “காரியம் மிகவும் அபாயமானதா?” என்றாள்.

“நாம் இருக்கும் நிலையே அபாயமானது. தோரமானாவின் சந்தேகத்துக்குப் பாத்திரமாயிருக்கிறோம். அவன் அந்தரங்க அதிகாரியின் பார்வை நம்மீது பலமாக விழுந்திருக்கிறது. ஆகவே, நாம் இந்த நிலையில் செய்ய முற்படும் எந்தக் காரியத்திலும் அபாயம் கலந்திருக்கிறது. மற்றதைப் பின்னால் பேசிக்கொள்வோம். கவலைப்படாதே சித்ரா! நான் இன்னும் இரண்டு மூன்று நாழிகைகளில் திரும்பி விடுவேன். அதுவரை நீ அறைக் கதவுக்கு முதுகைக் காட்டியே படுத்திரு. போர்வையைச் சிறிதும் விலக்க வேண்டாம். தலையையும் நன்றாக மூடிக்கொள். அறைக் கதவு லேசாகத் திறந்தாலும் திரும்பிப் பார்க்காதே! கதவைத் தாளிட வேண்டாம். நான் விட்டுப் போகிறபடியே இருக்கட்டும்” என்று சொல்லிவிட்டு அவள் கரங்களிலிருந்து விடுதலை பெற்றுக் கதவை ஓசைப்படாமல் மூடி மீண்டும் சித்ராவின் அறையை நாடிச் சென்றான். சித்ராவின் அறையில் நொடிப் பொழுதில் அவன் காரியங்கள் நடந்தன. அவள் கட்டிலில் ஒரு தலையணையை நெடுக வைத்து அதன் மேல் ஒரு போர்வையை நீட்டிப் போர்த்தினான். யாரோ படுத்திருப்பது போன்ற பிரமையைக் கட்டிலில் ஏற்படுத்திய பிறகு சித்ராவின் அறைக் கதவைத் தாளிட்டு விட்டுச் சாளரத்தின் வழியாகத் தோட்டத்துள் இறங்கி மறைந்து விட்டான் உபாத்தியாயன்.

உபாத்தியாயன் தோட்டத்தில் மறைவதற்கும் காமினி அவள் அறையைவிட்டு வெளியே வருவதற்கும் நேரம் சரியாயிருந்தது. காமினி பூனைபோல் நடந்து உபாத்தியாயன்

அறைக்கு வந்து அவன் அறைக் கதவை லேசாகத் திறந்தாள். கட்டிலில் தலை முதல் கால் வரை போர்த்து உறங்கும் உருவத்தைப் பார்த்ததும் அவள் முகத்தில் சாந்தி நிலவியது. பிறகு சித்ராதேவியின் அறைக்கு வந்து கதவைத் திறக்க முயன்று முடியாமற் போகவே சாளரத்தின் வழியாகப் பார்த்தாள். நிலைமை அவளுக்குத் திருப்தியாகவிருப்பதாக அவள் முகம் நன்றாக எடுத்துக் காட்டியது. நேராக தன் அறைக்குச் சென்று அமைதியைக் குறிக்கும் பெருமூச்சுடன் படுத்து நிம்மதியாக நித்திரையில் கலந்தாள்.

கதவு திறந்த சமயத்தில் மிகுந்த சங்கடத்துடன் ஆழ்ந்த சித்ராவின் மனம் மட்டும் காமினி துயின்ற வெகு நேரத்திற்குப் பிறகும் அமைதியின்றிக் கிடந்தது. ஆனால் எந்த உடலுக்கும் பலவந்த அமைதியை அளிக்கும் அசதி அவள் கண்களையும் தூக்கத்திற்கு இழுத்தது. முகத்தின் இரு முழு நீலங்களும் மூடின. எத்தனை நேரம் அவள் அப்படித் தூங்கியிருப்பாளோ தெரியாது. கண் விழித்தபோது அவள் தன் கட்டிலில் படுத்திருந்தாள். சுற்றுமுற்றும் நன்றாகப் பார்த்த சித்ராதேவி இரவில் நடந்ததெல்லாம் சொப்பனமா நிஜமா என்று அறியச் சக்தியற்றுத் திகைத்தாள். அந்தத் திகைப்பை ஆற்ற உதயகாலக் கவிபாடும் புள்ளினங்கள் இன்பமாகக் கூவின.

49. "சுருக்கு பலப்படுகிறது சித்ரா!"

விடிந்த இரண்டு ஜாமத்திற்குப் பிறகு சித்ராதேவி அஜித் சந்திரனைக் காமினியின் அறையில் சந்தித்தபோது அவள் காலையில் கொண்ட சந்தேகம் இன்னுமதிகமாகத் தலைதூக்கி நின்றது. இரவு கண் விழித்ததற்கான அறிகுறிகளோ தீவிரமான வேலையில் ஈடுபட்டிருப்பதற்கான சிந்தனைச் சாயலோ அவன் முகத்தில் சிறிதும் தென்படவில்லை. உபாத்தியாயன் வழக்கம்போல் காமினியோடு மிக சகஜமாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தான். சித்ரா உள்ளே வந்ததும், "வா சித்ரா" என்று சகஜமாக அழைத்து அவளுக்கும் ஓர் ஆசனமும் அளித்தான். அவன் இருந்த நிலையைப் பற்றி யோசித்ததால் காமினியின் புருவங்கள் ஓரிரு முறை சற்று எழுந்து தாழ்ந்தனவேயொழிய அவளும் உபாத்தியாயனுடைய மனப்போக்கில் எந்தவித மாறுதலையும் அறியச் சக்தியற்றவளானாள். இரவில் அஜித் சந்திரன் பேசிய ரகசிய மொழிகளையும் அவன் தன்னிடம் கோரிய விநோதமான உதவியையும் எண்ணிப் பார்த்த சித்ரா, அஜித் சந்திரன் காலையில் நடந்துகொண்ட மாதிரியை நோக்கியதும் முதல் நாளிரவு நடந்ததெல்லாம் அனேகமாக சொப்பனமாகத்தான் இருக்க வேண்டும் என்ற உறுதிக்கும் ஓரளவு வரத் தலைப்பட்டாள். 'இல்லாவிட்டால் அவர் அறையில் படுத்துக் கொண்ட நான் திரும்ப என் அறைக்கு எப்படி வந்தேன்? அவர் என்னைத் தூக்கிச் சென்றிருக்க முடியுமா? சீச்சி! இருக்காது. நான் என்ன அவ்வளவு மோசமாகவா தூங்குகிறேன்?' என்று இப்படியெல்லாம் பல ஆட்சேபணை சமாதானங்களைத் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். ஆகவே மூவருக்கும் வேலைக்காரன் சிற்றுண்டி பரிமாறிய

போது சித்ராதேவி மிக மௌனமாகவே சாப்பிடலானாள். உபாத்தியாயனைப் பற்றிக் காமினியின் உள்ளமும் பெருங்குழப்பத்தில்தானிருந்தது. ஆனால், சித்ராவைவிட வாழ்க்கையிலும் ராஜதந்திரத்திலும் எவ்வளவோ அனுபவமுள்ள காமினி தன் உணர்ச்சிகளைத் தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டாள். உபாத்தியாயனிடத்தில் மட்டும் எந்தவித மாறுதலும் தெரியவில்லை. "என்ன சித்ரா, கண்கள் ஒரேயடியாகச் சிவந்திருக்கின்றன. இரவு முழுவதும் கண் விழிப்போ?" என்று தமாஷாகக் கேட்டு அவள் குழப்பத்தை இன்னும் பன்மடங்கு அதிகமாகக் கிளறிவிட்டான்.

"உபாத்தியாயருக்கு எப்பொழுதும் விளையாட்டுத்தான்" என்று காமினி ஏதோ குறுக்கிட்டாள்.

"பெண்களைப் போல் எந்த விஷயத்தையும் உள்ளடக்கியும் ரகசியமாகவும் வைத்துக்கொள்ள ஆண்களால் முடிகிறதா? ஆண் பிள்ளைகளைத்தான் பெண்களிடம் ஏமாறுவதற்கென்றே பிரமன் படைத்திருக்கிறானே" என்று சொல்லிப் புன்முறுவல் செய்தான் அஜித் சந்திரன்.

அவன் வார்த்தைகளின் உள்ளர்த்தம் எதுவாயிருக்கும் என்பதைப் பற்றி இரு மங்கைகளும் யோசிக்கலானார்கள். இருவருக்கும் வித்தியாசமான அபிப்பிராயங்கள் மனத்தில் எழுந்தன. முதல் நாளிரவு நடந்த நிகழ்ச்சிகளுக்கும் அவன் வார்த்தைகளுக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா என்பதை இரு பெண்களும் ஆராயலாயினர். 'பெண்களைப்போல் எந்த விஷயத்தையும் உள்ளடக்கியும் ரகசியமாகவும் வைத்துக் கொள்ள ஆண்களால் முடிகிறதா' என்பதற்கும் முந்திய இரவில் தான் ரகசியமாகக் கடிதங்களைப் பிரித்துப் பார்த்ததற்கும் ஏதாவது சம்பந்தமிருக்குமா என்ற பாதையில் சென்றது காமினியின் மனம். 'ஆண்களைத்தான் பெண்களிடம் ஏமாறுவதற்கென்றே பிரமன் படைத்திருக்கிறானே'

என்று சொல்லி உபாத்தியாயன் புன்முறுவல் செய்ததைக் கவனித்த சித்ராதேவி, தான் அவனிடம் ஏமாந்துவிட்டதைச் சுட்டிக்காட்டி உபாத்தியாயன் பரிகசிக்கிறானோ என்ற சந்தேகத்தில் இறங்கலானாள். அப்படியானால் இரவில் நடந்தது நிஜந்தானா என்ற கேள்வியில் மனம் மீண்டும் ஆழத் தொடங்கியது. உபாத்தியாயன் பேச்சிலோ, நடத்தையிலோ இந்த மாதிரி கலகலப்பை, அடுத்து வந்த நாலைந்து நாட்களில் அந்த இரு மங்கையராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அடுத்த சில தினங்களில் அவர்களிடம் அதிகமாகப் பேசவும் பழகவும் உபாத்தியாயனுக்கு அவசியமில்லாமலிருந்தது. ராஜாங்க வேலைகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருந்தான். ராஜ தூதர்கள் எங்கிருந்தோ அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அவசியமான ஓரிரு விஷயங்களுக்குத் தகவல் கேட்டுக் காமினியிடம் பேசிப் போனானே தவிர மற்றபடி அவளிடம் எந்த யோசனையையும் கேட்கவில்லை. அடிக்கடி கணவாய்ப் பக்கமாகப் போய் ராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்டு வந்தான். சில சமயங்களில் முகுந்தனை அழைத்துக் கொண்டு சண்பகத் தோட்டத்தின் பக்கமாகச் சென்று வெகுநேரம் கழித்துத் திரும்பி வந்தான். படைப் பிரிவுகளை அவ்வப்பொழுது எங்கெங்கோ அனுப்ப உத்தரவு போட்டுக் கொண்டிருந்தான். அடிலன் மாளிகையில் பாதி நாழிகை படைத்தலைவர்கள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். சிறுசிறு படைப் பிரிவுகளின் சஞ்சாரம் நாலா பக்கங்களிலும் ஏற்படலாயிற்று. மலைவாசல் பூராவும் நாலைந்து தினங்களிலேயே பெரிய ராணுவக் கோலம் பூண்டுவிட்டது. இடையிடையே இரவில் உபாத்தியாயன் அறையில் நீண்டநேரம் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. உபாத்தியாயன் கடிதங்களை வரைந்து தள்ளிக்கொண்டே இருந்தான். அவன் செயல்களை இரு

பெண்களும் கவனித்தும் கவனிக்காததுபோல் இருந்தனர். சித்ராதேவிக்கு மட்டும் இந்த ரகசியம் எழுந்ததும் பெரிய தலைவேதனையாயிருந்தது. ஆகவே, பொறுக்க முடியாமல் உபாத்தியாயன் அறைக்குள் ஒரு நள்ளிரவு சரேலென நுழைந்தாள். அவள் எதிரே முகுந்தன் வழியை மறைத்து நின்றான். "எசமானை இப்பொழுது பார்க்க முடியாது. தயவுசெய்து வெளியே போய்விடுங்கள்" என்றான். அவன் குரல் மேலுக்கு மரியாதையாகத் தோன்றினாலும் கண்டிப்பும் கடுமையும் கலந்தேயிருந்தது.

சாதாரண ஒரு வீரன் அடிலன் மகளான தன்னைத் தடுப்பதே சித்ராதேவிக்குப் பெரிய அவமானமாக இருந்தது. அத்துடன் தனக்குச் சொந்தமான உபாத்தியாயனைத் தான் அணுகாதபடி தடுக்க இவன் யார் என்ற கோபமும் கலந்து கொள்ளவே மிகுந்த ஆத்திரத்துடன் "நீ யார் என்னைத் தடுக்க, விலகி நில்" என்றாள்.

"தேவி! நீங்கள் பெண் என்பதால் மரியாதையாகச் சொல்கிறேன். வேறு யாராவதிருந்தால் நானே அப்புறப் படுத்தியிருப்பேன்" என்றான் முகுந்தன், இருக்கும் இடத்தை விட்டு அசையாமலே.

அவன் போக்கு சித்ராதேவிக்குப் பெரிய ஆச்சரியத்தையே கிளப்பிவிட்டது. கேவலம் ஒரு சேவகன் தன்னைத் துரும்பாக நினைத்து நடத்துகிறானே என்ற நினைப்பில் "உங்களுக்கு இது சம்மதந்தானா?" என்று இரைந்தாள், அறைக் கோடியில் உட்கார்ந்திருந்த உபாத்தியாயனை நோக்கி.

கதவுக்கு வெகு அருகில் நடந்துகொண்டிருந்த இந்த நாடகத்தை அறைக் கோடியில் விளக்குக்கருகில் குனிந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்த அஜித் சந்திரன் கவனித்துத் தான் சும்மாயிருந்தானோ அல்லது கவனிக்கத்தான் இல்லையோ சொல்ல முடியாது. இருந்த இடத்தைவிட்டு

எழுந்திருக்கவும் இல்லை; சித்ராவின் கூச்சலுக்கு பதில் சொல்லவும் இல்லை; எழுதிய கை எழுதியபடியே இருந்தது. கவனம் வேலையிலேயே இருந்தது.

தன் கேள்விக்கு அஜித் சந்திரன் பதில் சொல்லாதைக் கண்ட சித்ராதேவி பெரிதும் வெகுண்டாள். முகுந்தனை மீறிக்கொண்டு உபாத்தியாயனை அணுக ஓரடி எடுத்து வைத்தாள். முகுந்தன், அவள் சித்ராதேவி என்பதையும் பாராமல் அவளை இரு கைகளாலும் தொட்டுக் கதவுக்காகத் திருப்பினான். அடுத்த நிமிஷம் நடந்த சம்பவத்தால் அந்த அறையே நடுங்கியது. சேவகன் அவ்வளவு அவமரியாதை யாகத் தன்னைத் திருப்பியதால் சொல்லொண்ணா சினத் துக்குள்ளான சித்ராதேவி மின்னல் வேகத்தில் அவன் பிடியி னின்று திமிறி, "என்ன துணிச்சல் உனக்கு" என்று கூச்ச லுடன் முகுந்தன் கன்னத்தில் பளீரென ஓங்கி அறைந்து விட்டாள்.

உபாத்தியாயன் கண்கள் சரேலென அவளிருந்த பக்கம் திரும்பின. ஆசனத்தைவிட்டு எழுந்து கதவுக்கருகே வேகமாக வந்த உபாத்தியாயன் கண்களில் ஜொலித்த கோபத்தைக் கண்ட சித்ராதேவி பயந்தேவிட்டாள். நேராக அவளிடம் வந்த உபாத்தியாயன், "சித்ரா! என் கோபம் எல்லை மீறு முன்பாக இந்த அறையைவிட்டுப் போய்விடு" என்றான்.

சித்ரா பிரமித்தாள்! உபாத்தியாயன் மேலும் பேச்சைத் தொடர்ந்து, "என்னுடைய சைன்னியத்திலுள்ள வீரர்களைத் தொட்டு அடிக்க யாருக்கும் உரிமை கிடையாது. அப்படி அடிப்பவர்களுக்கும் இதுவரை கடுங்காவல் தண்டனையே விதித்து வருகிறேன். அந்தத் தண்டனையையே உனக்கும் அளிப்பதுதான் நியாயம். இப்பொழுதுள்ள பல சந்தர்ப் பங்களை நினைத்துச் சும்மாயிருக்கிறேன். கடமையைச் செலுத்தியதற்காக உன்னிடம் அடிபட்ட இந்த வீரனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு உன் அறைக்குப் போ.

ராஜாங்க வேலையாயிருக்கும்போது யார் இடைஞ்சல் செய்வதையும் உபசேனாதிபதி அஜித் சந்திரன் விரும்புவ தில்லை" என்றான்.

அவன் குரலில் அதிகாரத் தோரணை மேலோங்கி இருந் தது. கண்களில் எழுந்த கோபம் சிறிதும் அடங்கவில்லை. ஹூண மகளின் உள்ளமும், அடங்காத கோபத்திற்குள்ளாகி எரிமலையென எழுந்தது. அதைத் தொடர்ந்து சொற்களும் அக்கினியைக் கக்கின. "உபாத்தியாயரே! உம்மிடத்தில் நான் வைத்த பிரியத்தால் உமக்கு உன்மத்தம் பிடித்துவிட்டது. யாரிடம் பேசுகிறீர் என்பதை நினைக்காமல் பேசுகிறீர். அடிமையிடம் அடிலன் மகள் மன்னிப்புக் கேட்க வேண்டுமா? என் உயிர் போனாலும் நடக்காது. சிறையைப் பற்றிப் பேசி சித்ராதேவியைப் பயமுறுத்த வேண்டாம். நடக்காது உபாத்தியாயரே, நடக்காது. சாட்டையாலடிபட்டு இதே மாளிகையில் சாகவிருந்த உபாத்தியாயரே, உமது தலை கோதண்டத்தில் தொங்கிக்கொண்டிருந்த நாளை நினைத்துப் பாரும்" என்று கூச்சல் போட்டாள் சித்ராதேவி.

"கூச்சலால் பிரயோஜனமில்லை ஹூண மகளே! என் கட்டளைப்படி முகுந்தன் உன்னை உள்ளே விட மறுத்தான். அவனை நீ மீறியதே குற்றம். மீறியதுமில்லாமல் அடித்தது பெருங்குற்றம். இந்த அறையின் உள்ளே என் அனுமதியின்றி நுழைய நீ யார்? மரியாதையாக அவனிடம் மன்னிப்புக் கேள்."

"கேட்காவிட்டால்?"

"உன்னை பலவந்தமாக அவன் முன்பாக மண்டியிட வைப்பேன்."

இதைக் கேட்டதும் சித்ராதேவியின் உடல் நடுங்கியது. தான் இருந்த அந்தஸ்தென்ன? இப்பொழுதிருக்கும் நிலை யென்ன? இதை நினைத்துக் குன்றிப் போனாள். உள்ளூர இருந்த கோபம் சோகமாக மாறி அழுகை வரும் போலிருந்

தது சித்ராவுக்கு. அந்தப் பலஹீனத்தை முகுந்தன் முன்பாகக் காட்ட இஷ்டப்படாத சித்ராதேவி, "மன்னிக்க வேண்டும் மகாப்பிரபு" என்று முகுந்தனைப் பார்த்து வேகமாகச் சொல்லிவிட்டு விடுவிடு என்று அறையைவிட்டு ஓடினாள். சற்றுத் தூரத்தில் நின்று காமினி இந்த நாடகத்தைக் கவனித்ததைக்கூட கோபத்தால் இருண்ட கண்களையுடைய சித்ராதேவி கவனிக்கவில்லை.

சித்ராதேவி சென்றதும் உபாத்தியாயன் முகுந்தனைப் பார்த்து, "என்ன இருந்தாலும் பெண் முகுந்தா. அவளை அதற்கு மேல் எதுவும் சொல்வதற்கில்லை" என்றான்.

"நீங்கள் செய்ததே அதிகம் எஜமான். தேவியார் விஷயத்தில் நீங்கள் இத்தனை கடுமை காட்டியிருக்க வேண்டாம்" என்றான் முகுந்தன்.

"ராஜாங்க வேலையில் நம் சொந்த உறவுகளையும் உணர்ச்சிகளையும் சம்பந்தப்படுத்தக் கூடாது முகுந்தா! இந்தக் கஷ்டத்தைப் பார். குப்த ராஜ்யத்துக்குக் கடிதம் எழுதும் போதெல்லாம் ஏதாவது தொல்லைகள் நமக்கு" என்று சொல்லிவிட்டு மீண்டும் அறைக்கோடிக்குச் சென்று கடிதங்களை எழுதுவதில் ஆழ்ந்துவிட்டான். கடிதங்களை முடித்து முத்திரை வைத்தபின் முகுந்தனிடம் கொடுத்து, "ஜாக்கிரதை முகுந்தா, இவற்றுக்குப் பதில் கிடைப்பதிலிருக்கிறது மற்ற விஷயங்கள்" என்றான்.

"சரி எசமான்" என்று சொல்லி முகுந்தன் சென்றான். உபாத்தியாயன் விளக்கை அணைத்துவிட்டுக் கைகளைச் சோம்பல் முறித்து மஞ்சத்தில் படுத்துக்கொண்டான். சற்று நேரத்திற்கெல்லாம் மெள்ள எழுந்திருந்து சித்ராதேவியின் அறையை நோக்கி நடந்தான்.

சித்ராதேவியின் அறைக் கதவு திறந்தே கிடந்தது. கோபத்தில் வந்ததால் கதவை சாத்தாமலே போய்ப் படுக்கையில் தொப்பென விழுந்தாள். உபாத்தியாயன் வரும்போது

கூட விழுந்தது விழுந்தபடியே இருந்தாள். உபாத்தியாயன் அவளருகே கட்டிலில் உட்கார்ந்து கொண்டான். அருகில் உட்கார்ந்தது யாரென்பதை இயற்கையான உணர்ச்சியே அறிவித்தது. ஆகவே, அவன் உடல் தன்மேல் படாமல் சற்று நகர்ந்து படுத்தாள். உபாத்தியாயன் அவளைப் பலவந்தமாகத் தன் கைகளால் திருப்பி அவள் முகத்தைப் பார்த்தான். சித்ராதேவியின் விழிகளில் நீர் ஊற்றென ஓடிக்கொண்டிருந்தது. உபாத்தியாயன் உள்ளம் மெழுகென உருக ஆரம்பித்தது.

உபாத்தியாயன் அவள் மனோநிலையைத் தெளிவாகத் தெரிந்து கொண்டிருந்தான். ஆகவே எதுவும் பேசாமல் லேசாக அவளுக்காகச் சாய்ந்து தன் இரு கைகளையும் அவள் கைகளுக்குள்ளாகக் கொடுத்து முதுகுப் பக்கமாக வாங்கி மெள்ள அவளைத் தூக்கினான்.

"விடுங்கள் என்னை" என்ற சித்ரா திமிறினாள்.

அஜித் சந்திரன் விடவில்லை. அவளைத் தூக்கித் தன் மார்புமீது சாத்திக்கொண்டான்.

"என்ன உரிமையுடன் என்னைத் தொட வருகிறீர்கள்?" என்றாள் சித்ரா எரிச்சலுடன்.

"எல்லாம் நீ அளித்த உரிமைதான்."

"வேலைக்காரனைப் போய்க் கட்டிக்கொள்ளுங்கள்."

"அவன் புறப்பட்டுப் போய்விட்டானே!" இதைச் சொல்லி உபாத்தியாயன் நகைத்தான்.

சித்ராதேவியின் சினம் உச்ச நிலையை அடைந்தது. "என் பிழைப்பு உங்களுக்குச் சிரிப்பாகவே இருக்கிறது?" என்று சொல்லி அழ ஆரம்பித்துவிட்டாள். "சித்ரா! அழாதே! நீ என்ன குழந்தையா? என் மனம் உனக்குத் தெரியாதா? இதோ பார்! இப்பொழுதிருக்கும் நிலையில் நான் எதைச் செய்தாலும் நீ பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும். சில வேளைகளில் என் செயல்களுக்கு உனக்கு அர்த்தம் புரியாது. புரிந்துகொள்ள ஆசைப்படாதே. உன்னையும்

என்னையும் உன் தம்பியையும் எதிர்நோக்கியிருக்கும் அபாயம் தீர்ந்ததும் உனக்கே எல்லாம் தெள்ளென விளங்கும். நமது ஒவ்வொரு செயலையும், பார்வையையும் காமினி கவனித்து வருகிறாள். ஆகவே, நான் ஏதேதோ நாடகங்கள் ஆடுவேன். அதற்கெல்லாம் உட்பட்டிரு. பல்தேவின் நடவடிக்கைகளின் மர்மம் சில நாட்களாக எனக்குப் புரியவில்லை. குப்த ராஜாங்க தூதனாகச் சொல்லிக்கொண்டு புது வீட்டில் சதி வேலைக்கு யாரையோ சேர்த்து விட்டான். அவன் பேச்சு பல விதங்களில் சந்தேகத்தைக் கிளப்புகிறது. தோரமானாவை இஷ்டப்பட்டபோது இழுத்துத் தன்னால் கொல்ல முடியுமென்று என்னிடமே பெருமையடித்துக் கொள்கிறான்! என் ஊகம் சரியாயிருந்தால் தோரமானா இந்த ஊரிலிருந்து அதிக தூரத்திலில்லை. வெகு அருகிலிருந்தே நம் கழுத்துக்குச் சுருக்கைத் தயாரித்துக் கொண்டிருக்கிறான்” என்று உபாத்தியாயன் அவள் கன்னத்துக்கருகில் தன் கன்னத்தை ஒட்டி வைத்துக் கொண்டு அந்தரங்கமாய்ப் பேசிக்கொண்டு போனான். அவன் நடத்தைக்கு ஓரளவு காரணத்தைப் புரிந்துகொண்ட சித்ராதேவியும், “அப்படியானால் சுருக்கை ஏன் இழுக்கவில்லை” என்று மெள்ளக் கேட்டாள்.

“இன்னும் ஒருவன் சுருக்கில் சிக்கவில்லை.”

“யார் அது?”

“உன் தம்பி!”

“எங்கே அவன்?”

“தோரமானாவின் கண்களிலிருந்து எப்படியோ தப்பி விட்டான். அவனிருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க ராகுலனை ஏவியிருக்கிறார்கள்.”

“அவரால் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?”

“ராகுலன் உனக்கு உன் தந்தையால் நிர்ணயிக்கப்பட்ட மணாளன். உன் தம்பி உன் தந்தையின் கட்டளையை நிறை

வேற்றுவதில் உறுதியாயிருப்பவன். ஆகவே, யாரையாவது அவன் சந்திக்க விரும்பினால் ஒன்று உன்னைச் சந்திக்க விரும்புவான், அல்லது ராகுலனைச் சந்திக்க விரும்புவான். ராகுலனைச் சந்தித்தால்...”

“காட்டிக் கொடுக்கத் தயங்கவே மாட்டானே அந்தப் பாவி” என்றாள் சித்ரா, பயத்தால் பழைய மரியாதையும் சிறிது உதறிவிட்டு.

“அதைத்தான் தோரமானாவும் எதிர்பார்க்கிறான்.”

“என் தம்பியிடம் தோரமானாவுக்கு ஏன் அவ்வளவு விரோதம்?”

“தோரமானாவின் அதிகாரத்துக்கு ஹூணர்களின் பாரதப் பிராந்தியத்தில் இடையூறாக நிற்பவன் அடிலன் மகன் ஒருவன்தான்.”

இந்த ராஜீய அதிகாரப் போரை ஓரளவு சித்ராவும் புரிந்து கொண்டு பெருமூச்சு விட்டாள்.

“பயப்படாதே சித்ரா! இந்த முடிச்சுகளை அவிழ்க்கத்தான் நான் இருக்கிறேன். நீ மாத்திரம் அடிக்கடி குறுக்கிடாதே. இனி உன்னை அடிக்கடி புதுவீட்டுச் சதிக் கும்பலிடம் அழைத்துப் போகிறேன். அங்குதான் இந்த நாடகம் முடிவடையும். எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். என்னிடம் நம்பிக்கையை வைத்துச் சும்மா இரு” என்று கெஞ்சினான் உபாத்தியாயன்.

பூரண நம்பிக்கைக்கு அடையாளமாகச் சித்ராதேவியிடமிருந்து பெருமூச்சொன்று கிளம்பியது. ஆனால், அவள் சும்மா இருக்கவில்லை. தன் இரு கைகளையும் அஜித் சந்திரன் கழுத்தையும் முகத்தையும் சுற்றிக் கொடிபோல் படரவிட்டு அவன் முகத்தையும் தன் மார்புக்காக இழுத்தாள்.

50. சேனாதிபதி பல்தேவர்

புண்பட்ட பெண் உள்ளத்திற்கு ஆறுதலளிக்க, ஆண் மகன் அன்பைவிடச் சிறந்த மருந்து உலகத்தில் கிடையாது. புருஷன் தங்களை அணுகுவதிலும் கொஞ்சுவதிலும் பெண்கள் எவ்வளவோ திருப்தியடைகிறார்கள். ஆகவே சித்ராவின் இன்பமயமான வரவேற்பிலிருந்து இம்முறை உபாத்தியாயன் தன்னைச் 'சரே'லென்று விடுவித்துக் கொள்ளவில்லை. மெள்ள அவளைச் சமாதானப்படுத்தி, "சித்ரா! நாளைக்கு நாம் புது வீட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. வழக்கம்போல் சாயந்தரமாக வருகிறேன், தயாராயிரு" என்று சொல்லிவிட்டுக் கட்டிலிலிருந்து எழுந்திருந்து செல்ல முயன்றான்.

"புது வீட்டில் திரும்பத் திரும்ப என்ன இருக்கிறது உபாத்தியாயரே? ஒவ்வொரு நாளும் ஏதோ அநாவசியமான பேச்சு நடக்கிறதேயொழிய காரியத்தில் ஒன்றையும் காணோமே" என்றாள் சித்ராதேவி.

"எந்தக் காரியம் நடப்பதற்காக அந்தச் சதி ஏற்பட்டிருக்கிறதோ அந்தக் காரியம் நடக்கக் காலம் வரவில்லை சித்ரா. அதனால்தான் அவர்கள் சும்மா இருக்கிறார்கள்" என்று உபாத்தியாயன் பதில் சொன்னான்.

"என்ன காரியம்? தோரமானாவைக் கொல்வது தானே?" என்று சித்ரா கேட்டாள்.

"அது அவ்வளவு முக்கியமல்ல" என்று பதிலளித்தான் உபாத்தியாயன்.

"என் தம்பியைத் தலைவனாக்குவதா?"

"அதுவும் இல்லை."

"வேறு என்ன காரியத்திற்காக இந்தக் கூட்டம்?"

உபாத்தியாயன் சற்றுச் சிந்தித்தான். "இப்பொழுது என்னைக் கேட்காதே சித்ரா! சீக்கிரம் நீயே புரிந்து கொள்வாய்" என்று சொல்லிவிட்டு அவள் அறையைவிட்டு வெளியேறினான்.

மறுநாள் சொன்னது சொன்னபடி உபாத்தியாயன் அவள் அறைக்கு வந்து, "சித்ரா! சூரியன் மறையும் நேரமாகி விட்டது. புறப்படலாமா?" என்று கேட்டான். அவன் இதழ்களில் லேசான புன்னகை அரும்பி நின்றது. உள்ளே மிகுந்த உற்சாகமும் சந்துஷ்டியும் நிரம்பியிருந்ததை முகம் எடுத்துக் காட்டியது. அவன் சந்தோஷத்துக்குக் காரணத்தைச் சித்ராவால் புரிந்துகொள்ள முடியவில்லை. இருந்தாலும் தாங்கள் காதலிக்கும் புருஷன் சந்துஷ்டியில் கலந்து கொள்ளும் பெண்களின் மனப்போக்கின்படி சித்ராவும் மிகுந்த உவகையுடன் ஆடைகளைச் சிறிதே மாற்றிக்கொண்டு உபாத்தியாயனுடன் புது வீட்டுக்குப் புறப்பட்டாள்.

சண்பகத் தோட்டத்தின் மார்க்கமாகவே உபாத்தியாயன் அவளை அழைத்துச் சென்றான். வழி நெடுகவும் சிரித்து விளையாடிப் பேசிக்கொண்டே வந்தான். சண்பகத் தோட்டத்தின் எல்லையைத் தாண்டி அருவிக்கருகில் வந்ததும் உபாத்தியாயன் மனம் பழைய கால நிகழ்ச்சிகளில் ஈடுபடலாயிற்று. சித்ராவும் கடந்தகால நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்துக்கொண்டே மௌனமாக நடந்தாள். அந்த எண்ணங்களின் விளைவாக இருவரும் ஒருவருக்கொருவர் கிட்டே நெருங்கிக் கைகளைக் கோத்தவண்ணம் புது வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். வழக்கம்போல உபாத்தியாயன் கதவைத் தட்ட காவலன் கதவைத் திறந்தான். உபாத்தியாயன் சித்ராதேவியுடன் உள்ளே நுழைந்து கூடத்தை நோக்கிச் சென்றான்.

புது வீட்டுக் கூடம் அன்று ஒரே கோலாகலமாயிருந்தது. சித்ராவோ அஜித் சந்திரனோ முன்பின் பார்த்திராத புதுப் புதுப் பேர்வழிகள் பலர் கூடத்தில் ஏகச் சத்தம் போட்டு அளவளாவிக் கொண்டிருந்தனர். உபாத்தியாயன் கூடத்து வாயிற்படியிலேயே நின்று அந்தக் கூட்டத்தைக் கவனித்தான். கவனிக்கக் கவனிக்க அவன் இதழ்களில் ஒரு ஏளனப் புன்முறுவல் தவழலாயிற்று. அவன் முகபாவங்களையும், கூடத்துப் பிரமுகர்களையும் சித்ராதேவி மாறிமாறிப் பார்த்து என்ன பேசுவதென்று தெரியாமல் திகைத்தாள்.

"ரகசியமாக நடத்த வேண்டிய சதிக்கூட்டம் எப்படியிருக்கிறது பார்த்தாயா, சித்ரா? இன்னும் அநேக வேடிக்கைகளை இன்று பார்க்கப் போகிறோம். இங்கு இருக்கிற ஏற்பாடுகளைப் பார்த்தால் யாரோ இன்னொரு பெரிய மனிதரை இவர்கள் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. அதோ அந்தப் புது மஞ்சத்தைப் பார்! அந்த மாதிரி மஞ்சம் ராஜப் பிரதிநிதிகளுக்குத்தான் குப்த ராஜ்யத்தில் போடுவது வழக்கம். அதன் இருபுறங்களிலும் நிற்கும் வேலைக்காரர்களின் உடுப்புகளைப் பார். எல்லாம் குப்த ராஜ்ய உடுப்புகள். நாடகம் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் பல்தேவ் செய்து முடித்திருக்கிறான்" என்று சித்ராவுக்கு அங்கிருந்த சூழ்நிலையைச் சுட்டிக் காட்டினான் உபாத்தியாயன்.

சித்ராவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கூட்டத்தில் சதியாலோசனைக்கு வேண்டிய சகல அம்சங்களும் நிரம்பியிருந்ததைப் பார்த்தாள். ஆனால், சதியாலோசனைக்காரர்கள் இவ்வளவு படாடோபமாகவும், பகிரங்கமாகவும், கூச்சல் போட்டும், சிரித்தும் அமர்க்களப்படுத்துவது அவளுக்கும் ஆச்சரியமாகவேயிருந்தது. இருந்த நிலையைப் பார்த்து ஏதோ எண்ணிக்கொண்டிருந்த சித்ராதேவியை உள்ளறையிலிருந்து அப்போதுதான் வெளியே வந்த பல்தேவ் பார்த்துவிட்டான். பார்த்ததும் பரபரப்புடன்

உபாத்தியாயனும் சித்ராவும் இருந்த இடத்துக்கு ஓடி வந்து, "உபாத்தியாயரே! வரவேண்டும். சித்ராதேவி, வாருங்கள். சில நாட்களாக இந்தப் பக்கம் காணோமே என்று பார்த்தேன். இன்று நீங்கள் இங்கு வராவிட்டால் நாளை நான் மாளிகைக்கு வந்து உங்களைச் சந்தித்திருப்பேன்" என்று சொல்லி அவ்விருவரையும் வரவேற்றான்.

"இன்று இங்கு என்ன அப்படி விஷேசம் பல்தேவ்?" என்று உபாத்தியாயன் கேட்டான்.

"இப்பொழுது சொல்லமாட்டேன். இன்று ஒருவர் இங்கு வரப்போகிறார். அவரைப் பார்த்ததும் நீங்களே பிரமித்துப் போவீர்கள்" என்றான் பல்தேவ்.

"யாரது?" என்று பிரமிப்புடன் சித்ராவும், "சித்ராவின் தம்பியா?" என்று கவலையுடன் உபாத்தியாயனும் ஏக காலத்தில் கேட்டார்கள்.

சித்ராவின் கேள்வி பல்தேவைக் கலங்க வைக்கவில்லை. ஆனால், உபாத்தியாயன் கேள்வியும் அவன் குரலில் தொனித்த கவலையும் பல்தேவை ஒரு விநாடி பதில் சொல்லத் தாமதிக்க வைத்தன.

"சித்ராதேவியின் தம்பியல்ல, உபாத்தியாயரே! ஏன் கேட்கிறீர்கள்?" என்றான் பல்தேவ்.

விநாடி நேரத்தில் தன் உணர்ச்சிகளை மனச் சம்புடத்தில் வைத்து மூடிவிட்ட உபாத்தியாயன் சிரித்துக்கொண்டே, "ஒன்றுமில்லை பல்தேவ்! நாம் இப்பொழுது தோரமானாவின் ஸ்தானத்தில் வைக்கப்போவது சித்ராவின் தம்பியாயிற்றே. அவனேதான் வந்துவிட்டானோ என்பதற்காகக் கேட்டேன்" என்று சொன்னான் உபாத்தியாயன்.

அஜித் சந்திரன் சிரிப்பு பல்தேவின் சந்தேகத்தை ஓரளவு நிவர்த்திக்கவே, "இல்லை, இல்லை. உபாத்தியாயரே! இப்பொழுதிருக்கும் நிலையில் சித்ராவின் தம்பியை வரவழைப்

பேனா? அதற்கு இன்னும் சமயமிருக்கிறது" என்றான் பல்தேவ்.

இந்தப் பதில் உபாத்தியாயன் மனத்தில் ஒரு கேள்வியை எழுப்பி வைத்தது. "இப்பொழுதிருக்கும் நிலையில் சித்ராவின் தம்பியை வரவழைப்பேனா என்கிறானே, அப்படியானால் சித்ராவின் தம்பியிருக்குமிடம் இவனுக்குத் தெரியுமா?" என்று உபாத்தியாயன் யோசித்தான். அதைத் தொடர்ந்து இன்னும் பல கேள்விகளையும் எழுப்பிக் கொண்டான் உபாத்தியாயன்.

மேற்கொண்டு உபாத்தியாயனும் எதுவும் பேசவில்லை. பேச பல்தேவும் இடங்கொடுக்கவில்லை. "வந்து உட்காருங்கள், வாசற்படியிலேயே எதற்காக நின்று பேச வேண்டும்?" என்று அவ்விருவரையும் கூடத்துக்குள்ளே அழைத்துச் சென்று மற்றவர்களோடு ஆசனங்களில் உட்கார வைத்தான். அந்தக் கூடத்தில் பல புதிய ஹூணப் பிரபுக்கள் இருந்தார்கள். இன்னும் இரண்டொருவர் குப்த ராஜ்யத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் பூரகுப்தனின் வலது கரமென்று அங்கு நடந்த பேச்சிலிருந்து உபாத்தியாயன் உணர்ந்து கொண்டான். எல்லோருக்கும் பல்தேவ் சிற்றுண்டிகளையும், குடி வகையறாக்களையும் வழங்கினான். குப்த ராஜ்யத்திலிருந்து வந்திருந்த இரு பிரபுக்களைத் தவிர மற்ற எல்லோரும் சிற்றுண்டி மட்டுமின்றி லேசாக மதுபானமும் செய்தார்கள். உபாத்தியாயனும் சித்ரா தேவியும் சிற்றுண்டிகளையோ மதுக்கிண்ணங்களையோ தொடவில்லை.

பல்தேவ் தானே ஓடியும், வேலையாட்களை விரட்டியும் வந்திருந்தவர்களை உபசரித்துக்கொண்டிருந்தான். அவனுடைய நடவடிக்கைகளைக் கவனித்த அஜித் சந்திரன் மனத்தில் ஏதோ எண்ணங்கள் எழுந்து நின்றன. அத்துடன் அவன் கண்களும் அங்கிருந்த ஒவ்வொருவரையும்

ஊடுருவிப் பார்த்து எடைபோட்டுக் கொண்டிருந்தன. சித்ரா சிலையென உட்கார்ந்திருந்தாள்.

ஆகாரம் முடிந்து பாத்திரங்கள் அகற்றப்பட்டதும் பல்தேவ் நாடக மேடையை ஏற்பாடு செய்யும் சூத்திரதாரியைப் போல் எல்லோரையும் எழுந்திருக்கச் சொல்லி ஆசனங்களை வட்டமாகப் போட்டு, அனைவரையும் அமரச் சொல்லி தானும் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு அன்றைய கோலாகலத்துக்குக் காரணம் சொல்லலானான்.

"நாம் இன்று கூடியிருக்கும் விஷயத்தை உங்களுக்குக் கூறுமுன்பு குப்த ராஜ்யத்திலிருந்து புதியதாக வந்திருக்கும் இந்த இரண்டு பிரபுக்களையும் உங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். இதோ இருப்பவர் குப்த ராஜ்யத்தின் வருங்கால மன்னரான பூரகுப்தனின் வலதுகரம் போன்ற மஹாப்பிரபு ரகுவீரர். அவருடன்கூட இருப்பவர் மஹாப்பிரபு நரசிம்ம பூபதி. பூரகுப்த மகாராஜா இந்த இரு பிரபுக்களையும் நமக்கு உதவ அனுப்பியிருக்கிறார்கள். நாம் மேற்கொண்டிருப்பது அபாயமான காரியமானாலும் குப்த ராஜ்யத்தின் பூரண பலம் நம்மிடமிருக்கிறது. பூரகுப்த மஹாராஜா நமக்கு எப்படி உதவுவார். அவருடைய நோக்கமென்ன என்பதை இப்பொழுது ரகுவீர மஹாப்பிரபு சொல்லுவார்" என்று உணர்ச்சி மிகுந்த குரலில் கூறினான் பல்தேவ்.

இதைக் கேட்டதும் மற்ற சதிகாரர்கள் ஏதோ பொதுக் கூட்டப் பிரசங்கத்தைக் கேட்டதும் கைதட்டும் பாமரர்களைப் போல் கையைத் தட்டினார்கள். சித்ராவின் பூக்கரங்கள்கூட ஒன்றையொன்று லேசாகத் தட்டின. உபாத்தியாயன் மட்டும் அசையாமல் உட்கார்ந்திருந்தான். அவன் முகம் வெறும் சிலைபோல் இருந்ததைப் பக்கவாட்டில் பார்த்த சித்ரா கவனித்தாள். அவன் அப்படி உணர்ச்சியேதுமின்றி உட்கார்ந்திருந்ததற்குக் காரணத்தை அறிய அவள் யோசனை ஓடுமுன்பு குப்த ராஜ்யப் பிரமுகர் பேசலானார்.

"ஹூணர்களில் மிக்க குரூரமானவனும் பாரத மக்களுக்கு இணையில்லாத கொடுமையைச் செய்திருப்பவனுமான தோரமானாவை ஒழிக்கச் சேனாதிபதி பல்தேவர் திட்டமிட்டிருப்பதைக் கேட்ட பூரகுப்த மஹாராஜா அவருக்குக் குப்த ராஜ்யத்தினாலான சகல மரியாதைகளையும் செய்வதெனத் தீர்மானித்திருக்கிறார். மேலும்..." என்று தொடர்ந்த ரகுவீர மஹாப்பிரபுவை இடைமறித்து "பல்தேவ் அவர்கள் எப்பொழுது சேனாதிபதியானார்? எந்தச் சேனைக்கு அதிபதி?" என்ற கேள்வி குறுக்கே பாய்ந்து தடுத்தது. அனைவர் கண்களும் உபாத்தியாயன் மேல் திரும்பின. கேள்வியைக் கேட்ட உபாத்தியாயன் எந்த வித உணர்ச்சியுமின்றிச் சாதாரணமாகவே உட்கார்ந்திருந்தான்.

ரகுவீர மஹாப்பிரபு சிறிது சங்கடத்துடன் அஜித் சந்திரனைப் பார்த்தார். பிறகு, "இந்த சுதந்திரப் போர்க் கோஷ்டியின் முயற்சி ஈடேறி, மலைவாசலிலிருந்து குப்த எல்லை வரையில் பரந்து கிடக்கும் ஹூணப் பிரதேசம் விடுதலையடைந்தால், பிராந்திய சேனாதிபதி பதவியைப் பல்தேவருக்கு அளிப்பதாகப் பூரகுப்த மஹாராஜா உறுதி கூறியிருக்கிறார்" என்றார்.

"பிற்காலப் பதவியா?"

"ஆம். ஆனால் இப்பொழுது முதலே பல்தேவரைச் சேனாதிபதியாகப் பாவிக்கவும் அவரது கட்டளைகளை நிறைவேற்றவும் இங்கிருப்பவர்களுக்குப் பூரகுப்த மஹாராஜா உத்தரவிட்டிருக்கிறார்."

"குப்த ராஜ்யத்தின் பிரபு வம்சத்தைச் சேர்ந்த என் வார்த்தையில் நம்பிக்கை இல்லாதவர்களுக்குப் பதில் சொல்ல மார்க்கமிருக்கிறது" என்று கோபத்துடன் மஹாப்பிரபு தமது இடையிலிருந்த வாளைத் தட்டிக் காட்டினார்.

அதுவரை கேள்வி கேட்டுவந்த உபாத்தியாயன் இந்த வீரர்களுக்குப் பதில் சொல்லாமல் புன்முறுவல் செய்தான். புன்முறுவல் பேச்சைவிடக் கோபம் மூட்டக்கூடியதாயிருந்தது.

மஹாப்பிரபு மேலும் சொன்னார்: "இந்தச் சில்லறை ஆட்சேபணை முடிந்துவிட்டதால், மேற்கொண்டு விஷயத்தைக் கவனிப்போம். தோரமானாவின் ஆதிக்கம் ஒழிந்தால்தான் குப்த ராஜ்யம் க்ஷேமப்படும். மலைவாசல் பிராந்தியத்துக்கு வேண்டியதும் குப்த ஆட்சி, அல்லது குப்தர்கள் அதிகாரத்துக்குட்பட்ட ஒரு சிற்றரசு. அப்படி ஒரு சிற்றரசு ஏற்படுமானால் அதற்கு அடிலன் மகனை அரசனாக்கப் பூரகுப்த மஹாராஜா ஒப்புக்கொண்டிருக்கிறார். அதற்கான சகல உதவிகளையும் அவர் செய்வார்..." இப்பொழுது கரகோஷம் ஏற்பட்டது. சித்ராதேவி கரகோஷத்தில் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டாள். அவள் உற்சாகத்தைச் சிதற அடிக்க உபாத்தியாயன் குரல் மீண்டும் எழுந்தது.

"என்ன விதமான உதவி பூரகுப்தரிடமிருந்து கிடைக்கும்?"

"மலைவாசல் பிராந்தியத்தில் புரட்சி ஏற்பட்டால் அதற்குச் சகாயமாகக் குப்தப் படைகள் வைதஸ்தா நதிப் பிராந்தியத்தில் தாக்கும். இத்தகைய இரு பக்கத் தாக்குதலால் ஹூணப் படைகள் சிதறும்" என்று பதில் கூறினார் மஹாப்பிரபு.

"இங்கு புரட்சி எப்படி உண்டாகும்?" என்று கேட்டான் உபாத்தியாயன்.

"அதற்குத்தான் நாமிருக்கிறோம். தோரமானாவை ஒழித்தால் ஜனங்கள் எழுச்சி ஏற்படும்!"

"தோரமானா ஒழியாவிட்டால்?"

மஹாப்பிரபுவுக்கு மகாகோபம் வந்துவிட்டது. "இந்த மாதிரித் தாறுமாறாகக் கேள்வி கேட்கும் இவன் யார்?" என்று உணர்ச்சி பொங்கக் கேட்டார்.

"இவர் தோரமானாவின் உபசேனாதிபதி அஜித் சந்திரன். 'உபாத்தியாயர்' என்று நாங்கள் இவரை அழைப்பது வழக்கம்" என்று பல்தேவ் அவருக்கு உபாத்தியாயனை அறிமுகப்படுத்தினான். "உபாத்தியாயரா! உபாத்தியாயரா!" என்று விழித்தார் மஹாப்பிரபு. அவர் கண்களில் சொல்லொண்ணா அச்சமும் தோன்றியது. அதுவரை கம்பீரமாயிருந்த இன்னொரு பிரபுவும் கொஞ்சம் சங்கடத்துடன் ஆசனத்தில் அசைந்து உட்கார்ந்தார். அதே சமயத்தில், "குப்த ராஜ்யத்திலிருந்து புதுத் தூதர் ஒருவர் வந்திருக்கிறார்" என்று காவலன் அறிவித்தான்.

உடனே பல்தேவ் தனியாக இருந்த பெரிய குப்த ராஜ்ய மஞ்சத்தை இழுத்துச் சரியாகப் போட்டுப் பரபரப்புடன், "வரச் சொல்" என்று காவலனுக்குக் கட்டளையிட்டு, மற்றவர்களைப் பார்த்து "இப்பொழுது வரப்போகிறவர் குப்த ராஜ்யாதிகாரம் பெற்ற விசேஷத் தூதர். முக்கிய செய்தியொன்றைக் கொண்டு வருகிறார்! அவரை உங்களுக்கு அறிமுகப்படுத்தவே உங்களனைவரையும் வரவழைத்தேன்" என்று அறிவித்தான்.

மிகுந்த படாடோபத்துடன் அனைவரையும் அலட்சியமாக நோக்கிக்கொண்டே குப்த ராஜ்ய உடையில் ராகுலன் உள்ளே நுழைந்தான்.

51. உபாத்தியாயன் எச்சரிக்கை!

குப்த ராஜ்யத்தின் விசேஷத் தூதன் என்ற காரணத்தால் கூடத்திலிருந்த பலர் மரியாதைக்கு அடையாளமாக எழுந்து நின்று, ராகுலனை வரவேற்றார்கள். தங்கள் அந்தஸ்தின் உயர்வின் காரணமாக இரண்டு குப்த ராஜ்யப் பிரபுக்களும் அலட்சியத்தின் காரணமாக அஜித் சந்திரனும் பிரமிப்பின் காரணமாகச் சித்ராதேவியும் ஆசனங்களை விட்டு அசையவில்லை! தடபுடலாக உள்ளே நுழைந்த ராகுலன் தனக்கு மரியாதை செய்தவர்களைப் புன்சிரிப்புடன் நோக்கிவிட்டு, உட்கார்ந்திருந்தவர்களின் மீது கண்களைச் செலுத்தியதும் திடுக்கிட்டுப் போனான். ராகுலன் வரவால் சித்ராதேவியின் மனம் சொல்லவொண்ணாக் குழப்பத்தை அடைந்து கொண்டிருந்தது. அவனை வெறுக்கக் காரணங்கள் பல அவளுக்கிருந்த போதிலும் அவன் தன்னுடைய மணாளனாகத் தந்தையால் தேர்ந்தெடுக்கப் பட்டவனாகையாலும் அந்தத் திருமணத் திட்டத்தில் தந்தையின் வாக்கை நிறைவேற்றுவதில் தம்பியும் திடசித்தமாயிருந்தபடியால் ராகுலனைத் துச்சமாகத் தூக்கியெறியக் கூடிய நிலைக்கு அவள் வரவில்லை. அவன் வரவால் தனக்கும் உபாத்தியாயனுக்கும் உள்ள உறவு எவ்வளவு தூரம் பாதிக்கப்படும் என்பதில் சித்ராதேவி எண்ணங்களை ஓட்டினாள். தனக்கு அவன் மேலுள்ள பிடிப்பை ராகுலன் விலக்க இஷ்டப்பட்டுப் புதுவீட்டிலேயே நிறுத்திக் கொண்டால் என்ன செய்வது என்று சிந்தித்தாள். ஆகவே, ராகுலன் பார்வை அவள் மேல் ஊன்றி விழுந்தபோது அவள் கண்கள் தரையை நோக்கிச் சாய்ந்தன. அவன்

அவளை நோக்கி, "சித்ரா!" என்று அழைத்ததும் பதில் சொல்லக்கூட அவள் சக்தியற்றவளானாள்.

இத்தனைக்கும் உபாத்தியாயன் இருந்த நிலையை விட்டுச் சிறிதும் அசையவில்லை. சதி நாடகப் பாத்திரங்களை ஒவ்வொன்றாகக் கவனித்துக்கொண்டிருந்தான். அவன் என்ன நினைக்கிறான் என்பதை உணரமுடியாதபடி முகம் கல்லாயிருந்தது. உபாத்தியாயன் இருந்த நிலை பல்தேவுக்குப் பெரிதும் சங்கடமாயிருந்தபடியால், "உபாத்தியாயரே! நீங்களும் நம்முடன் சேர்ந்திருப்பது ராகுலப் பிரபுவுக்குத் தெரியாது. என்ன பிரபு! ஏன் நிற்கிறீர்கள்? வாருங்கள். வந்து உட்காருங்கள்" என்று ஏதேதோ உளறினான்.

ராகுலன் எப்பொழுது பிரபுவானான் என்ற யோசனையில் உபாத்தியாயனின் புத்தி இறங்கவே அவன் இதழ்களில் இகழ்ச்சிப் புன்முறுவல் அரும்பலாயிற்று. அதைக் கண்ட ராகுலன் வெகுண்டு, "இங்கு சிரிப்பதற்கு என்ன இருக்கிறது" என்று உபாத்தியாயனை நோக்கிக் கேட்டான்.

"பிரபு! மன்னிக்க வேண்டும். பல புது விஷயங்களைக் கவனித்ததால் இதயத்தில் ஏற்பட்ட சந்தோஷம் புன்முறுவலாக வெளிவந்ததேயொழிய வேறில்லை" என்றான் உபாத்தியாயன். அவன் பேசிய முறையும் குரலின் தொனியும் அவன் மேலும் தங்களைப் பார்த்து நகைக்கிறான் என்ற அபிப்பிராயத்தைப் பல்தேவுக்கும் ராகுலனுக்கும் ஊட்டவே இருவர் முகத்திலும் சற்றுக் கோபக்குறி தோன்றியது. ஆகவே, ராகுலன் மீண்டும் கேட்டான்: "என்ன அந்தப் புது விஷயங்கள்?" என்று.

"பல்தேவ் சேனையில்லாமலே சேனாதிபதியாகிவிட்டார் என்று சற்று முன்புதான் கேள்விப்பட்டேன். இப்பொழுது தாங்கள் ராஜ்யமில்லாமலே ராஜப் பிரதிநிதியாகிவிட்டீர்களென்பதை அறிந்தவுடன் சிறிது மகிழ்ச்சியுண்டாயிற்று" என்று சொன்னான் உபாத்தியாயன்.

இந்த பதிலைக் கேட்ட பல்தேவ் அரண்டுபோய் "இவர் ராஜப் பிரதிநிதியென்ற விஷயத்தை நான் உங்களுக்கு இன்னும் சொல்லவில்லையே, எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?" என்று வினவினான்.

"ஊகித்தேன்" என்றான் உபாத்தியாயன்.

"எப்படி?"

"அதோ போட்டிருக்கும் அந்த மஞ்சத்தைக் குப்த ராஜ்யத்தில் ராஜப் பிரதிநிதிகளுக்குத்தான் போடுவது வழக்கம். குப்த ராஜ்யத்தில் பழக்கமுள்ளவர்களுக்கு இது தெரியும். சந்தேகமிருந்தால் ரகுவீர மஹாப்பிரபு அவர்களைக் கேட்கலாம்" என்றான் உபாத்தியாயன். அவன் சொல்வது சரியென்பதற்கு அடையாளமாக ரகுவீர மஹாப் பிரபுவும் கம்பீரமாகத் தலையை அசைத்தார்.

"மற்ற எல்லோரும் உட்கார்ந்திருக்கிறோம். பாக்கியிருப்பது அந்த மஞ்சம். வந்திருப்பது ராகுல மஹாப்பிரபு ஒருவர். ஆகையால் அவர்தான் ராஜப் பிரதிநிதியாயிருக்க வேண்டும் என்று ஊகித்தேன்" என்று அஜித் சந்திரன் மேலும் விளக்கினான்.

"ராஜப் பிரதிநிதிக்கு மரியாதை செய்வது வழக்கமில்லையா?" என்று ராகுலன் கோபத்துடன் கேட்டான்.

"உண்டு" என்று பதில் சொன்னான் அஜித் சந்திரன்.

"பின் ஏன் நீங்கள் எழுந்திருக்கவில்லை?" என்று கேட்டான்.

"ராஜப் பிரதிநிதியென்பது என் ஊகமே தவிர உறுதியாகவில்லையே!"

"இப்பொழுது உறுதியாகிவிட்டதால் எழுந்திருக்கலாமல்லவா?" உபாத்தியாயனை ஒரு முறையாவது நிற்க

வைத்துத் தனக்குப் பணியும்படி செய்யவேண்டுமென்ற அல்ப சந்தோஷத்தில் ராகுலன் இந்தக் கேள்வியை அதட்ட லாகக் கேட்டான்.

“தாங்கள் இத்தனை நேரம் நின்றபின் உட்கார வேண்டியது அவசியம். தாங்கள் உட்காரப் போகும்போது நான் எழுந்திருந்து என்ன பயன்?” என்று அஜித் சந்திரன் கேட்டுவிட்டு விஷமமாகச் சிரித்தான். ராகுலன் கோபம் எல்லை மீறிவிட்டது. ராஜப் பிரதிநிதியை இகழ்வதற்கு உண்டான தண்டனை என்னவென்பது உனக்குத் தெரியுமா?” என்று சீறினான்.

“தெரியும்; மரண தண்டனை.”

“அதை உனக்கு விதிக்கிறேன்” என்று சொல்லிவிட்டு, “பல்தேவ், உபாத்தியாயரைக் கைது செய்” என்று உத்தர விட்டான்.

பல்தேவ் பெரிய சங்கடத்துக்குள்ளாகி என்ன செய்வ தென்று தெரியாமல் விழித்தான். கூட்டத்திலிருந்த அனைவரும் அடுத்தபடி என்ன நேருமோ என்ற பயத்தால் ‘கப்சிப்’பென்று மௌனம் சாதித்தனர். இத்தனை சதிகாரக் கூட்டத்தில் இப்படி எதிர்பாராதபடி உபாத்தியாயன் சிக்கிக் கொண்டானே என்ற பயத்தில் மிரண்ட பார்வையொன்றை உபாத்தியாயன்மீது செலுத்தினாள் சித்ராதேவி.

“உபாத்தியாயரே! நாமெல்லோரும் நண்பர்கள். முக்கிய காரியத்துக்காகக் கூடியிருக்கையில் நமக்குள் சச்சரவு கூடாது” என்று பல்தேவ் கெஞ்சினான். அவன் பார்வை யில், ‘தயவுசெய்து சற்று எழுந்து நில்லுங்கள்’ என்ற கோரிக்கை தாண்டவமாடியது.

“ராகுல மஹாப்பிரபு, பிரபுவான விஷயமே எனக்குத் தெரியாது. ராஜப் பிரதிநிதியென்பதும் இன்னும் ஊர்ஜித மாகவில்லை” என்று உபாத்தியாயன் இழுத்தான்.

“ஏன் ஊர்ஜிதமாகவில்லை? நீங்கள்தான் கூறிவிட்டீர் களே” என்றான் பல்தேவ். உபாத்தியாயன் ஏதோ விட்டுக் கொடுக்கிறான் என்ற பிரமையில், உபாத்தியாயனின் அடுத்த சொற்கள் அதிக உஷ்ணமாக வெளிவந்தன.

“பல்தேவ்! ராகுலன்தான் முட்டாள் என்றால் உன் தலையிலுமா களிமண் மண்டிக் கிடக்கிறது? ஊகித்து விட்டால் மாத்திரம் ஒருவனை ராஜப் பிரதிநிதியென்று எல்லோரும் ஒப்புக்கொள்ள முடியுமா? அதுவும் தீவிர சதி யிலிருக்கும் இந்தக் கூட்டம் எவனையும் தகுந்த ருசுவின்றி ஏற்றுக்கொள்வது சாத்தியமா? ராகுலன் ராஜப் பிரதிநிதி யானால் வந்து உட்காரட்டும். ராஜாங்க அதிகாரம் எழுத்துப் பட இருந்தால் எடுத்துக் காட்டட்டும். பிறகு அவனை ராஜப் பிரதிநிதியாக ஒப்புக்கொள்வோம். அதற்குப் பிறகு அவனுக்கு நாம் எத்தகைய மரியாதையைச் செலுத்த வேண்டுமென்பதை தீர்மானிப்போம். இதை விட்டு வருகிறவன் போகிறவனுக்கெல்லாம் என்னிடமிருந்தோ இதோ இருக்கும் இந்தக் குப்த பிரபுக்களிடமிருந்தோ மரியாதையை எதிர்பார்த்தால் அது மடத்தனமில்லையா?” என்றான் உபாத்தியாயன்.

நிமிஷ நேரத்தில் ‘மஹாப்பிரபு,’ ‘தாங்கள்’ என்ற கௌரவ மொழிகளை நீக்கிவிட்டு, ‘முட்டாள்,’ ‘மடத்தனம்’ என்ற சொற்களை உபயோகித்து ராகுலனுக்கு உபாத்தி யாயன் செய்த மரியாதையைக் கண்டு கூடத்திலிருந்த அனைவரும் எதுவும் பேச வழியில்லாமல் சிலையாகிவிட் டார்கள். பல்தேவ் மட்டும் ராகுலனை மெள்ளச் சமாதானப் படுத்தி ஆசனத்தில் உட்கார வைத்து, “பிரபு! உங்கள் அதிகாரப் பத்திரத்தைக் காட்டிவிடுங்கள். அப்புறம் இங் கிருப்பவர்களெல்லாம் தங்கள் அடிமை” என்று சொல்லி யும், தமாஷாக நேர்ந்த தவற்றைச் சரிப்படுத்துவதுபோல் சிரித்தும் திண்டாடினான்.

மேலே எதுவும் பேசாமல் ராகுலன் ஆசனத்தில் அமர்ந்து தன் அதிகாரப் பத்திரத்தைக் கச்சையிலிருந்து எடுத்துப் பல்தேவிடம் நீட்டினான். பல்தேவ் உட்கார்ந் திருப்பவர்களைச் சுற்றிவந்து ஒவ்வொருவரிடமாக அந்தப் பத்திரத்தைக் காட்டினான். உபாத்தியாயன் பத்திரத்தை ஊன்றிக் கவனித்தான். பத்திரத்தில் பூரகுப்தன் கையொப்பம் இருந்தது. குப்த ராஜ்ய க்ஷேமத்துக்காக எதுவும் செய்ய ராகுலனுக்கு அதிகாரமளிப்பதாக அப்பத்திரத்தில் கண்டிருந் தது. பத்திரத்தைப் படித்து ரகுவீர மஹாப்பிரபுவிடம் நீட்டிய உபாத்தியாயன் "மஹாப்பிரபு! ராஜப் பிரதிநிதிகளைச் சக்கர வர்த்தியவர்கள் மட்டுந்தான் நியமிக்கலாமென எனக்குக் கேள்வி. இதில் பூரகுப்தன் கையெழுத்திருக்கிறதே?" என்றான்.

"பின்னால் அவர்தானே சக்கரவர்த்தி" என்றார் ரகுவீர மஹாப்பிரபு. 'ஆம் ஆம்' என்று தலையசைத்து நரசிம்ம பூபதியும் அவர் அபிப்பிராயத்தில் கலந்து கொண்டார்.

"அப்படியானால் இந்த உத்தரவு பின்னால்தான் நம்மைக் கட்டுப்படுத்தும். தவிர, உத்தரவு எழுதி மாதம் இரண்டாகிறது. தேதியைக் கவனியுங்கள்" என்று சுட்டிக் காட்டினான் உபாத்தியாயன்.

இந்த ஆட்சேபணைக்கு என்ன சமாதானம் சொல்வ தென்று யாருக்கும் புரியவில்லை. குப்த ராஜ்யப் பிரபுக்களே தத்தளித்தார்களென்றால் பல்தேவும், ராகுலனும் என்ன செய்வார்கள்? சங்கடம் அதிகமாகவே ராகுலனின் அசட்டுத் தைரியம்கூட மறைந்து, அவன் முகத்தில் கிலி பரவியது. ஆனால், அவன் சொன்ன அடுத்த தகவல் அஜித் சந்திரனையே சற்றுத் திணற அடித்துவிட்டது.

"இந்த வீண் தர்க்கம் எதற்கு? நான் ராஜப் பிரதிநிதி என்பதற்கு வேறு ருசு இருக்கிறது. சித்ராவின் தம்பியே

அதைப்பற்றி விவரித்துக் கடிதம் எழுதியிருக்கிறான். அதை அவன் வைத்த முத்திரை கலையாமல் அப்படியே கொண்டு வந்திருக்கிறேன். சித்ராவே அதைப் படித்துச் சொல்லட்டும்" என்று மற்றொரு கடிதத்தைக் கச்சையிலிருந்து எடுத்துச் சித்ராவிடம் கொடுத்தான்.

கடிதத்தைப் பிரிக்கப்போன சித்ராவை உபாத்தியாய னின் கண்டிப்பான குரல் தடுத்தது. "அந்த கடிதத்தை இத்தனை பேருக்கு எதிரில் படிக்க வேண்டாம். ராகுலன் ராஜப் பிரதிநிதியென்பதை ஒப்புக் கொள்கிறேன்" என்றான் உபாத்தியாயன்.

"ஏன் இங்கு படிக்கக்கூடாது" என்று ரகுவீர மஹாப் பிரபு கேட்டார்.

"கடிதத்தில் தோரமானாவுக்கு உபயோகமாயிருக்கும் செய்தி ஏதாவது இருக்கலாம்."

"இருந்தாலென்ன?"

"தோரமானாவுக்கு வேண்டியவர்கள் யாராவது விஷயத்தை வெளியே விட்டால் நம் அனைவருக்கும் அபாயம்."

உபாத்தியாயனின் இந்த பதிலைக் கேட்ட இரண்டு பேர் இரண்டு விதமான கேள்விகளைக் கேட்டார்கள்.

"உம்மைத் தைரியசாலியென்று நினைத்தேன் உபாத்தி யாயரே" என்றான் பல்தேவ்.

"இங்கிருப்பவர்களில் யார் உம்மைத் தவிர தோரமானா வுக்கு ரகசியத்தைச் சொல்ல முடியும்?"— இது ரகுவீரரின் கேள்வி.

"பல்தேவ்! தைரியத்துக்கும் பைத்தியக்காரத்தனத்துக்கும் வித்தியாசமிருக்கிறது" என்று பல்தேவுக்குப் பதில் சொல்லி விட்டு, அஜித் சந்திரன் ரகுவீரரை நோக்கி, "மஹாப்பிரபு!

எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ யார் கண்டது?" என்றான்.

அவன் ஏதேதோ உட்பொருள் வைத்துப் பேசிய பேச்சைப் புரிந்துகொள்ள சக்தியற்றபடியால், சிந்தனையோடு பேச்சையும் இழந்து நின்ற அந்தக் கூட்டத்தில் சித்ரா குறுக்கே பாய்ந்து ஓரளவு அமைதியை நிலைநாட்டினாள். "உபாத்தியாயரே! இங்கிருக்கும் நாம் அனைவரும் குப்த ராஜ்யத்தின் அன்பர்கள்; தோரமானாவைக் கொல்லக் கூடியுள்ள சதிகாரர்கள்; இதில் யார் ரகசியத்தை வெளியிடப் போகிறார்கள்?" என்று கூறிவிட்டுக் கடிதத்தைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினாள்.

கடிதத்தில் அதிக விஷயங்கள் ஏதுமில்லை. சித்ராவின் சௌக்கியத்தைப் பற்றி விசாரித்துவிட்டு, ராகுலன் குப்த ராஜ்யப் பிரதிநிதியாக வரும் விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்திருந்தது. அத்துடன் தானிருக்குமிடத்தைப் பற்றியும் சித்ராவின் தம்பி கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான். தான் மூலஸ்தானபுரத்துக் கிழக்குக் கோடிச் சத்திரத்தில் மாறு பெயருடன் வசித்து வருவதாகவும் கடிதத்தில் தெளிவுபடுத்தியிருந்தான். அந்த விலாசத்தை சித்ரா படிக்கத் தொடங்கியதும், "சித்ரா, விலாசத்தை இங்கு படிக்க வேண்டாம்" என்றான் உபாத்தியாயன்.

"ஏன் படிக்கக்கூடாது? யாரிடம் சந்தேகம்? இங்கிருப்பவர்களில் நீ ஒருவன்தான் யோக்கியனா?" என்று பல கோபக் குரல்கள் கூடத்திலிருந்து எழுந்தன.

கூச்சல் போட்ட யாரையும் மதிக்காமலே அஜித் சந்திரன் சொன்னான்: "அந்தத் தகவல் யாருக்கும் தெரிய வேண்டிய தகவலன்று!" என்று.

"தெரிந்தால் என்ன?" என்று பல்தேவ் உக்கிரமாகக் கேட்டான்.

"அபாயமிருக்கிறது" என்றான் அஜித் சந்திரன்.

"என்ன அபாயம்?"

"தோரமானாவின் வேவுகாரன் நமக்குள் யாராவது இருந்தால் தகவலை எதிராளிக்கு வெளியிடலாம். பிறகு, முதலில் சித்ராவின் தம்பிக்குக் கழுத்துக்குச் சுருக்கு! பிறகு, நமக்கும் அந்தப் பிரசாதம் கிடைக்கும்!" என்று விவரித்தான் அஜித் சந்திரன்.

எல்லோரும் வெகுண்டார்கள். சித்ரா குறுக்கிடாமலிருந்தால் அஜித் சந்திரன் மேல் அத்தனை பேரும் பாய்ந்திருப்பார்கள். "வேண்டாம்; வீணுக்குச் சண்டை போடாதீர்கள். இதோ விலாசத்தை நானே படித்து விடுகிறேன்," என்று கடிதத்தின் கடைசிப் பகுதியையும் படித்து முடித்தாள். அத்துடன் சதிகாரர்களின் அன்றையக் கூட்டம் கலைந்தது. ராகுலனின் இஷ்டத்திற்கு விரோதமாகச் சித்ரா உபாத்தியாயனைத் தொடர்ந்து சென்றாள். திரும்பும்போது அஜித் சந்திரன் அடியோடு பேசவில்லை. அவன் முகத்தில் சொல்லவொண்ணாக் கவலை தெரிந்தது. மாளிகையில் சித்ராவை அவள் அறையில் விட்டுவிட்டுத் தன் அறைக்குச் சென்று முகுந்தனைக் கூப்பிட்டான்.

"என்ன எசமான்?" என்று முகுந்தன் கேட்டான்.

"நீ உடனே மூலஸ்தானபுரம் போக வேண்டும்."

"எதற்கு எசமான்?"

உபாத்தியாயன் அறைக் கதவைச் சாத்திவிட்டு மிக ரகசியமாகச் சில சேதிகளை முகுந்தன் காதில் ஓதினான்.

52. வலுச் சண்டை

மனிதனுடைய வாழ்க்கையையொட்டித்தான் கடவுள் ருதுக்களைச் சிருஷ்டித்திருக்க வேண்டும். ஆழ்ந்து கவனித்தால் வாழ்க்கையின் ரகசியங்களைத்தான் ருதுக்களின் மூலம் கடவுள் எடுத்துக் காட்டியிருக்கிறாரோ என்றுகூடத் தோன்றும். மனித வாழ்க்கையிலும் வெளியே தலைகாட்ட முடியாத மழையும், கொளுத்தும் வெயிலும், இன்பந்தரும் வசந்தமும் இப்படியாக மாறி மாறித்தானே சுகதுக்கங்கள் கலந்து கலந்து வந்து போய்க்கொண்டிருக்கின்றன.

இத்தகைய வேதாந்த பாவங்களில் எண்ணங்களை ஓடவிட்டுச் சாளரத்துக்கருகே நின்று வெளியே விகசித்துக் கொண்டிருந்த வஸந்தத்தின் இன்பக் காலை நேரத்தை நோக்கிக் கொண்டிருந்தான் உபாத்தியாயன். அருகே நின்ற மரங்களில் சில புதுக் கொழுந்து விட்டு உடம்பிலெல்லாம் பனித்துளி முத்து நகையணிந்து, காலைக் கதிரவன் பொற்கிரணங்களால் கணவன் கைப்பட்ட புது நாட்டுப் பெண்ணைப் போல் வெட்கிச் சிவந்து நின்றன. தூரத்தே நின்ற ஹிந்துகுஷ் மலையுச்சிகள் தங்கள் பனிப் பற்களைக் காட்டி மரங்களைப் பார்த்துப் பரிகசித்துக் கொண்டிருந்தன. சண்பகத் தோட்டத்தால் மறைக்கப்பட்ட மலையருவி சலசலப்பாகச் சிரித்து விளையாடிக் குதித்து ஓடிக்கொண்டிருந்தது. இயற்கையின் இத்தனை நாடகமும் உபாத்தியாயன் உள்ளத்தில் மட்டும் எந்த இன்ப உணர்ச்சிகளையும் எழுப்பவில்லை. அவன் மனம் அதே கட்டடத்திலிருந்த சித்ராதேவியிடங்கூடச் செல்லவில்லை. அருவிக்குப் பக்கத்திலிருந்த புது வீட்டிலும், அதிலிருந்த சதிகாரர்களிடமுமே லயித்து நின்றது.

சென்ற அத்தியாயத்தின் சம்பவங்கள் நடந்து வாரம் ஒன்றாகி விட்டது. சதிகாரர்கள் அன்றாடம் கூடி தோரமானாவிடமிருந்து மலைவாசல் விடுதலையடைந்தால் யார் யாருக்கு என்னென்ன பதவிகள் கிடைக்க வேண்டியது என்பதைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார்களே யொழிய, வேறெவ்வித நிகழ்ச்சியும் ஏற்படவில்லை. இந்த விவாதங்களில் சித்ராதேவி பெரிதும் பங்கெடுத்துக் கொண்டாள். எப்படியும் தன் தம்பி மலைவாசலுக்கு அதிபதியாக வந்து விடுவான் என்ற நம்பிக்கையில் சதிகாரர்களுக்கு அவள் உற்ற துணையாக நின்று ஊக்கம் அளித்து வந்தாள். இந்த விவாதங்களை உபாத்தியாயன் மட்டும் வெறுப்புடனும் இகழ்ச்சியுடனும் கவனித்து வந்தான். சித்ராவுக்கு ராகுலனாலோ பல்தேவினாலோ எத்தகைய கெடுதியும் வரக்கூடாதென்பதற்காக அவன் அடிக்கடி சித்ராதேவியுடன் அக்கூட்டத்திற்குச் சென்று வந்தானே யொழிய, வேறெந்தவிதமான அக்கறையும் அவன் அந்தக் கூட்டத்தாரிடம் காட்டவில்லை. அவன் பேச்சு பல சமயங்களில் அந்தக் கூட்டத்தாருக்குக் கசப்பையளித்த போதிலும், இஷ்டப்பட்டால் அக்கும்பலை அழிக்கக்கூடிய சக்தி அவனுக்கிருந்ததை முன்னிட்டுச் சதிகாரர்கள் அவனிடம் மிகுந்த பொறுமையையே காட்டி வந்தார்கள். சித்ராதேவியுடன் உபாத்தியாயன் வந்து அவளைத் திரும்பவும் தனியாக அழைத்துக் கொண்டு போவது ராகுலனுக்கு மட்டும் பெரிய வேதனையாயிருந்தது. தனக்கு மனைவியாக வேண்டியவள் இன்னொருவனுடன் தன் கண்ணெதிரிலேயே தனித்து வந்து போய்க் கொண்டிருப்பது அவன் மனத்தைத் தினம் ஆயிரம் ஈட்டிகள் கொண்டு குத்துவது போல் இருந்தது. ஆகவே, ராகுலன், பல்தேவின் உதவிகொண்டு உபாத்தியாயனுக்கு மிகச் சங்கடமான ஒரு நிலைமையைச் சிருஷ்டிக்க முற்பட்டான்.

"சித்ரா! நீ உபாத்தியாயருடன் தனிமையில் மாளிகைக்குப் போய் வருவது நாலு பேருக்கு நன்றா யிருக்காது" என்ற அறிவிப்பைச் சதிகாரர்கள் கும்பலில் பகிரங்கமாகவே வீசினான் ராகுலன்.

தனியாக இருக்கையில் ராகுலன் இப்படிச் சொல்லி யிருந்தால் சித்ரா எப்படி நடந்திருப்பாளோ தெரியாது; ஆனால், அத்தனை பேருக்கு எதிரில் அவன் அந்தக் கேள்வி யைக் கேட்டவுடனே அந்த ஹூண மகளின் கோபமும் தலைதூக்கி நின்றது. தான் அடிலன் மகள் என்பதை என்றும் மறவாத சித்ராதேவி அடிலனைவிடச் சற்று உக்ரமாகவே பதில் சொன்னாள்: "என் நடத்தை எப்படியிருக்க வேண்டு மென்பதை நிர்ணயிக்க நீங்கள் யார்?" என்று.

ராகுலன் தன் அசட்டுத்தனத்தை அதிகமாகக் காட்டி "அதைத் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டிய காலம் கடந்துவிட்டது" என்று சொல்லி, பல்தேவைப் பார்த்தான். அந்தப் பார்வையில், 'இவள் எனக்கு மனைவியாக நிச்சயிக்கப்பட்டவள் என்பது உலகமறிந்த விஷயமல்லவா?' என்ற கேள்வி பலமாகத் தொக்கி நின்றது. கேள்வியைப் புரிந்துகொண்ட பல்தேவும், "ஆமாம்! தங்களுக்குச் சித்ரா தேவியைக் கொடுப்பதென்பது ஏற்கெனவே தீர்மானமான விஷயந்தானே" என்றான் பலமாக.

சித்ரா, பல்தேவைப் பரிகாசமும் கொடுமையும் கலந்த முகத்துடன் நோக்கி, "பல்தேவ்! கட்டிய பிறகும் மனைவி கணவன் கையில் தங்குவது கஷ்டமாயிருக்க நிச்சயதார்த்தப் பெண் வருங்காலக் கணவன் கையிலடங்குவது எப்படிச் சாத்தியம்? இந்த உண்மையைப் புரிந்து கொள்வது உனக்குக் கஷ்டமா?" என்றாள்.

தான் காமினியைக் கோட்டைவிட்டு நிற்பதையே சித்ரா பிரஸ்தாபிக்கிறாளென்பது பல்தேவின் மந்தபுத்திக்குக்கூடத்

தெள்ளென விளங்கவே, அவன் வெட்கத்தாலும் சினத் தாலும் பீடிக்கப்பட்டுக் கொதித்தெழுந்து, "என் சொந்த விஷயத்தைப்பற்றிப் பேச உனக்கென்ன அதிகாரம்?" என்று சீறினான்.

"இந்தக் கேள்வியை நானல்லவா உன்னைக் கேட்க வேண்டும்?" என்று கூறிச் சிரித்தாள் சித்ரா. இந்தத் தர்க்கத்தில் ராகுலனடைந்த சங்கடமும் அவளுக்குப் பெரிய சந்துஷ்டியை அளித்தது.

சித்ராவின் பதில் ராகுலனுடைய அதைரியத்தைக்கூட போக்கவே அவன் கத்தியின் கைப்பிடியில் கையை வைத்து எழுந்து நின்றான். "சித்ரா! உபாத்தியாயன் அருகிலிருக்கும் துணிச்சலால் கண்டபடி பேசுகிறாய். இதோ முதலில் உபாத்தியாயனை விசாரிக்கிறேன்" என்று கத்தியை உருவினான். ராகுலனும் பல்தேவும் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து அவர்கள் உபாத்தியாயனை வலுச் சண்டைக்கு இழுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள் என்பது அனைவருக்கும் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது.

இத்தனைக்கும் உபாத்தியாயன் கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருந்தது குப்த ராஜ்யப் பிரபுக்கள் இருவருக்கும் பிரமாதமான ஆச்சரியத்தை அளித்தது.

"என்ன நீங்கள் பேசாமலிருக்கிறீர்களே?" என்று ரகுவீர மஹாப்பிரபு கேட்டார்.

"இந்தத் தர்க்கத்தில் கலந்து கொள்ளும்படியான அவ்வளவு முட்டாள்தனம் இவர்கள் சேர்க்கையால்கூட எனக்கு வரவில்லை!" என்றான் உபாத்தியாயன்.

பல்தேவ் பலமாகச் சிரித்தான். "உபாத்தியாயரே! பிறரை வைது அடக்கிக் காரியத்தைச் சாதிக்கலாம் என்று எண்ணாதீர்கள். பல்தேவின் கத்தி பலமானது" என்று கத்தி உறையைத் தட்டிக் காட்டினான்.

"கத்தி பலமானதாயிருந்தால் அந்தப் பெருமை அதைச் செய்த கொல்லனுக்குச் சேரும். அதைக் கழற்றுவதில் தானிருக்கிறது வீரனின் சாமர்த்தியம்" என்று கூறினான் அஜித் சந்திரன்.

இவன் இம்மாதிரி பல்தேவைத் திரும்பத் திரும்பத் தாக்குவது ரகுவீர மஹாப்பிரபு அவர்களுக்கும் பிடிக்காததால் அவர் உபாத்தியாயனை நோக்கி, "சேனாதிபதியவர்களைத் தாங்கள் இந்த மாதிரி பேசுவதை நான் விரும்பவில்லை" என்றார்.

"நானும் விரும்பவில்லை. ஆனால் சேனாதிபதியவர்கள் தாமிருக்கும் நிலைமையை மறந்து வலுச் சண்டைக்கு இழுப்பதனால் கஷ்டம் அவருக்குத்தான் என்பதை அவர் புரிந்துகொள்வது நல்லது" என்றான் அஜித் சந்திரன்.

ரகுவீரர் பதில் பேசுவதற்குள் நேர்ந்த நிகழ்ச்சி சதிகாரர்கள் அனைவரையும் திக்பிரமையில் ஆழ்த்திவிட்டது. நிதானத்தை அடியோடு இழந்துவிட்ட பல்தேவ் தன் இடது கையிலிருந்த கிண்ணத்திலிருந்த மதுவை உபாத்தியாயன் முகத்தை நோக்கி வீசிவிட்டான். அஜித் சந்திரன் முகம் பூராவும் மது வழிந்தது. அப்பொழுதும் உபாத்தியாயன் பொறுமையைச் சிறிதும் இழக்கவில்லை. பக்கத்திலிருந்த சித்ராவின் சீலை முந்தானையை எடுத்து மெள்ள முகம் பூராவையும் நிதானமாகத் துடைத்துக் கொண்டான். இவ்வளவு நிபந்தனையையும் பொறுக்கும் உபாத்தியாயன் உண்மையில் வீரன்தானா என்ற சந்தேகம் சித்ராவின் மனத்தில் கூட எழுந்தது.

"அட பேடி" என்று ராகுலன் பலமாகச் சிரித்தான். மற்றவர்கள் எதுவும் பேசச் சக்தியற்றவர்களாய் உபாத்தியாயனைப் பார்த்தார்கள். உபாத்தியாயன் தோரமானாவின்

உபசேனாதிபதியென்பதும், அவனுக்குச் சொந்தமாகக் கையாலாகாவிட்டாலும் அவன் தன் வீரர்களைக் கொண்டாவது தங்களை அழித்துவிட முடியுமென்பதும் அவர்களுக்கெல்லாம் தெரிந்த விஷயந்தானே?

பயத்தால் மற்றவர்கள் சும்மாயிருக்க குப்த ராஜ்யப் பிரபுக்கள் இருவரும் உபாத்தியாயனிடம் வெறுப்பால் மௌனமாயிருந்தார்கள். முகத்தைத் துடைத்துக் கொண்டதும் உபாத்தியாயன் கேள்வி அவர்கள் வெறுப்பை அதிகப்படுத்தியது. "என்னை அவமதித்திருக்கும் இவ்விருவருடன் நான் போரிட வேண்டியதுதானே?" என்று சாவகாசமாகக் கேட்டான்.

"மானம் அவசியமானால் வேறு வழியில்லை" என்றார் ரகுவீர மஹாப்பிரபு.

"நான் என் மானத்தைப் பற்றிப் பயப்படவில்லை..." என்று உபாத்தியாயன் ஆரம்பித்தான்.

"உயிரைப் பற்றித்தான்" என்று முடித்தான் ராகுலன். இதற்குமேல் அவமானத்தைத் தாங்கமாட்டாத சித்ராதேவி, "உபாத்தியாயரே" என்று இரைந்து கதறியே விட்டாள். இதயத்திலிருந்து எழுந்த அந்தக் கூக்குரல் அஜித் சந்திரனை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவே அவன் ரகுவீரரைப் பார்த்து, "மஹாப்பிரபு! சண்பகத் தோட்டத்துக்குப் போவோம். அங்கு சண்டையிட்டால் வெளியிலிருப்பவர்களுக்குத் தெரியாது" என்று சொல்லிக்கொண்டே நீளமாக வாள் தொங்கிய இடுப்புக் கச்சையை இறுக்கிக் கட்டிய வண்ணம் ஆசனத்திலிருந்து எழுந்தான்.

உபாத்தியாயன் உடம்பில் அப்பொழுதுதான் சற்று உறுதி ஏறிவிட்டதாக நினைத்த அனைவரும் இனி நடக்கப் போகும் சண்டையைப் பற்றிய பலவித யோசனைகளுடன் சண்பகத் தோட்டத்தை நோக்கிச் சென்றார்கள். அடர்த்தியாய்

நின்ற மரங்களிடையே சட்டையைக் கழற்றிவிட்டு முதன் முதலாகப் பல்தேவ் சண்டைக்கு முனைந்து வாளை உருவிக் கூர்பார்த்துக் கொண்டான். அங்கும் அஜித் சந்திரன் நிதான மாகவே அலுவல்களைத் தொடங்கினான். சட்டையை மெள்ளக் கழற்றினான். சண்டையிடும் தரை முழுவதிலும் ஒருமுறை நடந்து பார்த்துச் சோதித்துவிட்டுப் பிறகே கத்தியை உருவினான். அவன் செய்த ஏற்பாடுகளைக் கவனித்தவர்கள், அவன் பயத்தால் ஏதோ காலதாமதம் செய்வதாகவே நினைத்தார்கள். உபாத்தியாயன் இப்படி ஆலசியம் செய்வதைப் பார்த்த சித்ராவும் அவன் கதி என்னவாகுமோ என்ற பயத்தால் நடுங்கினாள். உபாத்தி யாயன் ஆலசியம் பல்தேவுக்கு நிரம்பத் தைரியத்தை ஊட்டவே அவன் முரட்டுத்தனமாகக் கத்தியை வீசிக் கொண்டு உபாத்தியாயன் மேல் பாய்ந்தான்.

காமினியை அடிலன் தூக்கிச் சென்ற காலத்தில் மாப்பிள்ளை பல்தேவ் பயந்தாங்குள்ளியாயிருந்தாலும் காலத்தின் வேகமும் சோதனைகளும் அவன் பயத்தைப் பெரிதும் துடைத்திருந்தன. பல வருஷங்கள் படைத் தலைவனாயிருந்து சண்டையிட்டதால் அவனுக்குத் தகுந்த வாள் பயிற்சியும் இருந்தது. இத்துடன் மூர்க்கத்தனமும் சேர்ந்திருக்கவே பல்தேவ் திறமையாகப் போராடினான். ஆனால், வாளொடு வாள் தாக்கிய சில விநாடிகளுக் குள்ளாகவே எப்பேர்ப்பட்ட மனிதனை வலுச் சண்டைக்கு இழுத்திருக்கிறோம் என்பதை பல்தேவ் கண்டு கொண்டான். உபாத்தியாயன் போர் முறையைக் கண்டு குப்த ராஜ்யப் பிரபுக்களும் அசந்துவிட்டனர்.

உபாத்தியாயன் வாள் அவன் கரத்தில் விளையாட்டுக் கருவிபோல் சகஜமாகச் சுழன்றது. அந்தக் கருவியின் முன்பு எதிரே உக்கிரத்துடன் தாக்கிய பல்தேவும் ஒரு விளை

யாட்டுப் பொம்மையாகவே இருந்தான். கூடத்தில் காட்டிய பொறுமையையும் நிதானத்தையும் உபாத்தியாயன் தோட்டத் திலும் காட்டினான். தான் திரும்பத் திரும்பப் பல கோணங் களில் பாய்ந்தாலும் அங்கெல்லாம் உபாத்தியாயன் வாள் தன் வாளைத் தடுத்து நிற்பதைப் பல்தேவ் கண்டான்.

அஜித் சந்திரன் கேவலம் தற்காப்புப் போரே புரிகிறா னென்பதையும், இஷ்டப்பட்டால் எந்த நிமிஷத்திலும் பல்தேவின் மார்பில் கத்தியைப் பாய்ச்ச அவனால் முடியுமென்பதையும் வாட்போர் தத்துவங்களை அறிந்த குப்த ராஜ்யப் பிரபுக்கள் நன்றாக உணர்ந்து கொண்டார்கள். சித்ராதேவியின் முகத்தில் சந்தோஷமும் கர்வமும் கலந்து தாண்டவமாடின.

தன் நிலையைப் பூராவாகப் புரிந்துகொண்ட பல்தேவின் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பத் தொடங்கின. பெருமூச்சு பலமாக வரத்தொடங்கியது. உபாத்தியாயன் உண்மையில் உபாத்தியாயனே என்பதை யும் அவன் தனக்கு வாள் பயிற்சி சொல்லிக் கொடுக் கிறானேயொழியப் போரிடவில்லையென்பதையும் அறிந்த பல்தேவ் பிரமிப்படைந்தான். அத்துடன் தோல்வியால் ஏற்படக்கூடிய அவமானத்தையும் நினைத்துக் கொண்டு திடீரெனத் தான் ஹூணர்களிடம் பயின்ற புதுவிதத் தாக்குதலில் இறங்கி, கத்தியை உபாத்தியாயன் நெஞ்சு நோக்கிக் குறி வைத்து வீசினான். அடுத்த விநாடி அவன் கத்தி ஆகாயத்தில் பறந்தது. அஜித் சந்திரன் வாள் அவன் வலக்கரத்தில் பாய்ந்துவிட்டது.

"ஐயோ!" என்று அலறினான் பல்தேவ். அவன் வலக்கரம் செயலற்றுத் தொங்கிக்கொண்டிருந்தது. குருதி மடமடவென்று வழிந்து தரையை நனைத்தது. அந்த நிலை யிலிருந்த பல்தேவை அஜித் சந்திரனே தாங்கிப் பிடித்து

அவன் காயத்துக்குக் கட்டுகள் போட்டான். பிறகு ரகுவீர மஹாப்பிரபுவை நோக்கி, "மஹாப்பிரபு! சண்டை இத்துடன் போதுமென்று நினைக்கிறேன். நான் பேடியல்ல என்று நிரூபிக்கவே இந்தச் சண்டையிலிறங்கினேன். இல்லாவிட்டால் இதில் இறங்கியிருக்கமாட்டேன். நான் ஒருவேளை இந்தப் போரில் இறந்திருந்தால்கூட சேனாதிபதியைக் கொன்ற சாக்கை வைத்துக்கொண்டு தோரமானா உங்களனைவரையும் அழித்துவிடுவான் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. தவிர, தோரமானாவைக் கொல்ல சதி செய்யும் நாம் ஒருவரையொருவர் கொல்வதில் முனைந்தால் தோரமானா போன்ற ஓர் எதிரியைச் சமாளிப்பது நடவாத காரியம். இன்னும் என் வாள் பலத்தில் இங்கிருப்பவர்களில் யாருக்காவது அவநம்பிக்கையிருந்தால் அவர்களோடு நான் போரிடத் தயார்" என்று சொல்லி ராகுலனுக்காகத் தன் கண்களைச் செலுத்தினான். ராகுலன் பெரிய திண்டாட்டத்திலிருந்தான். ரகுவீர மஹாப்பிரபு நிலைமையைச் சந்தேகமற ஊகித்துக் கொண்டார். அஜித் சந்திரன் வாளுக்கு ஈடு கொடுக்கக் கூடியவன் அந்தக் கூட்டத்தி லில்லையென்பது அவருக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. ராகுலனைப் பற்றி யாருக்கும் எந்தவிதச் சந்தேகமும் ஏற்படவில்லை. அவன் முகத்தைப் பார்த்த ரகுவீர மஹாப்பிரபு அஜித் சந்திரனைப் பார்த்து, "உபாத்தியாயரே! இது ஏதோ அறியாமல் நேர்ந்த தவறு. ஆகையால் சண்டையை இத்துடன் நிறுத்திக் கொள்வோம்" என்று கெஞ்சினார். அவர் ராகுலனுக்கு உயிர்ப்பிச்சை கேட்கிறார் என்பதை அவர் பேச்சிலிருந்தும் முகபாவத்திலிருந்தும் அனைவரும் தெள்ளெனத் தெரிந்து கொண்டார்கள்.

மஹாப்பிரவுவின் மொழிகள் அமுதவர்ஷமாக ராகுலன் செவியில் விழுந்ததாலும் அவன் சித்ராவை எண்ணிப் பார்த்து "போர் நிற்பதானால் சித்ரா என்னுடன்

தங்க வேண்டும்" என்று வீம்புக்குச் சொன்னான். அஜித் சந்திரன் பார்த்த உஷ்ணப் பார்வை ராகுலன் நாவைக் கட்டுப்படுத்தியது. "சித்ரா என் கைதி. அவளை விட்டுப் போனால் நான் என் மேலதிகாரிகளுக்கு என்ன பதில் சொல்வது?" என்று அஜித் சந்திரன் கேட்டான். இந்த பதில் அனைவருக்கும் திருப்தியாயிருக்கவே ராகுலன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. மானம் போகாமல் வாட்போரிலிருந்து தப்பினதையே பெரும் பேறாக நினைத்து மௌனமாயிருந்து விட்டான்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சதிக் கும்பலில் ஒரு வாரம் வரையில் எந்தவிதக் கலவரமும் ஏற்படவில்லை. அமைதியாகப் பேசியே சதிகாரர்கள் காலங்கழித்தார்கள். ஆனால் அமைதிக்குப் பின் புயல் எழுவதுபோல் பெரிய அபாயச் செய்தியொன்று கிளம்பி அவர்கள் தைரியம், வீண்பெருமை அத்தனைக்கும் முற்றுப்புள்ளி வைத்துச் சொல்லவொண்ணாத கிலியையும் கிளப்பிவிட்டது. அந்தச் செய்தியை ராகுலனே கொண்டு வந்தான்.

53. உபாத்தியாயன் அபாயத்தில்!

அன்று ராகுலன் மிகுந்த கலவரத்துடனும் குழப்பத் துடனும் உள்ளே நுழைந்தான். நுழைந்தவன் நேராகக் கூடத்துக்குச் சென்று மற்ற சதிகாரர்களோடு கலந்து உட்கார வில்லை. கூடத்துக்கும் வாயிலுக்கும் இடையேயிருந்த பெரிய கதவை ஜாக்கிரதையாகச் சாத்தி அதன் இரும்புத் தாழ்ப்பாள் களையும் இறுக அடைத்தான். பிறகு பல்தேவை அவசர மாகக் கூப்பிட்டு, "பல்தேவ்! இந்தக் கதவை உட்புறம் பூட்டுவதற்கு பெரிய பூட்டு ஒன்றும் சாவியொன்றும் கொண்டுவா!" என்று உத்தரவிட்டான். கூடத்திலிருந்த அத்தனை சதிகாரர்களுக்கும் அவன் போக்கு புரியாத புதிராகவே இருந்தது. ராகுலன் இவ்வளவு தடபுடலை எதற்காகச் செய்கிறான் என்பதை நிர்ணயிக்க ரகுவீர மஹாப்பிரபுவால்கூட முடியவில்லை. சித்ராதேவியும் ராகுலன் பதட்டத்துக்குக் காரணத்தை அறிய முடியாமல் அதற்கு விளக்கம் ஏதாவது தென்படுமா என்று உபாத்தி யாயன் முகத்தைக் கவனித்தாள். உபாத்தியாயன் முகம் சிலைக்குச் சமானமாயிருந்தது. ஆனால், அவன் இதழ்களில் மட்டும் சற்றுப் புன்முறுவல் ஓடியிருந்தது.

ராகுலன் பதட்டத்துக்குக் காரணம் சரியாகத் தெரியாது போனாலும் அவன் ஏதோ அபாயச் செய்தியைக் கொண்டு வந்திருக்கிறானென்பதை மட்டும் புரிந்து கொண்டனர். மந்தபுத்தியுள்ள மாப்பிள்ளை பல்தேவ்கூட அதைப் புரிந்து கொண்டான். ஆகவே சீக்கிரமாக உள்ளே சென்று பெரிய இரும்புப் பூட்டையும் சாவியையும் கொண்டு வந்து ராகுல னிடம் கொடுத்ததன்றி அதைக் கதவில் பூட்டவும் உதவி னான். ராகுலன் பூட்டைப் பூட்டியதும் சாவியை மடியில்

வெகு ஜாக்கிரதையாகச் சொருகிக்கொண்டு பல்தேவுடன் கூடத்து நடுப்பிரதேசத்துக்கு வந்தான். அங்கு பல்தேவை மட்டும் உட்காரும்படி சைகை செய்து, தான் நின்று கொண்டே ஒவ்வொருவர் முகத்தையும் ஊன்றிக் கவனித் தான். பிறகு வந்திருந்தவர்களை எண்ணிப் பார்த்தான்.

"இன்று, சதியில் சேர்ந்திருக்கும் அனைவரும் இங்கு கூடியிருக்கிறோம். அதுவரையில் க்ஷேமம்" என்று மெள்ள ராகுலன் ஆரம்பித்தான். மற்றவர்கள் யாரும் பதில் பேசா திருக்கவே, ராகுலனே தொடர்ந்து விஷயத்தைச் சொன் னான்: "என்னுடைய நடத்தை இன்று உங்களுக்கும் விசித்திர மாகத் தோன்றலாம். ஆனால், நடந்திருக்கும் விஷயம் விபரீதமானது. அதனால்தான் எச்சரிக்கையாகக் கதவைப் பூட்டிக்கொண்டேன். இங்கு நமக்குள் தோரமானாவின் ஒற்றன் ஒருவன் இருக்கிறான். நம் அனைவர் கழுத்துக்கும் அவன் கயிற்றைத் தயார் செய்துவிட்டான். முதலில் அவன் யார் என்பதைக் கண்டுபிடிக்கும் வரை இந்தக் கூட்டத்தை விட்டு யாரும் வெளியே செல்ல முடியாது" என்றான் ராகுலன். அவன் பேசியபோது அவன் கைகள் நடுங்கின. பேச்சிலும் கொஞ்சம் தடுமாற்றமிருந்தது.

"ஒற்றன் இருக்கிறான் என்பதற்கு என்ன ருசு இருக் கிறது?" என்று ரகுவீர மஹாப்பிரபு கேட்டார். ராகுலன் எல்லோரையும் ஒன்றாகச் சேர்த்து, 'நமக்குள் ஒரு ஒற்றன் இருக்கிறான்' என்று பொதுப்படையாகச் சொன்னது நரஸிம்ம மஹாப் பிரபுவுக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் அவர் குரலில் சற்றுக் கோபமும் கலந்திருந்தது.

"தகுந்த ருசுவுடன்தான் வந்திருக்கிறேன். உதாரணமாக, சித்ராதேவியின் தம்பியிருக்கும் விலாசம் இங்கிருப்பவர் களுக்குத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. ஆனால், அந்த விலாசம் தோரமானாவுக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது.

அந்த விலாசத்தின் வீட்டிற்கு நாலுநாள் முன்பாகத் தோர மானாவின் வீரர்கள் விஜயம் செய்து அவனைக் கைது செய்யப் பார்த்திருக்கிறார்கள்...” என்று சொல்லிக் கொண்டு போன ராகுலனின் வார்த்தைகளைச் சித்ராதேவியின் கவலை நிரம்பிய கேள்வியொன்று தடுத்தது. “தம்பி சிறைப்பட்டு விட்டானா” என்று கேட்டாள் சித்ரா.

“இல்லை. அவனைப் பிடித்த நல்ல காலம் தோர மானாவின் வீரர்கள் வருவதற்கு அரை ஜாமத்திற்கு முன்பாகவே அவன் அந்த வீட்டிலிருந்து கிளம்பிப் போய் விட்டான்” என்றான் ராகுலன்.

கவலை நீங்கியதற்கு அடையாளமாகப் பெருமூச்சு ஒன்று சித்ராதேவியிடமிருந்து வெளிவந்தது. மற்றவர்களுக்கு அந்த நிம்மதி ஏற்படவில்லை. ஆகவே நரஸிம்ம மஹாப் பிரபு ராகுலனை நோக்கி, “தங்களுக்கு இந்தச் செய்தியை அனுப்பியது யார்?” என்று கேட்டார்.

“பிரபு! மன்னிக்க வேண்டும். இந்தக் கூட்டத்தில் நான் எந்தத் தகவலையும் வெளியிடத் தயாராயில்லை. காரணத்தை நான் விவரிக்க வேண்டிய அவசியமுமில்லை” என்றான் ராகுலன்.

ராகுலன் அதைச் சொன்னபோது அசம்பாவிதமாக யாரோ சிரித்தார்கள். “யார் சிரித்தது?” என்று அதட்டலாகக் கேட்டான் ராகுலன்.

“நான்தான்” என்ற சொற்கள் உபாத்தியாயனிடமிருந்து கிளம்பின. அத்தனை பேர் கண்களும் அவன் மீது கோபாவேசத்துடன் திரும்பின.

“இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?” என்று சித்ரா தேவியே கடுமையான குரலில் கேட்டாள்.

“சின்ன விஷயத்தைப் பிரமாதப்படுத்துகிறோமே என்பதற்காகச் சிரித்தேன். தவிர, இது ஏற்கெனவே தெரிந்த

விஷயந்தானே, அதைப் பற்றி இப்பொழுது யோசித்து இவ்வளவு கலவரப்படுவானேன்?” என்றான் அஜித் சந்திரன். அவன் பேச்சும், அலட்சியமாக அவன் மஞ்சத்தில் சாய்ந்து கால்களை நீட்டி உட்கார்ந்திருந்ததும் மற்றவர் கோபத்தை இன்னுமதிகமாகக் கிளறி விட்டது.

“எது ஏற்கெனவே தெரிந்த விஷயம்?” என்று கேட்டான், வில்லவர்களில் ஒருவன்.

“நமக்குள் தோரமானாவின் ஒற்றன் இருக்கிறான் என்பது. இதைப் பற்றி நான் போன வாரமே உங்களுக்கு எச்சரித்தேன். நீங்கள் கேட்வில்லை. சித்ராவின் தம்பி எழுதிய கடிதத்தை இங்கு படிக்க வேண்டாமென்று சொன்னேன். அதற்கும் திறமைசாலிகளான நீங்கள் செவி சாய்க்கவில்லை. கடைசியாக அவன் விலாசத்தையாவது பகிரங்கமாகப் படிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டேன். ராஜதந்திரிகளான நீங்கள் அதற்கும் ஒப்புக் கொள்ளவில்லை. உங்கள் பிடிவாதத்தால் கடிதத்தைப் பகிரங்கமாகப் படிக்கச் செய்தீர்கள். சித்ராவின் தம்பி தலை தப்பியது தம்பிரான் புண்ணியமாயிற்று” என்று விளக்கினான் உபாத்தியாயன்.

“நமக்குள் ஒற்றன் இருக்கிறானென்பதை ஒரு வாரத்திற்கு முன்பே எப்படி உங்களால் ஊகிக்க முடிந்தது?” என்று பல்தேவ் இரைந்து கேட்டான். அவன் முகத்தில் பயமும் கோபமும் கலந்து தாண்டவமாடின.

“சரித்திரத்தைச் சரியாகப் படித்தவர்களுக்கு இது ஒரு கஷ்டமில்லை. சரித்திரத்தில் எந்தச் சதியைப் பார்த்தாலும் அதில் எதிராளியின் ஒற்றன் ஒருவன் கலந்தே நிற்பான். சரித்திரம் திடீரென இந்தச் சதி விஷயத்தில் மட்டும் எப்படி மாறுபட்டு விடும்?” என்று பதில் கூறினான் உபாத்தியாயன்.

பல்தேவ் ஆசனத்தை விட்டு எழுந்தான். "உபாத்தி யாயரே! இந்த சாமர்த்திய வார்த்தைகள் வேண்டாம். சரியாகப் பதில் சொல்லும். இங்கு ஒற்றன் இருக்கும் விஷயம் உமக்கு எப்படித் தெரியும்?" என்று பல குரல்கள் எழுந்தன.

அந்தக் கேள்விக்கு அஜித் சந்திரன் பதில் கூறவில்லை. "எனக்கு எப்படித் தெரியும் என்பதைவிட யார் ஒற்றன் என்பதைக் கண்டுபிடிப்பது அவசியமல்லவா?" என்று கேட்டான் அஜித் சந்திரன்.

இந்தக் கேள்வியைக் கேட்டதும் எல்லோர் ஆத்திரமும் அதிகமாகிவிட்டது. "அவசியந்தான் உபாத்தியாயரே! கண்டு பிடிப்பது கஷ்டம் அல்ல" என்றான் பல்தேவ்.

"அப்படியானால் யார் அந்த ஒற்றன்?"— இது ரகுவீரரின் கேள்வி.

"இதை நான் வாய்விட்டுச் சொல்ல வேண்டுமா? நமக்குள் யார் தோரமானாவிடம் நெருங்கி நிற்பது? யார் தோரமானாவிடம் சேவை செய்வது?" என்று கூறி அஜித் சந்திரனை நோக்கினான் பல்தேவ். அவனைத் தொடர்ந்து அனைவர் கண்களும் அஜித் சந்திரன் மீது சந்தேகத்துடன் திரும்பின.

"இல்லை. உபாத்தியாயர் வேவுக்காரர் அல்ல. ஒரு நாளும் இருக்க முடியாது" என்று கூறினாள் சித்ரா.

ராகுலன் பதில் மிகக் கடுமையாகக் கிளம்பியது. "ஏன், அவன் உன் காதலன் என்பதால் பரிந்து பேசுகிறாயா?"

"ஆம்! என் காதலன் என் தம்பியை எதற்காக ஒழிக்க முற்பட வேண்டும்?" என்று கேட்டாள் சித்ராதேவி பதிலுக்கு.

இந்தக் கேள்வி பல்தேவுக்கு ஆத்திரமூட்டவே, "வீணாக இந்தப் பெண்ணின் பேச்சைக் கேட்டு அவனைத் தப்ப

விடாதீர்கள். உபாத்தியாயனை அந்த இடத்திலிருந்து உயிருடன் வெளியே விட்டால் நாளைக்கே நாமனைவரும் தூக்கில் தொங்கலாடுவோம். இவனை இப்பொழுதே ஒழித்துக் கட்டுங்கள்" என்று இரைந்தான்.

கிலி பிடித்த அந்தக் கூட்டத்திலிருந்த அனைவரும் தங்கள் இடையிலிருந்த உடைவாட்களை உருவினார்கள். சித்ராதேவி, "வேண்டாம்! வேண்டாம்! இந்தக் கொலை வேண்டாம்!" என்று கூவினாள். உயிருக்குப் பயந்து நின்ற அந்தச் சதிகாரர்கள் காதில் அவள் சொல்வது எதுவும் விழவில்லை. "அவனைக் கொல்லுங்கள், ஏன் நிற்கிறீர்கள்?" என்று ராகுலனும் கூவினான். பல கத்திகள் அஜித் சந்திரனுக்காக எழும்பின. அடுத்த விநாடி அஜித் சந்திரன் பிராணன் போகப் போகிறதே என்ற பயத்தால், என்றும் கதறியறியாத சித்ராதேவி முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டு 'ஓ'வென்று கதறிவிட்டாள்.

54. யார் குற்றவாளி ?

சதிகாரர்களின் உயர்த்தப்பட்ட வாள்கள் மட்டுமல்ல, சித்ராதேவியின் ஆத்மாவிலிருந்து எழுந்த அலறல்கூட உபாத்தியாயனிடத்தில் எந்தவித மாறுதலையும் விளைவிக்கவில்லை. மஞ்சத்தில் சாய்ந்தது சாய்ந்தபடியே உட்கார்ந்திருந்தான். நீட்டியிருந்த கால்களைக் கூட மடக்கவில்லை. அசைவற்ற அவன் தன்மையும் அலட்சியமும் வெறுப்பும் கலந்த அவன் பார்வையும், வாட்களை உருவிய அவன் எதிரிகளைக்கூட அவர்கள் கொலை பாதகச் செயலிலிருந்து ஒரு விநாடி தேக்கி வைத்தது. உட்கார்ந்திருந்த நிலையிலேயே அஜித் சந்திரன் அவர்களை உற்று நோக்கினான். பிறகு மிக நிதானமான குரலில், "அன்பர்களே! கொலை செய்வதில் உங்களுக்கிருக்கும் ஆர்வம் மகத்தானது. ஆனால், அந்த ஆர்வம் உங்கள் நிதானத்தைப் பெரிதும் பாதிக்கிறது" என்றான்.

மிகுந்த அபாய நிலையிலிருக்கும் அஜித் சந்திரன் அந்த அபாயத்தைப் பற்றிச் சிந்தனை சிறிதுமில்லாமல், கொலைகாரர்களைப் பார்த்துத் தீர்ப்புச் சொல்லும் நீதிபதியைப் போல் தங்களைப் பார்த்துப் பேசுவதும், நீட்டிய கால்களைக்கூட மடக்காமல் பெரிய மகாராஜா போல் உட்கார்ந்து கொண்டு தங்களை அவமதிப்புடன் நடத்துவதும் சதிகாரர்களுக்குப் பெருத்த கொதிப்பை உண்டாக்கினாலும் அவனிருந்த தோரணை அவர்களைக் கிட்டே அணுகவிடவில்லை. இத்தனை பேர் வாளை வீசி வெட்டவரும் சமயத்தில்கூட அவன் தற்காப்புக்காகத் தன் கையை வாளின் மேல் வைக்காததையும் நிதானம் குலையா

திருப்பதையும் கண்ட குப்த ராஜ்யப் பிரபுகளுக்கு உண்மையில் அவன் உளவாளியாயிருப்பானோ என்ற சந்தேகம் உதயமாகத் தொடங்கியது. ஆகவே, ரகுவீர மஹாப்பிரபு முதலில் தன் கத்தியை உறையில் போட்டு, "இங்குக் கொலை செய்வதில் யாருக்கும் ஆசையில்லை உபாத்தியாயரே. ஆனால் நம்மைக் காட்டிக் கொடுப்பவனை ஒழிக்காவிட்டால் இத்தனை பேர் உயிருக்கும் அவன் உலை வைத்து விடுவானல்லவா?" என்று கேட்டார்.

உபாத்தியாயன் கண்களை அவர்மேல் திருப்பி, "வாஸ்தவம்; ஆனால், காட்டிக் கொடுப்பவன் யார் என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். அப்படியில்லாமல் அவசரத்தில் தவறாக நிரபராதியைக் கொலை செய்வதால் உண்மை உளவாளி தப்பிக் கொள்வான். ஒருமுறை தப்பிக்கொண்டால் அவன் மீண்டும் இந்தக் கூட்டத்துக்கு வரமாட்டான். இங்கிருப்பவர்களுடைய பட்டியலுடன் நேராகத் தோரமானாவிடம் செல்வான். பிறகு..." என்ற வாக்கியத்தை முடிக்காமலேயே அவர்களை ஊகிக்க விட்டான்.

ஊகிப்பதில் கஷ்டமும் இல்லை. உண்மை உளவாளி தப்பிவிட்டால் தங்கள் கழுத்துக்கு கயிறு நிச்சயம் என்பதை சதிகாரர்கள் அனைவரும் சந்தேகமறத் தெரிந்து கொண்டார்கள். அஜித் சந்திரன் பேச்சில் நிரம்ப உண்மையிருப்பதும் அவர்களுக்குத் தெளிவாயிற்று. ஆகவே, இந்தக் கூட்டத்தில் உபாத்தியாயன் உளவாளியல்லாவிட்டால் வேறு யாராயிருக்க முடியும் என்ற யோசனையும் ஒவ்வொருவர் மனத்திலும் எழுந்திருக்கவே சதிகாரர்கள் ஒவ்வொருவரும் இன்னொருவரைச் சந்தேகிக்க ஆரம்பித்தார்கள். நிமிஷ நேரத்தில் உபாத்தியாயன் தங்களைப் பரஸ்பரம் சந்தேகிக்கும்படியான நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டானேயென்று அவர்களுக்கு எரிச்சல் ஏற்பட்டாலும்

விஷயத்தைத் தீர விசாரிக்கு முன்பாக ஒரு முடிவுக்கு வருவது தவறு என்ற தீர்மானத்துக்கு வந்தார்கள்.

அவர்களுடைய தயக்கத்தையும் யோசனையையும் கண்ட பல்தேவின் ஆத்திரம் பன்மடங்காகவே, "நண்பர்களே! சீக்கிரம் காரியத்தை முடியுங்கள். அவனை அதிகமாகப் பேச விடாதீர்கள். சாமர்த்தியமாகப் பேசி உண்மையை மறைத்து விடுவான்" என்று அவர்களைக் கொலைக்கு மீண்டும் தூண்டினான்.

உபாத்தியாயன் அவனை மிகுந்த இகழ்ச்சியுடன் நோக்கி, "எது உண்மை என்பதைச் சீக்கிரம் அறிந்து கொள்வோம். உண்மை மறையாதிருக்க வேண்டுமானால் தீர விசாரிக்க வேண்டும். அப்பொழுது உண்மை உளவாளி கண்டிப்பாய் அகப்படுவான்" என்றான்.

"உண்மை உளவாளி நீயல்லவென்பது எங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கிளறினான் ராகுலன்.

"கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் தெரியும். புத்தியிருப்பவர்கள் யோசிக்கலாம்" என்றான் அஜித் சந்திரன். இதைச் சொன்னபோது அஜித் சந்திரன் இதழ்களில் சிறிது விஷமச் சிரிப்பும் தென்பட்டது.

உபாத்தியாயன் வார்த்தை ரகுவீர மஹாப்பிரபுவுக்குச் சிறிது குத்தலாகப் படவே, "எங்களுக்குப் புத்தியில்லை என்றே வைத்துக்கொள்வோம். புத்தியுள்ள தாங்களாவது உண்மையை விளக்கலாமல்லவா?" என்று கேட்டார்.

"அதற்குத்தான் சந்தர்ப்பம் கேட்கிறேன். என்னைக் கொலை செய்வதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தால் உண்மையைத் தங்களுக்குச் சந்தேகமற நிருபிக்கிறேன். கொலை செய்ய இத்தனை பேர் தயாராயிருக்கும்போது நான் எங்கும் ஓடிவிட முடியாது. ஆகையால், சகோதரர்களைச் சற்று உடைவாட்களை உறையில் சொருகி உட்காரச் சொன்னால் உண்மையைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யலாம்" என்றான் உபாத்தியாயன்.

"உண்மையாக இவன்தான் ஒற்றன். எனக்குத் தெரியும். இந்த விசாரணை அனாவசியம்" என்று பல்தேவ் நடுங்கும் குரலில் கூவினான்.

"பல்தேவ்! நாம் ஒருவனைத் தண்டிக்கு முன்பாக நிரபராதியென்று ருசுப்பிக்க அவனுக்குச் சந்தர்ப்பமளிப்பது நியாயம். இது பாரத நாட்டின் நாகரிகம்" என்றார் ரகுவீர மஹாப்பிரபு.

"நம் கழுத்துக்குக் கயிறு வந்திருக்கும்போது நாகரிகம் என்ன வேண்டியிருக்கிறது?" என்று ரகுவீரரை எதிர்த்துக் கேட்டான் பல்தேவ்.

"ஆம்! அவசியமில்லை" என்று ராகுலனும் ஒத்துப் பாடினான்.

உபாத்தியாயன் லேசாகச் சிரித்துக் கொண்டே, "பல்தேவ்! சதிக்கூட்டத்தில் சேர்ந்தாலும் பலபேர் நாகரிகமாக நடமாட ஆசைப்படுகிறார்கள். அதை நீ ஏன் தடை செய்ய வேண்டும்?" என்றான்.

மேற்கொண்டு எழுந்த விவாதத்தை ரகுவீரர் அடக்கி விட்டார். "விவாதத்தை இத்துடன் நிறுத்திக்கொண்டு விசாரணையில் இறங்குவோம். எல்லோரும் உட்காருங்கள்" என்று உத்தரவிட்டார். சித்ராதேவிக்கு அப்பொழுதுதான் சற்று உயிர் வந்தது.

எல்லோரும் ஆசனங்களில் அமர்ந்ததும் உபாத்தியாயன் தன் கட்சியை எடுத்துச் சொல்ல ஆரம்பித்தான். "பிரபு அவர்களே! என்மேல் உங்கள் அனைவருக்கும் சந்தேகம் ஏற்பட்டதற்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று, நான் தோரமானாவிடம் உபசேனாதிபதியாயிருப்பது. இரண்டு, சித்ரா

வின் தம்பியின் விலாசம் தோரமானாவுக்குத் தெரிந்து விட்டது. இவ்வளவுதானே?" என்றான்.

"ஆம்! ஆம்!" என்று பல சதிகாரர்களிடமிருந்தும் கூச்சல் கிளம்பியது.

"நன்றாக யோசித்துப் பாருங்கள். நான் தோரமானா விடம் இன்று நேற்று உபசேனாதிபதியல்ல. இந்த சதிக் கூட்டம் ஏற்படுவதற்குப் பல நாட்களுக்கு முன்பிருந்தே அந்தப் பதவியை வகித்து வருகிறேன். தவிர இந்தக் கூட்டத்திலும் பல நாட்களாக நான் இருந்து வருகிறேன். ஆகவே உங்களைக் காட்டிக் கொடுக்க வேண்டுமானால் நான் இத்தனை நாள் காத்திருப்பானேன்?" என்று சொல்லி விட்டு யாரிடமிருந்தாவது பதில் கிடைக்குமா என்று பார்த்தான்! யாரும் பதில் சொல்லாமல் மௌனமாக யிருக்கவே அஜித் சந்திரன் மேலும் சொன்னான்: "தவிர, சித்ராதேவியிடம் எனக்கிருக்கும் அன்பும் எவ்வளவு ஆழமானதென்பது உங்களுக்குத் தெரியும். அப்படியிருக்க அவள் தம்பியை நான் எப்படிக் காட்டிக் கொடுப்பேன்? எந்த நலத்தை உத்தேசித்துக் காட்டிக் கொடுப்பேன்?"

இந்த இரண்டு கேள்விகளும் நியாயமாயிருக்கவே யாரும் பதில் சொல்ல முடியாமல் தத்தளித்தார்கள். ஆனால், பழைய சம்பவங்களை மறக்காத பல்தேவ் மட்டும் சும்மா இருக்கவில்லை. "உங்களை அடிலன் சாட்டையாலடித்த தற்குப் பழி வாங்குவதாகச் சபதம் செய்திருந்தது வில்லவருக் கெல்லாம் தெரியும். அப்பனில்லாததால் பிள்ளையை ஒழித்துக் கட்ட முயற்சிக்கலாம்" என்றான்.

உபாத்தியாயன் சிரித்துக்கொண்டே, "சபாஷ் பல்தேவ்! அப்படிப் பிள்ளையை ஒழித்துக் கட்டுவதானால் அதற்குப் பல சந்தர்ப்பங்களிருந்தன. உதாரணமாக வில்லவர் புரட்சி யிலிருந்து அடிலனைக் காப்பாற்றிய போது அவன் மகனுடன் வாட்போரிடத் தயாராக அடிலன் மாளிகைத்

தோட்டத்தில் காத்திருந்தேன். இஷ்டமிருந்தால் சித்ராவின் தம்பியை அன்றே அழித்து நான் பழி தீர்த்துக் கொண்டிருக் கலாம்" என்று கூறினான்.

"ஏன் அப்படிச் செய்யவில்லை?" என்று ராகுலன் கேட்டான்.

உபாத்தியாயன் சித்ராவின் பக்கமாகக் கண்களைச் செலுத்தினான். சித்ரா வெட்கத்தால் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். "அடிலன் பிள்ளையைக் காப்பாற்ற என் இஷ்ட தேவதையொன்று தோட்டத்தில் வந்து என்னை விரட்டிவிட்டது. என்ன செய்வேன்?" என்றான் அஜித் சந்திரன்.

அஜித் சந்திரன் பேச்சின் அர்த்தத்தை அறிய சக்தியற்ற பல்தேவ், "உபாத்தியாயன் உளறுகிறான். தேவதையாவது வருகிறதாவது. பிரபு! தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இவன் ஏதோ கதை கட்டுகிறான். இவனை முதலில் கொன்று விட்டுத்தான் மறுவேலை பார்க்க வேண்டும்" என்று கூறினான்.

அவன் முட்டாள்தனத்தைப் பார்த்து நரஸிம்ம மஹாப் பிரபு வெகுண்டார். "சேனாதிபதியவர்களே! தேவதையு மில்லை, மண்ணாங்கட்டியுமில்லை. உபாத்தியாயர் சித்ரா தேவியைக் குறிப்பிடுகிறார்" என்று விளக்கினார்.

"மகாப்பிரபு, கோபிக்காதீர்கள். அவ்வளவு தூரம் ஊகிக்கும் வசதி அந்தத் தலையில் இல்லை" என்று அஜித் சந்திரன் பல்தேவுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்வது போல் பாசாங்கு செய்துவிட்டு, "மஹாப்பிரபு! இப்பொழு தாவது உங்களைக் காட்டிக் கொடுத்தவன் நானல்ல வென்பதை நம்புகிறீர்களா?" என்று கேட்டான்.

இரண்டு பிரபுக்கள் என்ன பதில் சொல்வதென் றறியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பிறகு ரகுவீரர் அஜித் சந்திரனை நோக்கி, "நீங்கள் சொல்வதில் நியாயமிருக்கிறது. எங்களைக் காட்டிக் கொடுப்பதானால் நீங்கள் இவ்வளவு நாள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை" என்றார். ரகுவீரரின் இந்த வார்த்தை மற்றவர்கள் கொதிப்பைச் சிறிது அடக்கினாலும் பல்தேவின் பதட்டத்தை அளவுக்கு மீறி அதிகப்படுத்தி விடவே, "இவன் பேச்சை நம்பாதீர்கள். நம்மைப்பற்றிய சகல செய்திகளையும் இவன் ஏற்கெனவே தோரமானா வுக்குச் சொல்லியிருக்கிறான்" என்று கூறினான்.

"அது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று ரகுவீரர் கேட்டார்.

இதற்கு உபாத்தியாயன் சொன்ன பதில் பல்தேவை நடுங்க வைத்தது. "இவன் மனைவி காமினி தோரமானா வின் அந்தரங்க அதிகாரி. அவளிடமிருந்து அறிந்திருக் கலாம்," என்று மெதுவாகச் சொன்னான் அஜித் சந்திரன்.

அஜித் சந்திரன் வீசிய இந்த வாள் சித்ராதேவியைத் தவிர மற்ற அனைவருக்கும் பேரதிர்ச்சியை விளைவித்தது. சாதாரணமாக எதற்கும் சலிக்காத ரகுவீர மஹாப்பிரபு கூட, "என்ன! பல்தேவின் மனைவியார் தோரமானாவின் அந்தரங்க அதிகாரியா?" என்று திடுக்கிடும் குரலில் கேட்டார்.

"சந்தேகமிருந்தால் பல்தேவையே கேட்டுப் பாருங்கள். தோரமானாவுக்கு நான் உபசேனாதிபதியாக இருந்தால் பல்தேவின் மனைவி அவருடைய அந்தரங்க அதிகாரி. நான் உங்களைக் காட்டிக் கொடுக்க முடியுமானால் நமது சேனாதிபதி பல்தேவ் அவர்களும் அந்தப் பணியைச் செய்ய முடியும்..." என்றான் அஜித் சந்திரன்.

சதிகாரர்களின் கண்கள் மிகுந்த சந்தேகத்துடன் பல்தேவின் மீது திரும்பின. அஜித் சந்திரன் மிக சாமர்த்திய

மாகக் குற்றத்தை தன்மேல் திருப்ப முயல்வதைக் கண்ட பல்தேவ் நடுங்கினான். "இவன் சொல்வது பொய், பொய்" என்று பயத்தால் உளறினான்.

"எது பொய்? காமினி உன் மனைவி என்பது பொய்யா? அவள் தோரமானாவின் அந்தரங்க அதிகாரி என்பது பொய்யா? சமீபத்தில் நீ என்னுடனும் சித்ராதேவி யுடனும் மாளிகைக்கு வந்து உன் மனைவியை மீண்டும் அறிமுகப்படுத்திக் கொண்டது பொய்யா?" என்று பல கத்திகளைச் சொருகுவதுபோல் உபாத்தியாயன் கேள்வி களை உதிர்த்தான்.

பல்தேவ் பதில் சொல்லத் தெரியாமல் திணறினான். அவன் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பின.

"உபாத்தியாயர் சொல்வதற்குப் பதில் சொல்" என்றார் ரகுவீரர், பல்தேவை நோக்கி.

"ஆம்! பதில்! பதில்!" என்றன பல குரல்கள்.

"இன்றேல் கொலை!" என்று ஒரு குரல் இடையே எழுந்தது. மரணம் தன் முன் தாண்டவமாடுவது போல் தோன்றியது பல்தேவுக்கு.

55. வலை

அவர்களுடைய ஆவேசத்தை உபாத்தியாயன் அடக்கினான். "என்மேல் சந்தர்ப்ப சாட்சியங்கள் இருந்தவை போலவே பல்தேவின் மீதும் சந்தர்ப்ப சாட்சியங்களே இருக்கின்றன. ஆகையால், அவனையும் குற்றவாளியெனத் தீர்மானிக்க முடியாது" என்றான்.

"வேறு யார்மீது குற்றத்தை ஸ்தாபிக்க முடியும்?" என்று ராகுலன் கேட்டான்.

"அதை ஆராய்ந்துதான் ஒரு முடிவுக்கு வரவேண்டும். உதாரணமாக உன்மேல் கூடக் குற்றத்தை ஸ்தாபிக்கலாம். சக்கரவர்த்தி ஸ்கந்தகுப்தரிடம் நீ சிக்கியபோது மாமனாராகப் போகுபவரையே சுயநலத்தை முன்னிட்டுக் காட்டிக் கொடுப்பவன், மைத்துனன் முறையிலிருக்கும் அடிலன் மகனைக் காட்டிக்கொடுக்க மாட்டானென்பது என்ன நிச்சயம்?" என்று அஜித் சந்திரன் பதிலுக்குக் கேட்டான்.

"இதெல்லாம் முழுப் பொய். நான் அடிலனைக் காட்டிக் கொடுத்திருந்தால் குப்த ராஜ்யச் சிறையில் அடைபடுவானேன்? ஸ்கந்தகுப்தன் எனக்குச் சன்மானமும் பதவியும் அளித்திருக்க மாட்டானா?" என்றான் ராகுலன்.

முதன் முதலாக அஜித் சந்திரன் முகத்தில் கோபக் குறிகள் தோன்றலாயின. அவன் உதடுகள் லேசாகத் துடித்தன. "சக்கரவர்த்தியவர்களை இன்னும் ஒருமுறை ஏக வசனத்தில் பேசினால் உன் நாவைத் துண்டித்து விடுவேன் ஜாக்கிரதை" என்று கடுமையான குரலில் எச்சரித்துவிட்டு மேலும் சொன்னான்: "சக்கரவர்த்தியவர்கள் உன்னை ஏன் சிறைப்படுத்தினாரென்பது எனக்குத் தெரியும். பெண்

ணைக் கொடுப்பவனையே காட்டிக் கொடுக்கும் கேவலமான மனிதன் வேறு யாரையும் காட்டிக் கொடுக்கத் தயங்க மாட்டான் என்பதால் உன்னைச் சிறைப்படுத்தினார். சக்கரவர்த்தியின் உள்ளம் எனக்கு நன்றாகத் தெரியும்."

"தெரியாமலென்ன! நீ அவன் ஒற்றனல்லவா!" என்று கோபத்துடன் இடைமறித்துக் கூறினான் ராகுலன்.

"நான் ஒற்றனா அல்லவா என்பது பின்னால் தெரியும். ஆனால், குப்த ராஜ்யச் சிறையில் நீ அகப்பட்டுக் கிடந்ததோ அல்லது பூரகுப்தர் உன்னை விடுவித்துத் தோரமானாவிடம் அனுப்பியதோ எனக்குத் தெரியாதென்று நினைக்க வேண்டாம்" என்றான் உபாத்தியாயன்.

இந்த பதில் குப்த ராஜ்யப் பிரபுக்களிருவருக்கும் பேராச்சரியத்தை விளைவிக்கவே, ரகுவீர மஹாப்பிரபு கேட்டார்: "இவ்வளவு அந்தரங்க விஷயங்களை இங்கிருந்தே எப்படி அறிந்தீர்கள்?" என்று.

"சற்று நிதானியுங்கள்; சொல்கிறேன். முதன் முதலில் இங்கு உண்மைக் குற்றவாளி யார்? சித்ராவின் தம்பியின் விலாசத்தைத் தோரமானாவிடம் கூறியவன் யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். முதல் குற்றச்சாட்டு என்மேலிருக்கிறது..." என்ற உபாத்தியாயன் வார்த்தைகளைச் சித்ராவின் குரல் மெல்ல எழுந்து தடுத்து, "அந்தச் சந்தேகந்தான் இப்பொழுது தீர்ந்துவிட்டதே" என்றாள்.

"உனக்குத் தீர்ந்திருக்கலாம். எங்களுக்குத் தீரவில்லை" என்றான் பல்தேவ் நடுங்கிய குரலில்.

அவன் அஜித் சந்திரனை அப்படி வெட்டிப் பேசியது மஹாப் பிரபுக்களுக்குப் பிடிக்கவில்லையானாலும் அவர்கள் ஏதும் சொல்ல வழியின்றிப் பேசாமலிருந்தார்கள். அஜித் சந்திரனே அதற்குப் பதில் சொன்னான்:

"உண்மைதான் பல்தேவ். யார் உண்மைக் குற்றவாளி என்பதைக் கண்டுபிடிப்பது மிகவும் அவசியம். ஆகையால் இது விஷயத்தில் பூரண சந்தேகம் நிவர்த்தியாகும் வரை நானும் விடப் போவதில்லை" என்று கூறிவிட்டு, மற்ற சதிகாரர்களையும் ஒரு முறை சுற்றி நோக்கினான்; பிறகு கேட்டான், "சித்ராவின் தம்பியைத் தோரமானா சிறை செய்யப் போகிறான் என்ற தகவலைச் சித்ராவின் தம்பிக்கு முன்னதாகவே நான் தெரிவித்து அதன் காரணமாக அவன் தப்பியிருந்தால் நான் நிரபராதி என்பதை ஒப்புக்கொள்வீர்களா?" என்று.

"கண்டிப்பாய் ஒப்புக்கொள்வோம்" என்றார் ரகுவீர மஹாப்பிரபு.

"அப்புறம் சந்தேகத்துக்கு இடம் ஏது?" என்றார் நரசிம்ம மஹாப்பிரபு.

"அன்பர்கள் அனைவருக்கும் என் விஷயத்தில் சந்தேகம் ஏற்படும் என்பதை அறிந்தே நான் நிரபராதி என்பதற்கான ருசுவைக் கொண்டு வந்திருக்கிறேன்" என்று உபாத்தியாயன் சொல்லி முடிக்கு முன்பே, "எங்கே அந்த ருசு? அது எப்படியிருக்கும்?" என்று வினவினான் ராகுலன்.

"மனித உருவத்திலிருக்கும்" என்றான் உபாத்தியாயன்.

உபாத்தியாயன் தங்களைப் பார்த்து நகைக்கிறானென்பதைக் கேள்வி கேட்ட இருவரும் புரிந்துகொள்ளவே பல்தேவ், "அந்த மனித ருசு எங்கே?" என்று சொல்லிக் கொண்டே சீறி எழுந்தான்.

"அவசரப்பட வேண்டாம் பல்தேவ். ருசுவை வெகு அருகிலேயே வைத்திருக்கிறேன்" என்று அஜித் சந்திரன் பதில் சொல்லிப் புன்முறுவல் செய்தான்.

"கொஞ்சம் விளக்கமாகத் தெரிவியுங்கள்" என்று ரகுவீரர் கேட்டார்.

"மஹாப்பிரபு! இந்தக் கூடத்தில் அன்று என் இஷ்ட விரோதமாகக் கடிதம் படிக்கப்பட்டவுடன் இங்கிருந்து நேராக என் அறைக்குச் சென்றேன். சென்றதும், உடனே தப்பியோடுமாறு எச்சரித்துச் சித்ராவின் தம்பிக்கு ஓலை எழுதி அனுப்பினேன். அதைக் கொண்டு சென்ற முகுந்தன் வாசலில் இருக்கிறான். கூப்பிட்டு விசாரியுங்கள்" என்றான் அஜித் சந்திரன்.

அவ்வளவுதான். மிகுந்த கிலியுடனும் பரபரப்புடனும் பல்தேவ் எழுந்து, "இதோ நான் அவனை அழைத்து வருகிறேன். சாவியைக் கொடுங்கள்!" என்று கூறிக் கொண்டு ராகுலனுக்காகப் பாய்ந்து அவன் இடுப்பிலிருந்த சாவியை பலவந்தமாக எடுத்துக்கொண்டு வாயிற் கதவை நோக்கிப் பாய்ந்தான். பிறகு பூட்டை அளவுக்கு மீறிய அவசரத்துடனும் நடுங்கும் கைகளுடனும் திறந்து வெளியே ஓடினான்.

பல்தேவ் மறைந்ததும் உபாத்தியாயன் மிகப் பெரியதாகச் சிரித்துக் கொண்டே ஆசனத்திலிருந்து துள்ளியெழுந்து, "அன்பர்களே, உயிர்மீது ஆசையிருப்பவர்கள் சீக்கிரம் வீட்டிற்கு வெளியே வாருங்கள். மிக அற்புதமான காட்சியைக் காட்டுகிறேன்," என்று கூறிக்கொண்டு வாசலுக்காக விரைந்தான். மற்ற சதிகாரர்களும் அவனைத் தொடர்ந்து ஓடினார்கள்.

சித்ராதேவி மட்டும் தனியே கூடத்திலிருந்தாள். மனம் நிம்மதியில்லாததால் எழுந்திருந்து பக்கத்திலிருந்த சாளரத்துக்கு வெளியே நோக்கினாள். அவள் கண்கள் ஆச்சரியத்தாலும் பிரமிப்பாலும் அகன்று விரிந்தன. அடிலன் மாளிகையை நோக்கி மிகுந்த வேகத்துடன் பல்தேவ்

ஓடிக்கொண்டிருந்தான். குப்த ராஜ்யப் பிரபுக்களும் இதர சதிகாரர்களும் அவனைத் துரத்தி ஓடிக் கொண்டிருந் தார்கள்.

வைத்த கண்ணை வாங்காமல் அந்தக் காட்சியை நோக்கிக் கொண்டிருந்த சித்ராதேவிக்கு உண்மையை ஊகிக்க அதிக நேரமாகவில்லை. ஆனால் பல்தேவ் ஓடும்படியான ஒரு நிலையை அஜித் சந்திரன் ஏன் ஏற்படுத்தினான் என்று யோசனையுடன் திரும்பவும் கூடத்துக்கு நடுவே வந்து தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள். எங்கெங்கோ ஓடிக்கொண்டிருந்த அவள் சிந்தனையை சதிகாரர்களின் வரவு கலைத்தது.

குப்த ராஜ்யப் பிரபுக்கள் இருவரால் இறுகப் பிடித்து உந்தப்பட்டும் பல உடைவாள்களால் பாதுகாக்கப்பட்டும் பல்தேவ் கூடத்துக்குள் கொண்டு வரப்பட்டான். பிரபுக்கள் அவனை அவன் ஆசனத்தில் தள்ளினார்கள். ஆசனத்தின் இருபுறங்களிலும் இரு வில்லவர் உட்கார்ந்து அவனை அழுத்திப் பிடித்துக் கொண்டார்கள். சதிகாரர்களின் முகங்களிலிருந்த கோபமும் பல்தேவின் முகத்திலிருந்த கிலியும் யார் குற்றவாளியென்பதில் சித்ராதேவிக்குக் கொஞ்சம் நஞ்சமிருந்த சந்தேகத்தையும் போக்கிவிட்டன. இந்த சமயத்தில் வாயிற் கதவைப் பூட்டிய உபாத்தியாயன், எக்கவலையுமின்றிச் சிரித்துக் கொண்டே உள்ளே நுழைந் தான்.

அவனை உற்று நோக்கிய சித்ராதேவி, "உபாத்தியாயரே! முகுந்தன் எங்கே?" என்றாள்.

"மாளிகையில் இருக்கிறான்."

"இங்கு வரவில்லையா?"

"இங்கு அவனுக்கு என்ன வேலை?"

முகுந்தன் வந்ததாகவும், முகுந்தன் வாயிலில் காத்து இருப்பதாகவும் அஜித் சந்திரன் சொன்னது முற்றிலும் பொய் என்பதையும் சித்ராதேவி புரிந்துகொண்டாள். ஆனால், பல்தேவைப் பிடிக்கும் அவசரத்தில் யாருக்கும் அதைப்பற்றி நினைக்கக்கூட அவகாசமில்லை. அவசரம் சிறிது அடங்கவே அதைப்பற்றி யோசனை எழுந்தது. "முகுந்தன் வாயிலில் வந்திருப்பதாக எதற்காகப் பொய் சொன்னீர்கள்?" என்று ரகுவீரர் கேட்டார்.

உபாத்தியாயன் ஆசனத்தில் அமரவில்லை. நின்ற நிலையிலேயே ரகுவீரரையும், இதரர்களையும் பார்த்து, "அதுதான் பல்தேவுக்கு நான் விரித்த வலை" என்றான். யாரும் அர்த்தம் புரியாமல் விழிக்கவே அஜித் சந்திரன் விவரிக்கலானான்.

56. கச்சையிலிருந்த பட்டுச் சீலை

"இந்த சதிக்கூட்டம் ஏற்பட்ட காரணங்களையும் இதை ஸ்தாபித்தவர்களின் உண்மை உத்தேசங்களையும் உணர வேண்டுமானால் குப்த ஹூண ராஜ்யங்களின் சரித்திர வரலாற்றையும் உணர வேண்டும். அந்தக் கதையில் புகுமுன்பு இதோ இருக்கும் இந்த உளவாளிக்கு நான் வலை விரித்த மார்க்கத்தைக் கூறுகிறேன்" என்ற பூர்வ பீடிகையுடன் அஜித் சந்திரன் தன் பேச்சைத் தொடங்கினான். சதிக் கூட்டத்தைச் சேர்ந்த அனைவரும் மிக மௌனமாக அவன் பேச்சைக் கேட்பதில் முனைந்தனர். அஜித் சந்திரன் வார்த்தைக்கு ஏதோ பதில் சொல்ல ஆசனத்திலிருந்து திணறி எழுந்திருக்க முயன்ற பல்தேவை அவனருகிலிருந்த இருவர் அழுத்தி அசையவொட்டாமல் செய்துவிட்டனர்.

அஜித் சந்திரன் தொடர்ந்து பேசினான்: "இந்தச் சதிக்கூட்டம் ஆரம்பிக்கப்பட்டதே தோரமானாவை ஒழிப்பதற்கல்லவென்பது எனக்குத் தெரியும். ஆகவே, இதை ஆரம்பித்தது யாராயிருந்தாலும் தோரமானாவிடம் நம்மைக் காட்டிக் கொடுக்கத் தயங்கமாட்டானென்பதை ஆரம்பம் முதல் அறிந்தேயிருந்தேன். ஆகவே, ஒவ்வொரு முறையும் இந்தக் கூட்டத்துக்கு வருமுன்பு என்னைத் தற்காத்துக் கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளுடனேயே வந்தேன். சித்ராவின் தம்பியின் விலாசம் இங்கு படிக்கப்பட்டதுமே எந்த நிமிஷத்திலும் இந்தக் கூட்டத்தில் கலவரம் ஏற்படலாமென்ற நிச்சயத்துடனிருந்தேன். ஆகவே, பல்தேவ் சந்தேகத்தை என்மீது திருப்பிவிட்டதிலும் எனக்கு ஆச்சரியமில்லை. நீங்களெல்லோரும் எழுந்திருந்து என்னைக்

கொல்ல முயன்றதிலும் வியப்பில்லை. அத்தனை அபாயத்திலும் நான் அசையாமல் உட்கார்ந்திருந்ததை நீங்கள் கவனித்திருப்பீர்கள்."

"சந்தேகமென்ன! நீங்கள் காட்டிய நிதானமும் அலட்சியமும் எனக்கே பெருத்த ஆச்சரியமாயிருந்தது" என்றார் ரகுவீரர்.

"உங்களுடைய ஸ்தானத்தில் வேறொருவராயிருந்தால் என்ன நடந்திருக்குமென்று சொல்ல முடியாது" என்று பாராட்டினார் நரசிம்ம மஹாப்பிரபு.

"வேறொருவர் இருக்க முடியாது. ஏனென்றால் பல்தேவின் லட்சியம் என்னை ஒழிக்க வேண்டுமென்பதுதான்" என்றான் அஜித் சந்திரன்.

இதற்குமேல் தாங்கமுடியாத பல்தேவ், "பொய், முற்றிலும் பொய்" என்று கூவினான். அவன் கூச்சலை யாரும் லட்சியம் செய்யவில்லை. அஜித் சந்திரன் முகத்தையே எல்லோரும் கவனித்தார்கள்.

உபாத்தியாயன் மேலும் பேசத் தொடங்கி, "நீங்கள் அனைவரும் என்னை வெட்டத் தொடங்கியதையும் பிறகு பல்தேவின்மீது சந்தேகம் திரும்பியதும் அவனைக் கொலை செய்யத் துடித்ததையும் கண்ட எந்த உளவாளியும் இந்த இடத்தில் இருக்கும் ஒவ்வொரு விநாடியும் தன் உயிர் ஆபத்திலிருக்கிறது என்பதை உணர்ந்திருப்பான். ஆகவே இந்த இடத்திலிருந்து தப்ப ஏதாவது ஒரு மார்க்கம் அகப்படாதா என்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பான்..." என்று விவரித்தபோது சதிகாரர்களுக்கு மெள்ள உண்மை புலப்படத் தொடங்கியது.

ராகுலன் கண்கள்கூட விஷயத்தைப் புரிந்துகொண்டதற்கு அடையாளமாக விரிந்தன. "அதனால்தான் நீங்கள்..." என்று ஆரம்பித்தான்.

அவன் பேச்சை உபாத்தியாயன் இடைமறித்து, "அந்த மார்க்கத்தைக் காட்டினேன்" என்று கூறிவிட்டு, "தப்ப யத்தனிக்கும் உளவாளிக்கு வழியைக் காட்டினால் அவன் தப்பியோட முயற்சிப்பான். அதிலிருந்து அவனைப் பற்றிய மர்மம் வெளிப்பட்டுவிடும் என்பதற்காகவே என் வீரன் முகுந்தன் வெளியில் இருப்பதாக ஒரு பொய்யைச் சொன்னேன். வெளியில் ஓடக் கிடைத்த சந்தர்ப்பத்தை பல்தேவ் எப்படி உபயோகித்துக் கொண்டான் என்பதை நீங்கள் கண்ணாரக் கண்டீர்கள். நான் விரித்த வலையில் பல்தேவ் விழாதிருந்தால் இப்பொழுதுகூட உண்மையை நான் ஸ்தாபிக்க முடியாது" என்று விளக்கினான் உபாத்தியாயன்.

"நீங்கள் செய்தது சரியான காரியம்; இல்லாவிட்டால் இந்த அயோக்கியன் இப்பொழுதுகூட அகப்பட்டிருக்க மாட்டான்" என்றார் ரகுவீர மஹாப்பிரபு.

"இப்பொழுதே எச்சரிக்கிறேன். முட்டாள்தனமாக என்னைக் கொன்று இந்த அஜித் சந்திரனைத் தப்ப விட்டால் உங்கள் எல்லோரையும் இவன் ஒழித்துவிடுவான். இந்த சதி நடக்கும் விவரங்களை இவன் ஏற்கெனவே தோரமானாவுக்கு எழுதியனுப்பியிருக்கிறான். இந்த விவரத்தை அன்று மாளிகையில் முதன் முதலாக நான் என் மனைவியைச் சந்தித்த போது அவளே சொன்னாள். உண்மையா அல்லவாவென்று கேளுங்கள் அவனை" என்று பல்தேவ் இரைந்தான்.

இந்தப் புதுக் குற்றச்சாட்டுக்கு உபாத்தியாயன் பதில் என்ன சொல்லப் போகிறானென்பதைச் சதிகாரர்கள் ஆவலுடன் கவனித்தார்கள்.

குற்றத்தை அஜித் சந்திரன் சந்தேகத்துக்கிடமின்றி ஒப்புக்கொண்டான். "உண்மையில் இந்தச் சதியைப் பற்றிய

சகல விவரங்களையும் நான் தோரமானாவுக்கு எழுதி யனுப்பிப் பல நாட்களாகின்றன" என்றான்.

"இப்பொழுது தெரிகிறதா யார் உளவாளியென்று? அவனை முதலில் பிடித்துக் கொள்ளுங்கள். இந்தச் சதிக் கூட்டத்துக்கு இவன் துரோகியானால் சித்ராவின் தம்பிக்கும் விரோதி. குப்த ராஜ்யத்துக்கும் துரோகி. இவனை விடாதீர்கள்?" என்று தூண்டினான் பல்தேவ்.

உபாத்தியாயன் உதடுகளிலிருந்த விஷமச் சிரிப்பு மறைந்தது. முகத்தில் தீவிரமான கோபம் எழுந்தது. அவ்வளவு கோபத்தை அவனிடம் என்றும் கண்டறியாத சித்ராதேவிகூட அதன் காரணத்தை அறியாமல் திகைத்தாள். மிகுந்த உக்கிரத்துடன் பல்தேவை நோக்கிய அஜித் சந்திரன், "குப்த ராஜ்யத் துரோகியா! அது யார் என்பதை சீக்கிரமே கண்டுபிடிப்போம் பல்தேவ்" என்று கூறியவண்ணம் தன் கச்சையில் கட்டியிருந்த பட்டு நூல்களை அவிழ்த்து உள்ளே மடித்து வைக்கப்பட்டிருந்த சிறு பட்டுச் சீலையை எடுத்தான். பிறகு ரகுவீரரை நோக்கி, "மஹாப்பிரபு! நீங்கள் குப்த ராஜ்யத்தில் வகிக்கும் ஸ்தானத்தின் காரணமாகவும் பிறப்பின் காரணமாகவும் இங்குள்ள எல்லோரையும்விட அந்தஸ்தில் உயர்ந்தவர்கள். எல்லோராலும் மதிக்கப்பட வேண்டியவர்கள். ஆகையால் இதைப் படித்துப் பாருங்கள்" என்று பட்டுச் சீலையை எடுத்து அவரிடம் நீட்டினான்.

அதைப் பார்க்கும் ஆவலுடன் எல்லோரும் எழுந்தார்கள். "மற்றவர்கள் அதைப் பிறகு பார்க்கலாம். தற்சமயம் பிரபு மட்டும் படித்தால் போதும்" என்று தடுத்தான் அஜித் சந்திரன்.

"நாங்களும் இந்தச் சதியில் சேர்ந்தவர்கள்தானே? அவருக்குத் தெரிந்தது எங்களுக்கும் தெரிந்தால் என்ன?" என்று கேட்டான் ராகுலன்.

"நீங்களும் பார்க்கலாம். ஆனால், சற்று நிதானிக்க வேண்டும்" என்றான் அஜித் சந்திரன்.

அந்தப் பட்டுச் சீலையைச் சாளரத்திற்காகக் கொண்டு போய் வெளிச்சத்தில் பார்த்தார் ரகுவீர மஹாப்பிரபு. அதைப் பார்த்த அவன் முகம் சொல்லவொண்ணா பிரமிப்பை அடைந்தது. சாளரத்தருகிலிருந்து திரும்பி உபாத்தியாயனைப் பார்த்தபோது அவர் தோரணையே மிகவும் மாறியிருந்தது. மரியாதை ததும்பிய குரலில் மிகத் தாழ்மையுடன், "நீங்கள் இதை ஏன் சொல்லவில்லை? நாங்கள் ஏதேதோ நினைத்துக்கொண்டு..." என்று மேலும் பேசப் போனார் ரகுவீரர்.

"மேற்கொண்டு எதுவும் பேசவேண்டாம். குப்த ராஜ்யத்தின் துரோகி நானாயிருக்க முடியாது என்பதை மட்டும் நமது நண்பர்களுக்குச் சொல்லுங்கள் போதும்" என்ற உபாத்தியாயன் ரகுவீரரை அடக்கிவிட்டுப் பட்டுச் சீலையை மீண்டும் பழையபடி கச்சையில் சொருகிக் கொண்டான்.

சாளரத்தருகிலிருந்து நடுக்கூடத்துக்கு வந்த ரகுவீர மஹாப்பிரபு. "இங்கு யார் துரோகியாயிருந்தாலும் இருக்கலாம். உபாத்தியாயர் துரோகியல்ல. அவரைப் பற்றிச் சந்தேகிப்பவர்கள் என் வாளுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும்" என்று அறைகூவும் முறையில் பேசினார்.

ரகுவீரரின் இந்த மாறுதலுக்குக் காரணம் புரியாத நரஸிம்ம மஹாப்பிரபு ஏதோ கேள்வி கேட்க எழுந்தார். ஆனால் உபாத்தியாயன் பார்வையொன்று அவரைப் பழையபடி ஆசனத்தில் உட்கார வைத்தது. ரகுவீரரும் உபாத்தியாயனும் தங்கள் தங்கள் ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர்.

"குப்த ராஜ்யத்தின் துரோகியாகவோ, தோரமானாவின் உளவாளியாகவோ நான் இருக்க முடியாது என்று இப்பொழுது விளங்கிவிட்டபடியால், பல்தேவ் ஏன் இந்தச் சதிக் கூட்டத்தை நிறுவினான், அவன் உண்மை நோக்கம் என்ன; என்ற விவரங்களை இனிச் சொல்கிறேன். இந்தச் சதியின் கதையைச் சரியாக அறிய வேண்டுமானால் சென்ற ஆறு வருஷ காலத்தில் பாரதத்தின் சரித்திரப் போக்கு எப்படியிருந்திருக்கிறது என்பதையும் அறிய வேண்டும். இந்தச் சரித்திரத்தோடு மலைவாசல் சம்பவங்களும் என் சொந்தக் கதையுங்கூட பெரிதும் பிணைக்கப்பட்டிருக்கின்றன" என்று அஜித் சந்திரன் தன் கதையைச் சொல்லத் தொடங்கினான். கதையின் நீளத்தை உத்தேசித்து மஞ்சத்தில், சாய்ந்து கால்களையும் சௌகரியமாக நீட்டிக் கொண்டான்.

57. உபாத்தியாயன் சுய சரிதை

கதையைத் தொடங்குமுன்பு மஞ்சத்தில் சாய்ந்தபடியே அஜித் சந்திரன் சாளரத்துக்கு வெளியே கண்களை ஓட்டினான். அப்பொழுதுதான் மாலை வேளை மறைந்து சந்திர வெளிச்சம் ஹிந்துகுஷ் மலையின் பனி உறைந்த உச்சிகளில் பட்டு அந்த உச்சிகளை கலசங்கள் போல் பிரகாசிக்கச் செய்துகொண்டிருந்தது. சற்று தூரத்துக்கு ஒன்றாக உதிரியாக நின்றுகொண்டிருந்த புதுக் கொழுந்து விட்ட மரங்கள் வெண்மதிக் கிரணங்களால் பொன்னிறம் மாறிச் சற்றே பளிச்சிட்டு நின்றன. இயற்கையளித்த இந்தக் காட்சியினாலோ அல்லது உள்ளே பிரவாகித்த பழைய நினைவுகளாலோ தெரியாது. அஜித் சந்திரன் கண்கள் சூழ்நிலையை மறந்து எங்கோ கனவுலகத்தில் காட்சி கண்டு கொண்டிருந்தன. பிரமை தட்டிய தூரதிருஷ்டியை உதிர்த்த அந்தக் கண்களைக் கண்ட சித்ராதேவி கூட அவன் உள்ளத்தே ஓடிய நினைவுகளை ஓரளவு ஊகித்தவளாய் தானும் அந்தப் பழைய சூழ்நிலைக்கு மெல்ல மெல்லச் செல்லலானாள்.

பழைய சிந்தனையில் சிக்கிய அஜித் சந்திரன் வெகு நேரம் மட்டும் பேசவேயில்லை. அவன் பேசத் தொடங்கிய போது ஏதோ கனவில் பேசுபவன் போலவே பேசினான். கதையைத் தனக்குச் சொல்லிக்கொள்பவன் போல சுயானுபவங்களை வெளியிட்டானேயொழியச் சதிகாரர்களுக்கு விஷயங்களை விளக்கும் தோரணையில் பேசவில்லை. அஜித் சந்திரன் சரித்திரப் பாடம் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயன் போலவே கதையைச் சொல்ல

ஆரம்பித்தான்: "மஹாப் பிரபுக்களே! பாரத அன்னையின் மடியில் பல சாம்ராஜ்யங்கள் பிறந்து மடிந்தன. பல மன்னர்கள் தவழ்ந்து சொல்லவொண்ணா வீரச்செயல்களைப் புரிந்திருக்கிறார்கள். பெரிய பெரிய யுத்தங்களை நடத்தி வெற்றி கொண்டுமிருக்கிறார்கள். தோல்வியடைந்துமிருக்கிறார்கள். ஆனால், இன்று வரை இந்த அன்னை குப்த சாம்ராஜ்யத்தைப் போன்ற ஒரு சாம்ராஜ்யத்தையும் படைக்கவில்லை. ஸ்கந்தகுப்த சக்கரவர்த்தியைப் போன்ற ஓர் இணையில்லா வீரனையும் ராஜதந்திரியையும் பெற்றெடுக்கவில்லை. குப்த ராஜ்யத்தில் அன்னையின் வாழ்க்கை மிகப் பெருமையடைந்தது. மாற்றரசர்களின் கப்பங்களால் நாடு பொன்னாகப் பொலிந்தது. இந்தச் சாம்ராஜ்யத்தின் செல்வச் சீரினாலும் நாகரிக உயர்வாலும், சித்திரமும் சிற்பமும் கைத்தொழிலும் செழித்த செழிப்பாலும், இந்தச் சாம்ராஜ்ய காலத்தை வெளி நாட்டார் குப்தர்கள் ஆண்ட பொன்னான காலம் என்றும், பாரதத்தைப் பொன்விளையும் பூமியென்றும் இன்று கொண்டாடுகிறார்கள். இத்தகைய காலத்தில் பாரதத்துக்கு என்றும் ஏற்படாத பயங்கரத் தீமையொன்றும் ஏற்பட்டது. ஹூணர்களின் படையெடுப்பைத்தான் சொல்லுகிறேன். பாரதத்தை ஆண்ட மற்ற மன்னர்களின் காலத்தில் படையெடுப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. சைன்னியங்களை நடத்தி பலர் நம்மீது படையெடுத்திருக்கிறார்கள். அவற்றைச் சைன்னியங்களைக் கொண்டு எதிர்த்தோம். சாதாரணமாக உலக மக்கள் அறிந்த யுத்த முறைப்படி போரிட்டோம். ஆனால் ஹூணர்களின் படையெடுப்பு உலக சரித்திரத்திலேயே இணையில்லாக் கொடுமை ஹூணர்கள் மலைவாசல் வழியாகச் சாரிசாரியாகப் பாய்ந்தார்கள். தீப்பந்தங்களை எடுத்துக் கிராம வீடுகளின் மீது வீசினார்கள். பயிர்களுக்குக் கொள்ளி வைத்தார்கள். குழந்தை குட்டிகள் ஸ்திரீகள் என வித்தியாசம் பாராமல்

ஜனங்களைக் கொன்று குவித்தார்கள். இவர்கள் கட்டுக் கடங்கிய சைன்னிய வகையைச் சேர்ந்தவர்களல்ல. கட்டுக் கடங்காத வெறியர்களானாலும் அஞ்சாநெஞ்சம் படைத்த வர்கள். போரில் சிறிதும் சளைக்காதவர்கள். பிறர் உயிரைப் போலவே தங்கள் உயிரையும் திருணமாய் மதிப்பவர்கள். இத்தகைய ஒரு நாடோடி வெறிக் கும்பலைச் சமாளிக்கும் பொறுப்பு ஒரு மஹாவீரனுக்கு ஏற்பட்டது. அந்த மஹா வீரன் வாலிபப் பிராயத்தில் இந்த அபாயத்தைச் சமாளித்து ஹூணர்களை முறியடித்துப் பாரத பூமியிலிருந்து விரட்டி னார். ஆனால், அபாயம் அத்துடன் விடவில்லை. ஆயுள் பூராவும் அம் மஹாவீரனை யுத்தத்தில் ஆழ்த்தியது. இடை விடாப் போரினாலும், படைகளைத் தானே நேரிலிருந்து நடத்தியதாலும், மஹாவீரனான ஸ்கந்தகுப்த சக்கரவர்த்தி நோய்வாய்ப்பட்டார். அவர் உடல் நலிந்த பத்து வருஷங் களில் ஹூணர்கள் சாரிசாரியாக மீண்டும் பாரத நாட்டில் நுழைந்து ஸிந்துநதிப் பிரதேசம் முழுவதையும் ஆக்கிரமித் துக் கொண்டார்கள். அடிக்கடி நேரிட்ட போரினால் சக்கர வர்த்தியின் பொக்கிஷம் காலியாகிவிட்டது. போதாக் குறைக்கு ஆனந்ததேவியின் அதிகார ஆசை குப்த ராஜ்யத் தில் பிளவை உண்டாக்கலாயிற்று. பூரகுப்தரை சிம்மாசனத் தில் ஏற்ற ஆனந்ததேவி பல இடங்களிலும் ஆதரவு தேடலானாள். ஹூணர்களைச் சமாளிக்க சக்கரவர்த்தி யனுப்பிய சிறு படைகள் அடிலனால் வதம் செய்யப்பட்டன.

மாற்றார் வெற்றியாலும், உற்றார் ராஜ்ய ஆசையாலும் திணறிய சக்கரவர்த்தியவர்கள் இந்தச் சிறு உபசேனாதிபதி யையும் ஒரு படையுடன் மலைவாசலுக்கு அனுப்பினார். புறப்படு முன்பாக சக்கரவர்த்தியைச் சந்தித்தேன். சந்தித்த போது சிறிது காலம் மலைவாசலிலேயே தங்க அனுமதி கேட்டேன்" என்று பேசிக்கொண்டே போன உபாத்தி யாயனை அதுவரை மறுத்துப் பேசாதிருந்த ரகுவீரர், "மலை

வாசலில் தங்க அநுமதி கேட்டீர்களா?" என்றார் ஆச்சரியத் துடன்.

"ஆம், மஹாப்பிரபு! ஹூணர்கள் ஸிந்து நதிப் பிராந்தியம் முழுவதும் வியாபித்திருக்கையில் நான் எப்படி என் சிறு படையுடன் மலைவாசலை அணுக முடியும்? ஸிந்து நதிக்கு அருகிலேயே எதிரிகள் என்னை முறியடித்துத் துரத்திவிட மாட்டார்களா?"

"அப்படியானால் தோல்வி நிச்சயமென்று தெரியுமா?"

"நன்றாகத் தெரியும்."

"தெரிந்தால் போரிட வருவானேன்?"

"இதே கேள்வியைச் சக்கரவர்த்தியவர்கள் கூடக் கேட்டார். இதில் என்னுடைய உத்தேசம் வேறாயிருந்தது. ஹூணர்கள் போன்ற புதுமுறைப் போரிடுபவர்களைச் சமாளிக்க வேண்டுமானால் அவர்கள் படைகள் நிறுத்தி யிருக்கும் இடங்களையும் அவர்கள் போர்ப் பழக்கங்களை யும் அறிய வேண்டும். அதற்காக அவர்களுடன் ஓரிரண்டு வருஷங்களாவது தங்க வேண்டும். இதற்குத்தான் சக்கர வர்த்தியின் அநுமதியைக் கேட்டேன். ஸிந்துநதிப் பிராந்தியத் திலேயே நான் சண்டையிலிறங்கியிருந்தால் பக்கத்திலுள்ள ஏதாவது ஒரு சிறையில் போட்டிருப்பார்கள். அப்படிப் போட்டிருந்திருந்தால் தலைமைக் காரியாலயத் தகவல் களை அறிய முடியாது. ஆகவே, மிகச் சிறு படையுடனேயே கிளம்பி ஸிந்து நதியின் வடக்குப் பாகத்தில் ஹூணர் நடமாட்டம் குறைந்த பகுதியாகப் பார்த்து ஆற்றைக் கடந்து மலைவாசலுக்கு வந்து அடிலனுடன் நேருக்கு நேர் போர் தொடுத்தேன். எதிர்பார்த்தபடி அடிலனால் சிறைப்படுத்தப் பட்டேன். ஆனால், சில மாதங்களில் எதிர்பார்த்தபடி சுதந்திர புருஷனாக்கப்பட்டுச் சித்ராதேவிக்கும் அவள் தம்பிக்கும் உபாத்தியாயனாக நியமிக்கப்பட்டேன். இந்த

சுதந்திர வாழ்க்கையை ஹூணர்களின் படைபலத்தை அறிவதற்கும், மலைவாசலிலுள்ள வில்லவர்களைப் புரட்சிக் குத் தூண்டி மலைவாசலில் உதவி, ஹூணப்படை புகாது தடுக்க ஏற்பாடு செய்வதற்கும் பயன்படுத்த நினைத்தேன். அப்படி மலைவாசலை அடைந்து அடிலனுக்கு உதவி கிடைக்காமல் செய்துவிட்டால், குப்த ராஜ்யப் படைகள் ஸிந்து நதிப் பிராந்தியங்களைத் தாக்க முடியும். மேற்கே மலைவாசலில் புரட்சியும் கிழக்கே ஸிந்து நதிக்கருகே தாக்குத லும் ஏற்பட்டால் அடிலன் சமாளிப்பது கஷ்டம். இந்த நிலையை ஏற்படுத்த முடியுமாவென்று கவனித்தேன். முடியாதென்ற முடிவுக்கு வந்தேன். வில்லவருடன் பழகியதில் வில்லவர் உணர்விழந்து கிடந்தார்களென்பதை அறிந்தேன். ஹூணர்களின் கொடுமையாலும் சக்கரவர்த்தி அவர்களுக்கு உதவியனுப்பாததாலும் அவர்கள் குப்த ராஜ்யத்திடம் சொல்லவொண்ணா வெறுப்பும் கொண் டிருந்தார்கள். புரட்சி அசாத்தியம் என்று தோன்றியது. ஹூணர்கள் படைபலத்தை அறிய கண்களைச் சுற்றுமுற்றும் ஓடவிட்டேன். அந்தக் கண்களைச் சிறைப்படுத்த இரு விழி களை ஈசன் படைத்தான்" என்றான் உபாத்தியாயன்.

இதைச் சொல்லிக்கொண்டே சித்ராதேவிக்காக கண் களை ஓட்டினான். அவள் முகத்தில் வெட்கமும் பெருமை யும் கலந்து தாண்டவமாடின. ராகுலன் வெகுண்டான். அதை யாரும் லட்சியம் செய்யவில்லை. ரகுவீர மஹாபிரபு வும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு, "அந்தக் கருவிழி களின் சிறையிலிருந்துதான் நீங்கள் மீளவில்லையே" என்று சிரித்தார்.

"மீள உத்தேசமும் இல்லை" என்று சிரித்துக்கொண்டே கூறிவிட்டு அஜித் சந்திரன் மேலும் கதையைத் தொடர்ந் தான்:

"சித்ராதேவிக்கு நான் உபாத்தியாயனாக இருந்ததால் என் சொந்தப் பெயர் மலைவாசலில் மறைந்து எல்லோரும் உபாத்தியாயன் என்றே என்னை அழைத்தார்கள். உபாத்திமைத் தொழில் செய்த அந்தக் காலத்தில்தான் உள்ளத்தை அடிலன் மகளிடம் பறிகொடுத்தேன். பறி கொடுத்த சில நாட்களில் அவளைவிட்டு அகலவோ, குப்த ராஜ்ய அலுவல்களை மட்டும் கவனிக்கவோ, சக்தியற்றவ னானேன். இருந்தபோதிலும் மனத்தைப் பெரிதும் கட்டுப் படுத்திக் கொண்டு ஹூணர்களின் படைபலம், போர் முறைகள் முதலியவற்றை அறிந்தேன். அவற்றைப் பற்றிய தகவல்களைச் சக்கரவர்த்திக்குத் தெரியப்படுத்தவும் தீர்மானித்தேன். அதற்காக அடிலனிடமிருந்து தப்பிப் போகு முன்பு சித்ராதேவியிடம் என் எண்ணத்தையும் வெளியிடத் தீர்மானித்தேன். பிறகு சண்பகத் தோட்டத்தில் சித்ராவைச் சந்தித்ததும் அடிலன் என்னைச் சாட்டையால் அடித்ததும் மலைவாசல் அறிந்த விஷயங்கள். அடிலனை எதற்கும் நான் மன்னித்திருப்பேன். ஆனால் சாட்டை கொண்டு அடித்ததை மட்டும் மன்னிக்க என் க்ஷத்திரிய ரத்தம் இடங் கொடுக்க வில்லை. புண்பட்டுக் கொதித்த உள்ளத்தோடு வில்லவர் விடுதிக்குச் சென்ற அன்றிரவில்தான் காமினி தூக்கிச் செல்லப்பட்டாள்.

நானும் அடிலனால் கசையடிபட்டு குற்றுயிராகி சித்ரா வின் தயவால் பிழைத்தேன். அந்த சந்தர்ப்பம் எனக்கு மற்றொரு உண்மையைப் புலப்படுத்தியது. உதயன் வீட்டில் நான் மூர்ச்சை தெளியாமலிருப்பதாக நினைத்த ஆனந்த தேவியும் தோரமானாவும் தங்களுக்குள் பரஸ்பரம் ராஜ்ய ஒப்பந்தமொன்று செய்து கொண்டார்கள். நான் மூடிய கண் மூடியபடியே கிடந்து அவர்கள் பேசியதையெல்லாம் கேட்டுக் கொண்டேன். பிறகு என்னைத் தூக்கி வண்டியில் போட்டுக்கொண்டு ஆனந்ததேவி பாடலிபுத்ரம் சேர்ந்தாள்!

நானும் சக்கரவர்த்தியிடம் தோரமானா ஆனந்ததேவி ஒப்பந்தத்தையும் ஹூணர்கள் படைபலத்தையும் தெரிவிக்கச் சென்றேன். சக்கரவர்த்தி எனக்களித்த பேட்டியின்போது சக்கரவர்த்தியின் அந்தரங்க தாஸியிருந்தாள். பிரதம மந்திரியிருந்தார். வேறு யாரும் இல்லை. ஹூணர்களின் படைபலம் அதிகமென்பதையும், படைகளைக் கொண்டு ஹூணர்களை முறியடிக்க வேண்டுமானால் படை திரட்ட வேண்டியது அவசியமென்பதையும் அதற்குப் பணம் வேண்டுமென்றும் சக்கரவர்த்தியிடம் சொன்னேன். சக்கரவர்த்தி தன்னிடம் பணம் கிடையாதென்று சொல்லிவிட்டார். பணத்தைச் சம்பாதிக்கவும், தோரமானா—ஆனந்ததேவி ஒப்பந்தத்தை உடைக்கவும் நான் ஒரு வழி சொன்னேன். அதற்கு முதலில் சக்கரவர்த்தி ஒப்பவில்லை.”

“என்ன வழி?” என்று சித்ராதேவி கேட்டாள்.

“சாணக்கியன் வழியைத்தான் குறிப்பிட்டேன். நேரிடையாகச் செய்ய முடியாததை ராஜதந்திரத்தால் சாதிக்கலாமென்று சொன்னேன். குப்தராஜ்யத்திடமிருந்து ஹூணர்கள் கொள்ளையடித்த பணத்தைத் தந்திரத்தால், திரும்பி வாங்க வேண்டுமென்று சொன்னேன். அதற்காகத் தோரமானாவிடம் வேலைக்கமர்வதாகவும், நான் சக்கரவர்த்திக்கு அவ்வப்பொழுது ஒற்றர்கள் மூலம் அனுப்பும் செய்திப்படி குப்த ராஜ்யப் படைகள் பல இடங்களில் தாக்க முயல வேண்டியதென்றும், அந்தப் படைத்தலைவர்களுக்குப் பணம் கொடுத்து நான் போரில்லாமல் செய்ய வேண்டியதென்றும், அந்தப் பணம் குப்த ராஜ்யப் பொக்கிஷத்துக்குச் சேர வேண்டியதென்றும் கூறினேன்.

“இதில் மகாராஜாவுக்கு இரண்டுவித சந்தேகம். நான் எப்படித் தோரமானாவிடம் வேலைக்கமர முடியும் என்பது ஒன்று. குப்தப் படைகளுடன் போரிடாமல் பணத்தைக் கொடுத்துச் சமாதானம் செய்து கொள்ளத் தோரமானா

இசைவானா என்பது இரண்டாவது சந்தேகம். முதல் சந்தேகத்துக்கு நான் ஒரு பரிகாரம் சொன்னேன்.

“ ‘மகாராஜா! முதலில் தாங்கள் என்னை வேலையிலிருந்து நீக்கிவிடுங்கள்’ என்றேன். மகாராஜா ஆச்சரியத்துடன், ‘எதற்காக?’ என்றார். ‘அடிலன் மகளை நான் காதலிக்கிறேன்’ என்றேன். மகா கூர்மையான புத்தியுள்ள மகாராஜா நிமிஷ நேரத்தில் நான் சொல்வதைப் புரிந்து கொண்டார். ‘அடிலன் மகளிடம் நீ காதல் கொண்டதால் குப்த ராஜ்ய வேலையை விட்டுவிட்டு எதிரிகள் பிராந்தியத்தில் வேலைக்கமரப் போவதாக என்னைப் பறைசாற்றச் சொல்கிறாயா?’ என்றார் கோபத்துடன். ‘பறைசாற்றச் சொல்லவில்லை மகாராஜா! வதந்தியைக் கிளப்பி விடுங்கள். நான் ஒரு ஹூணப் பெண்ணின் காதலுக்காகத் தங்களைத் துறந்து சென்றேனென்றால் ஜனங்கள் என்னைத் துரோகியென்றும், கசடனென்றும் பழிப்பார்கள். ஆனால் தோரமானா நம்பிக்கையுடன் வேலையில் அமர்த்திக் கொள்ள அது ஒரு காரணமாகும்’ என்றேன். என் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்த மகாராஜா சம்மதிக்கவில்லை. ‘ராஜ்ய நலனுக்காக உயிரைத் தியாகம் செய்கிறேனென்கிறாயே? உயிரைவிட கௌரவம் பெரிதல்லவா?’ என்றார். ‘அதைவிட மக்கள் நன்மை பெரிது’ என்றேன். மஹாராஜா இஷ்ட விரோதமாகச் சம்மதித்தார்.

“பிறகு தோரமானாவிடம் உபசேனாதிபதியாக அமர்ந்து கொள்ளை கொள்ளையாக ஸ்வர்ணங்களைக் குப்த ராஜ்யத்துக்கு அனுப்பினேன். அத்தகைய ஒரு போலி யுத்தத்துக்குப் போகையில்தான் வில்லவர் புரட்சி செய்வதாகக் கேள்விப்பட்டு மீண்டும் படையுடன் மலைவாசல் திரும்பி அடிலன் குடும்பத்தைக் காப்பாற்றிச் சென்றேன்.

“அந்த சமயத்திலும் அடிலனைத் தண்டிக்க முடியாமல் செய்து விட்டாள் சித்ராதேவி. அப்பொழுது நான் தக்ஷசீலம்

சென்று கொண்டிருந்தேன். திரும்பும் வழியில்தான் பல்தேவைச் சந்தித்தேன். சித்ராதேவியையும் அவன் வலையிலிருந்து காப்பாற்றினேன். இதற்குப் பிறகுதான் என் நிலைமை பெரிதும் சங்கடத்திற்குள்ளாகத் தொடங்கியது. சுவர்ணங்கள் ஏராளமாய்ப் போவதைக் கண்ட தோரமானா என் மேல் சந்தேகங் கொள்ள ஆரம்பித்தான். அந்த நாட்களில் தோரமானாவை மட்டுமல்ல, அவன் அந்தரங்க அதிகாரியும் பாரதத்தின் மிகச் சிறந்த உத்தமிகளுள் ஒருத்தியும் பெரிய அறிவாளியுமான காமினியையும் ராஜதந்திரப் போரில் நான் சமாளிக்க வேண்டியதாயிற்று!

“சென்ற சில வருஷங்களில் தோரமானா ஹிந்துக்களின் நாகரிகத்தைப் பெரிதும் கடைப்பிடிக்கலானான். காமினியின் உபதேசத்தால் நீதிஸ்தலங்கள் மூலம் விசாரணை நடத்தியே குற்றவாளிகளைத் தண்டித்தான். குப்த ராஜ்யத்துக்குச் சமதையான நீதி தோரமானாவின் ராஜாங்கத்திலும் நிலவவே ஜனங்களைப் புரட்சிக்குத் தூண்டுவது நடவாத காரியமாயிற்று. இத்தகைய மார்க்கங்களில் பழகிய தோரமானா நான் குப்த ராஜ்யத்துக்கு உதவுவதை அறிந்த பிறகு நேரிடையாக என்னைத் தூக்கில் போட முடியவில்லை. தவிர காமினியும் அதற்குப் பெரிய இடைஞ்சலாயிருந்தாள். ஆகவே, என் மேல் குற்றத்திற்கான ருசுக்களை ஜோடிக்க ஆரம்பித்தான். இதற்கிடையில் அடிலன் குப்த ராஜ்ய அதிதியானதையும், அடிலனை உபயோகித்து ஹூணர்களிடைப் பிளவுண்டாக்க சக்கரவர்த்தி ஏற்பாடு செய்வதையும் ஆனந்த தேவி ராகுலன் மூலம் தோரமானாவுக்கு எழுதியனுப்பியிருந்தாள். உடனே தோரமானா அடிலன் பிள்ளையின் மேல் ஒற்றர்களை ஏவி அவனைத் தொடர்ந்தான். இதைத் தவிர, மலைவாசலில் ஒரு சதிக் கூட்டத்தைப் பல்தேவைக் கொண்டு ஆரம்பித்து வைப்பதென்றும், நான் குப்த ராஜ்ய

அபிமானியாகையால் என்னையும் அதில் சேர்க்க ஏற்பாடு செய்வதென்றும் தீர்மானித்தான்.”

“ஒரு சந்தேகம்?” என்று குறுக்கே பாய்ந்தார் நரசிம்ம மஹாப்பிரபு.

“கேளுங்கள்” என்றான் அஜித் சந்திரன்.

“இதனால் தோரமானாவுக்கு என்ன லாபம்?”

“என்னை ஒழிக்கலாம். இது நிஜமான சதியல்ல. சதிக் கூட்டத்தை ஸ்தாபித்தால் என்னுடன் இன்னும் பத்து பேர் இதில் சேருவார்கள். உடனே நம்மைப் பிடித்து விசாரிக்கலாம். விசாரிக்கும் பொழுது பல்தேவ் தோரமானாவின் பக்கம் சாட்சி சொல்லுவான். உண்மையைத் தெரியப்படுத்தி ஹூண ராஜ்யத்துக்குச் சேவை செய்வதற்காகப் பல்தேவ் மன்னிக்கப்படுவான். நாமெல்லோரும் தூக்கில் தொங்கலாடுவோம்.”

இதைக் கேட்டதும் சதிகாரர்கள் மிக உக்கிரமாகப் பல்தேவைப் பார்த்தார்கள். அவன் முகத்தில் பிரேதக் களை சொட்டியது. ஓரிருவர் அவனை அறையவும் எழுந்தார்கள். உபாத்தியாயன் வேண்டாம் என்று சைகை செய்து அவர்களைத் தடுத்தான்.

“தோரமானாவின் ராஜதந்திரச் சதுரங்கத்தில் பல்தேவ் ஒரு சிறு காளான். அவனை அடித்து என்ன பயன்? உண்மையில் தோரமானா என்னைப் பெரிய விரோதியாகக் கருதினான். நான் போனால் குப்த ராஜ்யத்தின் வலக்கரம் உடைந்துவிடும் என்று நினைத்தான். மக்களுக்கு என்னிடமிருந்த அபிமானத்தை உத்தேசித்து என்னை நேராகத் தூக்குமேடைக்கு அனுப்பாமல் தூக்குமேடைக்கு அனுப்ப வேண்டிய ருசுக்களுக்கு ஏற்பாடு செய்தான். இதைப்பற்றி நீலதுர்க்கத்தில் காமினியிடம் அவன் லேசாகப் பிரஸ்தாபித்ததை நான் ஒட்டுக் கேட்டேன். தோரமானா இரண்டு

திட்டங்களை வகுத்தான். ஒன்று, திருடர்கள் நிரம்பிய பல்தேவின் படைக்குத் தலைவனாக்கி அவர்கள் கையால் என்னை ஒழித்துவிடுவது; இன்றேல் மலைவாசலில் இந்தப் போலிச் சதியைச் சிருஷ்டித்து என்னைச் சிக்கவைத்து ருசு உண்டாக்கிச் சட்டபூர்வமாக ஒழிப்பது. இரண்டிலும் தோர மானா தோல்வி அடைந்தான். மூலஸ்தானபுரத்தில் தோர மானாவின் யுக்தி பலிக்கவில்லை. ஆகவே, மலைவாசலைக் காக்கும் சாக்கில் என்னை இங்கே அனுப்பினான். இடையே பூரகுப்தன் செய்த ஒரு காரியமும் எனக்கு அனுகூல மாயிற்று. பூரகுப்தன் மூலஸ்தானபுரத்தைத் தாக்கும்படி அடிலனுக்கு உத்தரவிட்டான்."

"ஏன்?" என்று வினவினார் ரகுவீரர்.

"அடிலன் சக்கரவர்த்தியவர்கள் உபயோகித்த ஹூணர் களைப் பிரித்தால் தோரமானா பலஹீனப்படுவான். தோர மானா பலஹீனப்பட்டால் குப்த ராஜ்யத்தில் ஆனந்ததேவி கொண்டிருந்த லட்சியம் ஈடேறாது. ஸ்கந்த குப்தன் கை வலுத்துவிடுமல்லவா?"

"அப்படியா!"

"ஆம். அதனால்தான் அடிலன் ஏவப்பட்டு தோர மானாவால் மாண்டான். அடிலனை பூரகுப்தன் ஏவிய போது எழுத்து மூலம் உத்தரவு பிறப்பித்தான். அது குப்த ராஜ்யத்தைப் பெரிதும் காப்பாற்றியது. அந்த ஓலையைச் சக்கரவர்த்தி உடனே எனக்கு அனுப்பிவிட்டார்."

"எதற்காக?"

"தோரமானாவிடம் மித்ரபேதம் செய்வதற்காக."

"அதெப்படி முடியும்?"

"தோரமானா பூரகுப்தனைத் தன் நண்பனாக நினைத் துக் கொண்டிருக்கிறான். அந்தப் பூரகுப்தன்தான் தன்மீது

"குப்த சகோதரர்கள் ஒன்றுபட்டு விட்டதாகவும் அவ் விருவரும் தனக்கு விரோதியென்றும் தீர்மானிப்பான்."

"அதுதான் எங்கள் உத்தேசம். பூரகுப்தன் கையெழுத் திட்ட ஓலையை நானே தோரமானாவுக்கு அனுப்பினேன். தவிர என்மேல் குற்றமில்லாமலிருப்பதற்காக இங்கு வந்ததும் இந்தச் சதிக்கூட்டத்தைப் பற்றிய விவரங்களையும் எழுதி யனுப்பினேன். இந்தச் செய்தியைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமென்றும், நான் கவனித்துக் கொள்வதாகவும் என் கடிதத்தில் கூறியிருந்தேன். இதனால் தோரமானா தத்தளித் தான். சதியாலோசனைக் கூட்டத்திலேயே என்னைப் பிடித் தாலும் நான் தோரமானாவுக்கு எதிராக எதுவும் செய்ததாக இருக்காது. ஆகையால் என்னை எப்படி ஒழிப்பது? இத்துடன் நான் அடிலன் நண்பனான கிங்கலனுக்கு அடிலன் மரணத்தைப் பற்றியும் அடிலன் பிள்ளை தன்னந் தனியே தோரமானாவிடம் சிக்கியிருப்பதைப் பற்றியும் செய்தியனுப்பினேன். அவன் மலைவாசலைத் தாக்க ஆயத்த மானான். இதனால் தோரமானாவுக்கு இருவித இடைஞ்சல். ஒன்று, குப்த ராஜ்ய சகோதரர்கள் ஒன்றுபட்டு அங்கு உள் நாட்டுச் சண்டை ஒழிந்து ராஜ்யம் பலப்பட்டது. இரண்டு, மேற்கே கிங்கலன் ஆயத்தம். இரண்டு பெரிய எதிரி களுக்கிடையில் தோரமானா சிக்கிக் கொண்டான். இனி சில வருஷங்களுக்குத் தோரமானா குப்த எல்லைக்குள் காலெடுத்து வைக்க முடியாது. மாளவப் படையெடுப்பு குறைந்தபக்ஷம் ஐந்து வருஷங்களுக்கு முடியாது. அதுவரை கிங்கலனை மேற்கே சமாளித்தாக வேண்டும். ஆகவே, தோர மானா மாளவப் படையெடுப்பை நிறுத்தி மலைவாசலுக்கு வந்தான்..."

இந்த இடத்தில் சதிகாரர்கள் பிரமித்தார்கள். "தோர மானா இங்கா இருக்கிறான்?" என்றது ஒரு குரல்.

"ஆம்" என்றான் உபாத்தியாயன்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

உபாத்தியாயன் மேலும் சொன்னான்: "கிங்கலன் அபாயத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்த போது காமினி அவசரத்தில் ஒரு வார்த்தையைத் தவற விட்டாள். தோரமானாவைத் தேவையானால் எந்த நேரத்திலும் வரவழைக்கலாம் என்று கூறினாள். உடனே நான் யோசித்தேன். அப்படியானால் தோரமானா அருகில்தான் எங்கேயோ மறைவாய் இருக்கிறான் என்று ஊகித்துக் கொண்டேன். அவன் விலாசத்தை அறிய ஒரு தந்திரம் செய்தேன். இரண்டு அவசர ராஜாங்கக் கடிதங்களை எழுதித் தோரமானாவின் பழைய விலாசத்தைத் தீட்டி அவற்றைக் காமினியிடம் கொடுத்து உடனே அனுப்ப வேண்டுமென்றேன். அவற்றைக் கொடுத்துவிட்டு என் அறைக்குச் சென்று கதவைச் சாத்துவதாகப் பாசாங்கு செய்துவிட்டு மீண்டும் அவள் அறைச் சாளரத்துக்கருகில் சென்று நின்றேன். இரண்டுக்கும் வேறு விலாசம் எழுதினாள். நான் உடனே சித்ராவின் அறைக்குச் சென்று அவளை அழைத்து வந்து என் படுக்கையில் படுக்க வைத்து நெடுகப் போர்த்திவிட்டு நான் சித்ராவின் அறையில் தாளிட்டுப் படுத்தேன். ஒருக்களித்த கதவு மூலம் காமினி என் அறையைப் பார்த்து நான் உறங்குவதாக நினைத்துச் செல்ல வேண்டுமென்பது என் யோசனை. உத்தம ஸ்திரீயான காமினி இன்னொரு ஆடவன் படுத்திருக்கும் அறையில் நுழைந்து பார்க்க மாட்டாளென்பது எனக்குத் தெரியும். ஆனால், சித்ராவின் அறையில் அவள் நுழையலாம். அதனால்தான் அந்த அறையை உள்ளே தாளிட்டுக் கொண்டேன். காமினி திருப்தியுடன் திரும்பியதும் சாளரத்தின் வழியாக நான் தோட்டத்தில் குதித்து முகுந்தனுடன் மாளிகைக்கு வெளியே நடந்து சென்று காமினி அனுப்பும் வீரனுக்காகக் காத்திருந்தேன். அந்த வீரனை நானும் முகுந்தனும் ஒரு விநாடியில் சமாளித்துக் கொண்

டோம். அகஸ்மாத்தாக நான் அங்கு வந்ததுபோல் பாசாங்கு செய்து அவன் செல்லுமிடம் எது என்று கேட்டேன். நான் உபசேனாதிபதியாகையால் அவன் உண்மையை உளறினான். என் கடிதங்களையும் அவனிடமிருந்து வாங்கி விலாசத்தைப் பார்த்துவிட்டு அவனிடமே கடிதங்களைத் திருப்பியளித்து ஜாக்கிரதையாகக் கொண்டு போகும்படி சொன்னேன். தோரமானா மலைவாசலிலிருந்தே நம்மைக் கவனிப்பதை அன்றுதான் அறிந்தேன். திரும்ப மாளிகைக்குள் வந்த வழியே நுழைந்து சித்ராதேவியின் அறைக் கதவைத் திறந்து என் அறைக்கு வந்து சித்ராதேவியை அசையாமல் தூக்கி அவளறையில் படுக்க வைத்தேன். நானும் நிம்மதியாக உறங்கினேன்.

"தோரமானாவின் இருப்பிடத்தை நான் அறிந்த பொழுதுதான் அடிலன் மகன் தோரமானாவின் மேற்பார்வையிலிருந்து தப்பிவிட்டான். ஆகவே, அவனைக் கண்டுபிடித்து ஒழிக்க முனைந்தான் தோரமானா. அந்த விலாசத்தைக் கண்டுபிடிக்கும்படி பல்தேவுக்கு உத்தரவிட்டான். சித்ராவுக்கு வந்த கடிதத்தில் விலாசமிருந்தது. அன்று அவள் இங்கு அந்த விலாசத்தைப் படித்தவுடன் வீரனான முகுந்தனை ஒரு கடிதத்துடன் சித்ராவின் தம்பியிடம் அனுப்பி அவனைத் தப்பி, குப்த ராஜ்யம் செல்லும்படி கூறினேன்" என்றான் உபாத்தியாயன்.

"இப்பொழுது என் தம்பி எங்கே?" என்றாள் சித்ரா.

"குப்த ராஜ்யத்தில் சௌக்கியமாயிருக்கிறான்" என்று கூறினான் உபாத்தியாயன்.

"இப்பொழுது பல்தேவ் எங்கே ஓடினான்?" என்று ராகுலன் கேட்டான்.

"காமினியிடம் அல்லது தோரமானாவிடம். சதியின் குட்டு வெளிப்பட்டுவிட்டதென்றும், ஆகையால் நம்ம

உடனே கைது செய்ய வேண்டுமென்றும் சிபாரிசு செய்வதற்காக" என்று உபாத்தியாயன் விளக்கினான்.

"அடப்பாவி!" என்றான் ராகுலன்.

"இதில் ராகுலன் பங்கு என்ன?" என்றனர் இரண்டு வில்லவர்.

"ஒரு பங்குமில்லை. பல்தேவின் வார்த்தையைக் கேட்டு இந்த சதி மூலம் தோரமானாவை ஒழிக்கலாம் என்றும், அடிலன் மகனைப் பழையபடி இங்கு தலைவனாக்கி விட்டால் சித்ராதேவியை மணக்கலாமென்றும் நினைத்தான். ஆகையால், சதியில் சேர்ந்தான். அடிலன் மகளுக்காக இவன் சதி செய்ய இஷ்டப்படுவதை அறிந்த பூரகுப்தன் இங்குள்ள உண்மை நிலையை அறியாமல் தம்முடைய பிரதிநிதியாக மலைவாசலில் நியமிக்க ஒப்புக்கொண்டார். ஆனால், ராகுலன் ராஜப் பிரதிநிதி உத்தியோகமோ மலைவாசல் விடுபட்டால்தான் சாத்தியம் என்பதை பூரகுப்தர் உணர்ந்திருந்தபடியால் இந்த உத்தியோகங்களை அளிப்பதை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. பூரகுப்தருக்கே சதியின் உண்மை மர்மம் தெரியாது. அப்படியிருக்க ராகுலன் எப்படி உணர்ந்திருக்க முடியும்" என்று உபாத்தியாயன் பதில் சொல்லிவிட்டு, "இதுதான் மலைவாசலின் ஆறு வருஷ சரித்திரம். இப்பொழுதும் தோரமானா கிங்கலனுக்கும் குப்தர்களுக்கும் இடையில் அகப்பட்டிருக்கிறான். சதியும் கலைந்து விட்டது. ஆகவே, இனி இங்கிருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் உங்களுக்கு ஆபத்து. தோரமானா உங்களைப் பிடிக்கும் முன்பு மலைவாசல் பிராந்தியத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்" என்றான் ஆசனத்திலிருந்து எழுந்துகொண்டே.

"எங்களுக்கு என்ன பயம்? இன்னும் பூரகுப்தர் உண்மையில் சக்கரவர்த்தியுடன் சேரவில்லையே?" என்றார் ரகுவீரர்.

உபாத்தியாயன் சொன்ன பதிலைக் கேட்டு இரு பிரபுக்களும் துள்ளி எழுந்தார்கள். "பூரகுப்தருக்குச் சென்ற வாரம் யுவராஜ்ய பட்டாபிஷேகம் ஆகிவிட்டது. பாடலிபுத்ரத்து அரண்மனையில் சக்கரவர்த்தியே நடத்தி வைத்தார். இனி குப்த ராஜ்யம் ஒன்றுபட்டு விட்டது" என்றான் உபாத்தியாயன். பிரபுக்கள் நம்ப முடியாமல் பார்ப்பதைக் கண்டதும், "இதோ ருசு, சக்கரவர்த்தியே கடிதம் எழுதியிருக்கிறார்" என்று கச்சையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினான். அதைப் படித்த பிரபுக்கள் இருவரும் ஆச்சரியத்தால் மெய் மறந்தார்கள்.

இவற்றையெல்லாம் கேட்டுப் பிரமித்துப் போன சித்ராதேவி, "உபாத்தியாயரே! நீங்கள் உண்மையில் யார்? சக்கரவர்த்தி ஒரு உபசேனாதிபதிக்கு ரகசியக் கடிதங்கள் எழுதுவானேன்?" என்று கேட்டாள்.

இந்தக் கேள்விக்கு ரகுவீரர் பதில் சொன்னார்: "அஜித் சந்திரன் மஹாப்பிரபு குப்த ராஜ்யத்தின் பிரதம சேனாதிபதி" என்று.

"சந்தேகமிருந்தால் இதைப் படித்துப் பார்" என்று மடியிலிருந்த பட்டுச் சீலையை எடுத்துச் சித்ராதேவியிடம் நீட்டினான் உபாத்தியாயன்.

58. ஆசை வெட்கமறியாது

அந்தச் சின்னஞ்சிறு பட்டுச் சீலையை சித்ராதேவி
பிரித்துப் படிக்கத் துவங்கியபோது மற்ற சதிகாரர்களும்
ஆசனங்களை விட்டு எழுந்து அவளைச் சுற்றிக்கொண்டு
அதில் தீட்டப்பட்டிருந்த விஷயம் என்னவென்று பார்க்க
லாயினர். அதைப் பார்த்ததும்தான் ரகுவீரர் திடீரென்று
உபாத்தியாயனிடம் மிக மரியாதையுடனும் பயபக்தியுடனும்
நடந்து கொண்டதன் மர்மம் அனைவருக்கும் புரிந்தது.
பட்டுச்சீலையில் எழுதியிருந்த உத்தரவில் சக்கரவர்த்தி
ஸ்கந்தகுப்தன், அஜித் சந்திரன் குப்த ராஜ்யத்துக்குச்
செய்துள்ள அரிய சேவைக்காக அவரைக் குப்த ராஜ்யத்தின்
பிரதம சேனாதிபதியாக நியமித்திருந்ததன்றி, மலைவாசலி
லுள்ள குப்த ராஜ்ய விசுவாசமுள்ள பிரஜைகள் அஜித்
ந்திரன் கட்டளைப்படி நடக்க வேண்டுமென்றும் குறிப்பிட்
டிருந்தார். அஜித் சந்திரன் மஹாப் பிரபுவின் உத்தரவை
றும் யாரும், சக்கரவர்த்தியின் உத்தரவை மீறுபவர்களா
ார்களென்று அதில் தெளிவாகக் கூறப்பட்டிருந்தது.

உத்தரவைப் படித்த அனைவரும் மிகுந்த பயத்துடனும்
தமிஞ்சிய மரியாதையுடனும் அஜித் சந்திரனை நோக்கி
ார்கள். வில்லவர் இருவரால் அழுத்தி உட்கார வைக்கப்
ட்டிருந்த பல்தேவ் மட்டும் திமிறிக்கொண்டே, "இது சக்கர
ர்த்தியின் உத்தரவு என்று எப்படித் தெரியும்?" என்றான்.
நவீர மஹாப்பிரபு மிக உஷ்ணமாகப் பல்தேவைப்
ர்த்து, "அது சக்கரவர்த்தியின் கையெழுத்து என்பது
ாக்குத் தெரியும். கீழே போட்டிருப்பது மட்டுமல்ல அவர்
கயெழுத்து. மேலே எழுதப்பட்டிருக்கும் உத்தரவும் அவர்
ாந்தக் கையால் எழுதப்பட்டிருக்கிறது. உத்தரவை மிக

மிக ரகசியமாக வைக்க வேண்டிய சமயங்களில்தான் சக்கரவர்த்தி சொந்தக் கையெழுத்தில் எழுதுவார்" என்றார்.

மற்றவர்கள் சந்தேகத்தை அடக்க ரகுவீரர் மன்னரின் கையெழுத்தை விளக்கினாலும் அவர் மனத்திலிருந்து ஒரு சந்தேகம் மட்டும் விளங்கவில்லை. ஆகவே, மிகப் பணிவான குரலில் அஜித் சந்திரனைப் பார்த்துக் கேட்டார். "மஹாப் பிரபு! இதில் ஒரு விஷயம் மட்டும் எனக்கு விளங்கவில்லை. இந்தச் சதியில் சேர எங்களைப் பூரகுப்தன் ஏன் அனுப்பினார்?"

"பூரகுப்தருக்குச் சென்ற வாரந்தான் யுவராஜ்ய பட்டாபிஷேகம் ஆகியிருக்கிறதென்பதையும், அதன் விளைவாகக் குப்த ராஜ்ய உள்நாட்டுப் பிளவு நீங்கியதென்பதையும் தாங்கள் உணரவேண்டும். அதற்கு முன்பு தோரமானாவும் பூரகுப்தனும் ஒன்று. பரஸ்பரம் உதவி செய்வது அவர்கள் ஒப்பந்தம். ஆனந்ததேவியே அந்த ஒப்பந்தத்தைச் செய்து முடித்திருக்கிறாள். இது நிஜமான சதிபோல் தெரிய வேண்டுமானால் குப்த ராஜ்யத்தைச் சேர்ந்த சிலரும் அதில் சேர வேண்டும். இல்லாவிட்டால் நான் இந்தச் சதியைப் பற்றிச் சந்தேகம் கொள்ள நேரிடும். அந்தச் சந்தேகம் இல்லாதிருக்கவே தோரமானா பூரகுப்தர் உதவியை நாடியது உங்களுக்குத் தெரிந்திருக்காது. குப்த ராஜ்ய க்ஷேமத்துக்காகவும் நலனுக்காவும் ஒரு சதி மலைவாசலில் நடப்பதாகவும் அதில் சேருமாறும் உங்களுக்குப் பூரகுப்தன் உத்தரவிட்டிருக்க வேண்டும்" என்றான் உபாத்தியாயன்.

ரகுவீரரும் நரஸிம்ம மஹாப்பிரபுவும் இந்த பதிலைக் கேட்டு ஆச்சரியத்தால் ஒருகணம் ஸ்தம்பித்துப் போனார்கள். உபாத்தியாயன் சொன்ன மாதிரியே தத்ரூபமாக உத்தரவு பிறப்பித்திருந்தான் பூரகுப்தன். எங்கோ பிணைக்கப்படும் ராஜீய முடிச்சுகளை என்ன சாமர்த்தியமாக உபாத்தியாயன்

அவிழ்க்கிறான் என்பதை நினைத்த அவ்விருவரும் அவன் புத்திக்கூர்மையை வியந்தார்கள். அபிப்பிராயத்தை நரஸிம்ம மஹாப்பிரபு பகிரங்கமாகவே சொன்னார்: "உபாத்தி யாயரே! உம்மைப்போல ராஜதந்திரிகளும் ராஜவிசுவாசி களும் யுகத்துக்கு ஒரு முறைதான் பிறப்பார்கள்" என்றார்.

உபாத்தியாயன் அதற்குமேல் யாரையும் பேசவிடாமல், "இனிமேல் காலதாமதம் செய்வதில் பயனில்லை. சதி குலைந்துவிட்டதால் எந்த நிமிஷமும் தோரமானா தமது படைகளை அனுப்பி நம்மைக் கைது செய்வான். ஆகவே பயனற்ற இந்தச் சதியிலிருந்து விலகும்படியும் உடனே அவரவர் இடம் செல்லும்படியும் சக்கரவர்த்தியின் பெயரால் நான் ஆணையிடுகிறேன்" என்று உத்தியோக முறையில் அறிவித்த உபாத்தியாயன் யார் யார் எப்படித் தப்ப வேண்டுமென்றும் கூறலானான்.

"பிரபுக்களே! நீங்களிருவரும் குப்த ராஜ்யம் செல்ல என்னிடமிருக்கும் ஒரு முத்திரை மோதிரத்தைத் தருகிறேன். அந்த மோதிரம் தோரமானாவால் ஆனந்ததேவிக்கு அளிக்கப்பட்டது. அதைக் காட்டும் யாரும் எந்தத் திசையிலும் பயமின்றிச் செல்லலாம். வில்லவர்களைப் பற்றி எந்த விவரத்தையும் நான் தோரமானாவுக்கு அறிவிக்கவில்லை. ஆகவே, அவர்கள் புருஷபுரத்திலுள்ள தங்கள் வீடுகளுக்குச் செல்லலாம். ராகுலா! இனிமேல் நீ மலைவாசலிலிருந்தால் தோரமானா உன்னை ஒழித்துவிடுவான். மலைவாசலைத் தாண்டி கிங்கலனிருக்குமிடம் செல்ல உனக்கு ஓலை தருகிறேன். கணவாய்க்கருகிலுள்ள எனது ஒற்றர்கள் நீ தப்பிச் செல்ல உதவி புரிவார்கள்" என்றான்.

"சித்ராதேவி என்னுடன் வருவாளா? அவளில்லாமல் இங்கிருந்து அசைய மாட்டேன்" என்றான் ராகுலன்.

"அப்படியானால் நீ உன் நண்பனுக்குத் துணையாக இரு" என்றான் உபாத்தியாயன்.

"என் நண்பனுக்கா."

"ஆம். பல்தேவுக்கு."

"பல்தேவை என்ன செய்யப் போகிறீர்கள்?"

"கொல்லப் போகிறோம்" என்று எழுந்தன பல குரல்கள்.

ராகுலன் நடுங்கினான். "இப்பொழுது என்ன செய்வ தாக உத்தேசம்?" என்று உபாத்தியாயன் கேட்டான். ராகுல னைப் பார்த்த மற்றவர்களுக்குச் சந்தேகமே ஏற்படவில்லை. மனைவி வேண்டாம்! மரணமில்லாமலிருந்தால் போதும் என்ற எண்ணமும் அவன் முகத்தில் தெளிவாக எழுதி ஒட்டியிருந்தது. ராகுலன் விஷயம் அப்படி ஒரு வழியாக முடியவே உபாத்தியாயன் பல்தேவை உற்றுநோக்கி, "பல்தேவ்! இத்தனை பேர் கழுத்துக்குக் கயிறு தயாரித்த உனக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்!" என்று கேட்டான்.

பல்தேவ் சுற்றிலும் கண்களை ஓட்டினான். சதிகாரர் ஒவ்வொருவர் முகத்திலும் கொலை செய்யும் ஆர்வம் தெளிவாகத் தெரிந்தது. அவன் முகத்திலிருந்த கிலி எல்லை மீறியது. வலையிலகப்பட்ட மிருகம்போல் மிரள மிரள விழித்தான். "நாம் தோரமானாவிடம் சிக்கியிருந்தால் நமக்கு என்ன தண்டனை கிடைத்திருக்குமோ அந்தத் தண்டனை யைத்தான் இவனுக்கும் விதிக்க வேண்டும்" என்று ரகுவீரர் யோசனை சொன்னார். "அதுதான் சரி" என்று ஆமோதித் தனர் மற்றவர்.

உபாத்தியாயன் உத்தேசம் மட்டும் வேறாயிருந்தது.

"பல்தேவ் செய்திருக்கும் குற்றத்துக்கு அவனைத் தூக்கில் போடுவதுதான் நியாயம். ஆனால் அப்படிச் செய்ய வேண்டிய அவசியமில்லையென நான் நினைக்கிறேன். இவன் ஏற்கெனவே செய்துள்ள தீங்கைவிட அதிகமாக

இனிமேல் செய்ய முடியாது. ஆகையால் நாம் அனைவரும் தப்பிச் செல்லும்வரை இவனைக் கட்டி ஓர் அறையில் போட்டு வைக்கலாம்" என்று கூறினான் உபாத்தியாயன்.

"அவனை ஏன் உயிருடன் வைக்க ஆசைப்படுகிறீர்கள்?" என்று நரஸிம்ம மஹாப்பிரபு வினவினார்.

"எப்பேர்ப்பட்ட அயோக்கியனாயிருந்தாலும் பல்தேவ் ஓர் உத்தமியின் கணவன். அவள் மாங்கல்யம் அறுபடுவதை நான் விரும்பவில்லை. காமினியை உத்தேசித்து இவனை மன்னிக்கிறேன். இவனைக் கட்டுங்கள்" என்றான் உபாத்தியாயன். மறுவிநாடி கயிறுகள் கொண்டு வரப்பட்டன. மஞ்சத்தோடு மஞ்சமாகப் பல்தேவ் பிணைக்கப்பட்டதும், "இப்படியே தூக்கிக்கொண்டு போய் இவனை ஓர் அறையில் போட்டு வையுங்கள். நான் மாளிகை திரும்பாததிலிருந்து காமினி விஷயத்தை ஊகித்துக் கொண்டு வீரர்களை அனுப்பி பல்தேவை விடுவிப்பாள்" என்று உபாத்தியாயன் தெரிவித்தான்.

"நாம் இவனைக் கொல்லமாட்டோம் என்று காமினிக்கு எப்படித் தெரியும்?" என்று வினவினார் ரகுவீரர்.

"நீ என் புருஷன் என்பதற்காக உபாத்தியாயர் உனக்கு எக்கெடுதலும் விளைவிக்க மாட்டார் என்று காமினியே பல்தேவிடம் கூறியிருக்கிறாள். வேண்டுமானால் கேளுங்கள் அவனை" என்று உபாத்தியாயன் பதில் சொன்னான்.

"அதையும் நீ ஒட்டுக் கேட்டாயா?" என்று பல்தேவ் இரைந்தான்.

பதிலுக்கு உபாத்தியாயன் சிரித்தான். வில்லவர் இருவரும் அவன் ஆணைப்படி பல்தேவை ஓர் அறையில் அடைத்தார்கள். உபாத்தியாயன் மஞ்சத்தில் உட்கார்ந்து ராகுலனுக்குத் தேவையான ஓலையை எழுதிக் கொடுத்து

விட்டு, குப்த ராஜ்யப் பிரபுக்களுக்கும் தன் விரலிலிருந்த தோரமானாவின் முத்திரை மோதிரத்தை கழற்றிக் கொடுத்தான். வில்லவரையும் செல்ல உத்தரவிட்டான். சற்று நேரத்தில் கூடம் காலியானதும் உபாத்தியாயன் சித்ராதேவிக்காகச் சுற்றுமுற்றும் பார்த்தான். சித்ரா சாளரத்துக்கருகில் நின்று வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள்.

உபாத்தியாயனும் எழுந்து அவளை மெள்ள அணுகி அவள் அழகிய தோளின்மேல் கையை வைத்து, "என்ன பார்க்கிறாய் சித்ரா?" என்றான்.

"மலையுச்சியைப் பார்க்கிறேன்."

"அந்த மலை உச்சி இந்த மடுவினிடம் வருமா என்று பார்க்கிறாயா?"

இந்தச் சம்பாஷணையும், தூரத்தில் சலசலப்புடன் சந்திர வெளிச்சத்தில் பளிச்சிட்டு வெள்ளிக் கம்பிபோல் ஓடிவந்து கொண்டிருந்த மலையருவியின் ஒலியும் அவளைப் பழைய காலத்துக்கு இழுத்துச் சென்றன.

அன்று அவள் மலைச் சிகரமாயிருந்தாள். உபாத்தியாயன் மடுவாயிருந்தான். 'அந்தச் சிகரம் இங்கு வருமா?' என்று அவள் அன்று வினவினாள். இன்று அவன் மலைச் சிகரம். குப்த ராஜ்ய சேனாதிபதி. தானோ பதவி ஏதுமற்ற அனாதை.

அவள் கருத்தில் ஓடிக்கொண்டிருந்த எண்ணங்களை ஊகித்த உபாத்தியாயன், "சித்ரா! அந்தஸ்து மறையக் கூடியது, அன்பு மாறாதது. ஆகையால் ஒன்றை நினைத்து நாம் ஒன்றைக் குழப்பிக்கொள்ள வேண்டாம். புறப்படு, குப்த ராஜ்யம் செல்வோம். சகல ஆயுதங்களுடன் முகுந்தன் சண்பகத் தோட்டத்தில் காத்திருக்கிறான்."

சித்ரா நன்றி ததும்பும் கண்களுடன் அவனைப் பார்த்து, "என் தம்பி...!" என்று ஏதோ சொல்ல வாயெடுத்தாள்.

"பாடலிபுத்ரத்தில் நம் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்" என்று உபாத்தியாயன் சொல்லிக் கொண்டே அவள் கையைத் தன் கையில் கோர்த்து அணைத்துக் கொண்டு புது வீட்டிலிருந்து புறப்பட்டான்.

அஜித் சந்திரன் சித்ராதேவியுடன் பாடலிபுத்ரத்தில் நுழைந்தபோது பட்டணம் பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. கோட்டை வாசலிலேயே பிரதம சேனாதிபதியின் வரவை அறிவிக்கும் தாரைகள் முழங்கின. ஆயுதந் தரித்த வீரர்கள் கோஷிக்க, வீதிகளில் மாடியிலிருந்து மாதர் பூமலர் தூவ, ஊர்வலமாகச் சேனாதிபதி அழைத்துச் செல்லப்பட்டார். இந்த வரவேற்பைக் கண்ட சித்ரா ஆச்சரியத்தால் மெய் மறந்து கனவுலகத்தில் சஞ்சரித்துக் கொண்டே வந்தாள். அஜித் சந்திரன், சக்கரவர்த்தியின் அரண்மனையை அடைந்ததும் அவனுக்கும் சித்ராதேவிக்கும் இரு பெண்கள் மங்கள ஆரத்தி எடுத்தார்கள். நேராக அஜித் சந்திரன் சித்ராவுடன் சக்கரவர்த்தியின் அறைக்குச் சென்றான்.

சக்கரவர்த்தியின் அறை மிகுந்த கோலாகலமாய் இருந்தது. அன்று ஆனந்ததேவியும் பூரகுப்தனுங்கூட அரசர் பக்கத்தில் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனந்த தேவியும் அஜித் சந்திரனை மகிழ்ச்சியுடன் வரவேற்றாள். அவள் பின்னால் சற்று ஒதுங்கி நின்ற சித்ராதேவியை சக்கரவர்த்தியவர்கள் நெடுநேரம் பார்த்துவிட்டுப் புன்முறுவலுடன், "சித்ரா! உன் அழகினால் எங்கள் சேனாதிபதியையே மலைவாசலுக்கு இழுத்துவிட்டாயே!" என்றார்.

சித்ரா வெட்கத்தால் தலை குனிந்தாள். பிறகு ஸ்கந்த குப்தன் அஜித் சந்திரனைப் பார்த்து, "அஜித்! என் தம்பி திருந்தியதாலும் கிங்கலனை நீ தூண்டிவிட்டதாலும் தோரமானாவுக்கு ஸிந்து நதிப் பிராந்தியத்தில் தன்னைத் திடப்படுத்திக் கொள்வதற்கே வேலை சரியாய் இருக்கும். அடுத்த

ஐந்தாறு வருஷ காலத்திற்குக் குப்த ராஜ்யத்தில் நிம்மதி நிலவும். குப்த ராஜ்யம் உனக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது" என்றான்.

"ஐந்து வருஷமும் வேலையிருக்கிறது. மகாராஜா, அதற்குள் சைன்னியங்களைத் திரட்டி ராஜ்யத்தை வலுப்படுத்த வேண்டும்" என்றான் அஜித் சந்திரன்.

"அது உன் பொறுப்பு. அதற்கு முன்னால் இன்னொரு பொறுப்பிருக்கிறது."

"என்ன மகாராஜா?"

"இந்த அழகியை இனி நீ தனியாக விட்டிருக்கக் கூடாது" என்றார் சக்கரவர்த்தி.

"அவளை மணக்க அவள் தம்பியின் அனுமதி வேண்டும்" என்றான் உபாத்தியாயன் விஷமமாக.

"தம்பி ராஜாங்க விருந்தினர் மாளிகையிலிருக்கிறார். நீங்கள் வந்ததும் காக்க வைக்கக் கூடாது என்பதற்காகத் திருமணத்துக்கு மன்னரே அவரிடமிருந்து வாக்குறுதி பெற்று விட்டார்" என்றாள் தாஸி சிரித்துக் கொண்டே.
"திருமணத்தை நடத்திவிட்டுத்தான் நான் அயோத்தி செல்ல வேண்டும்" என்றான் ஸ்கந்தகுப்தன்.

இந்தப் பேட்டி முடிந்த ஒரு வாரம் கழித்து ஒரு நாளிரவு பாடலிபுத்ரத்தின் விசாலமான அறை ஒன்றின் சாளரத்தருகில் நின்று அந்நகரத்தின் அழகைப் பருகிக் கொண்டிருந்தாள் சித்ராதேவி. தூரத்தே ஜொலித்த தீபங்கள் காற்றில் கண்களைச் சிமிட்டி அவளைப் பரிகசித்துக் கொண்டிருந்தன. அப்பொழுதிருந்த ஆழ்ந்த சிந்தனையில் அறைக் கதவைத் திறந்துகொண்டு உபாத்தியாயன் வந்ததையோ அவனுக்குப் பின்னால் வந்த தாஸி பால் கிண்ணத்தை ஒரு பக்கமாக வைத்துவிட்டுக் கதவோர

மிருந்த சுவர்ண தீபத்துக்காக நகர்ந்ததையோ சித்ரா கவனிக்கவில்லை.

உபாத்தியாயன் கரம் மேலே பட்ட பின்புதான் தனக்கு வெகு அருகில் கணவன் நிற்பதை உணர்ந்தாள் அந்தக் கட்டழகி. சொந்தமாகத் தொடக்கூடிய உரிமை பெற்ற அவன் கர ஸ்பரிசத்தில் அவள் சற்று நேரம் மெய்மறந் திருந்து பிறகு முகத்தில் மோகனப் பார்வை பொலிய செம்பவள உதடுகள் சற்றே விரிய, "நீங்கள் சேனாதிபதி யாயிற்றே! உங்களை எப்படி அழைப்பது? மஹாப்பிரபு என்றா? சேனாதிபதி என்றா?" என விஷமச் சிரிப்புடன் வினவினாள்.

"உனக்கு நான் சேனாதிபதியுமல்ல, மஹாப்பிரபுவுமல்ல. என்றும் அடிமையான உபாத்தியாயன்தான்" என்றான் அஜித் சந்திரன்.

"உபாத்தியாயரே! இப்பொழுது என்ன பாடம் சொல்லிக் கொடுக்கப் போகிறீர்கள்" என்று கேட்டுச் சித்ரா வெட்கச் சிரிப்பு ஒன்று சிரித்தாள்.

உபாத்தியாயன் பதில் சொல்லவில்லை. அவன் கரங்கள் அவளைச் சுற்றி வளைந்து சென்றன. ஆசை வெட்கத்தை வெட்டிவிடவே, தாஸியொருத்தி அறைக் கோடியிலிருப்பது கூட அவ்விருவருக்கும் நினைவிலில்லை. நிலை தடுமாறி விட்ட அவ்விருவர் உல்லாசத்தைக் கண்ட தாஸி வெட்கந் தாளாமல் கொழுந்துவிட்டு நின்ற விளக்கின் திரியை லேசாக இழுத்து விளக்கை அணைத்தாள். அவள் செல்லு முன்பாகவே இருட்டில் இழைந்த இரு இதழ்களின் மெல்லிய சப்தம் தாஸியைக்கூடச் சற்று நிலை தடுமாற வைத்தது.

முற்றும்